

# அண்ணா
# ஒரு சமூகக் குறியீடு

முனைவர் மு.ஜீவா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# அண்ணா ஒரு சமூகக் குறியீடு

முனைவர் மு. ஜீவா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

பேரறிஞர் அண்ணா அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : தமிழக அரசு)

வரிசை எண் : 3

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Aṇṇā oru camūkak kuṟiyīṭu |
| Author | : | Dr. M. Jeeva<br>Lecturer, Dept. of Tamil<br>Bharathiyar University<br>Coimbatore |
| General Editor | : | Prof. Dr. K.A. Gunasekaran<br>Director<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 715 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2011 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | vi + 82 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 40/- (Rupees Forty Only) |
| Printed by | : | Abi Offset<br>Offset Print House<br>Old No. 26, New No. 57, Thayar Sahib Street,<br>Mount Road, Chennai - 600 002. |
| Subject | : | Sociology |

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

அண்ணா ஒரு சமூகக் குறியீடு எனும் இந்நூல் முனைவர் மு. ஜீவா அவர்களால் பல ஆதாரங்களைக் கொண்டு சிறப்புற எழுதப் பட்டுள்ளது. அண்ணாவின் கருத்துகளுக்கு மேலைநாட்டுத் தலைவர்கள், அவர்தம் கருத்துகள், மேலைநாட்டறிஞர்கள் எழுதியுள்ள நூல்கள் எனப் பல சான்றாதாரங்களைக் காட்டிப் பக்கங்கள்தோறும் அண்ணாவின் கருத்துகளைப் பல கோணங்களில் காட்டி எழுதப் பட்டுள்ள இந்த நூல் ஆய்வாளர்களிடையே அண்ணாவைப்பெரிதும் அறிந்துகொள்ளத் துணை நிற்கும்.

பின்வரும் எடுத்துக்காட்டுக்களை ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் எனும் நோக்கில் ஒரு சில பக்கங்களிலிருந்து காட்டியுள்ளமை இங்கு ஆசிரியரின் கடின உழைப்பைப் புரிந்துகொள்ள உதவும்.

> பிற நாட்டுக் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளைத் தெரிந்துகொண்டு செயல்படுத்துவதில் அண்ணா லெனினைப் போலவே செயல்பட்டார். புத்தக சாலைகளின் மேல் பெரும் பிரியத்தை அண்ணா லெனின் போலவே வைத்திருந்தார். (பக்.27)

> யார் யார் சனாதனக் கோட்டைகளைத் தகர்த்தெறிய வேண்டுமென்று கருதுகிறார்களோ, யார் மக்கள் உள்ளத்தில் படிந்துள்ள மாசுகளைத் துடைத்துச் சீர்திருத்த வேண்டுமென்று எண்ணுகிறார்களோ, யார் யார் மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்க வேண்டுமென்று முனைகிறார்களோ அவர்களெல்லாம் திராவிடர்கள் (ப.35)

> தமிழர்கள் தாங்கள் தனி இனம் என்பதையே மறந்து இந்துக்களில் ஒரு பகுதி என எண்ணத் தன்மானத்தையும், தன்னாசையும் இழந்தனர் (ப.49)

தோழமை ஒருவரை ஒருவர் கண்டவுடன் சிரமமின்றி முகமலர்ச்சி ஏற்படவேண்டும். பயம் கருதியல்ல— அர்த்தமற்றதும் அல்ல. கண்டதும் களிப்பு, நம்மைப் போல் ஒருவன் என்ற நினைப்பிலிருந்து அந்தக் களிப்பு மலர வேண்டும். இந்தத் தோழமைதான் சமத்துவத்தின் கனி, சமதர்ம மணம்.

ஒரு நாட்டின் கலை, பண்பாடு, நாகரீகம், அறநெறி அறிவாற்றல் முதலிய அனைத்தும் தாய்மொழி சார்ந்தே வளர்கின்றது. நாட்டின் மேம்பாடும் சிந்தனை வளமும் அந்நாட்டின் இலக்கியங்களின் வழி வெளிப்படுகிறது. (ப.62–63)

அரசியல், நாடு, மொழி, இனம், விடுதலை, எதிர்காலத் தமிழன் எனப் பல நிலைகளில் அண்ணா சிந்தித்த கருத்துகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. நூலாசிரியருக்கு என் பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **இந்து சமய அறநிலையம் மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு சுப. சண்முகநாதன்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. து.நா. இராமநாதன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த நிறுவன உதவிப்பேராசிரியர் முனைவர் ஆ. மணவழகன் அவர்களுக்கும் இச்சொற்பொழிவு மற்றும் நூல் தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அபி ஆப்செட் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

## ஆசிரியரைப் பற்றி...



முனைவர் மு. ஜீவா அவர்கள் 1982ஆம் ஆண்டிலிருந்தே தமிழ்த்துறை சார்ந்த நாடகப் பயிற்சிகளைப் பெறும் வாய்ப்பிற்குள்ளானவர். அவர் இயக்கிய நாடகங்கள் கால, வெளிசார்ந்த நிலைப்பாடுகளைப் புத்தாக்க முயற்சிக்குள்ளாக்கி இருகின்றன. அரங்கில் பெண்ணியமும், தலித்தியமும் இவரால் வீரியத்தோடு வெளிக் கொண்டுவரப்படுகின்றது. பாரதியார் பல்கலைக கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளரான இவர் நாடகம், சிறுகதை, கவிதை போன்றவற்றைத் தமிழ் உலகிற்குப் படைத்தளிக்கும் பெண் படைப்பாளியாவார். படைப்புலகில் மாற்று அறிவார்த்தச் சிந்தனைகளோடும், முற்போக்கு எண்ணங்களோடும் செயல்படக் கூடிய சிறந்த படைப்பாளியாகவும், ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் தரும் சிறந்த ஆய்வாளராகவும் விளங்குகிறார்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | | 1 |
| 1. | அண்ணாவின் மொழி நேர்த்தி | 7 |
| 2. | அண்ணாவின் அறிவார்த்தம் | 14 |
| 3. | தமிழின உணர்வில் அண்ணா | 33 |
| 4. | உலக அரசியலின் பின்னணியில் அண்ணா | 37 |
| 5 | போராட்டப் பின்னணியில் அண்ணா | 56 |
| 6. | அறிஞர் அண்ணாவின் படைப்புகள் | 74 |
| துணைநூற்பட்டியல் | | 78 |
| அடிக்குறிப்புகள் | | 81 |

# முன்னுரை

நான் ஒரு வயதுக் குழந்தையாக இருக்கின்ற காலத்தில் அறிஞர் அண்ணா இறந்துவிட்டார். ஏழை, எளிய மக்கள், அவரைக் காண ஆசைப்பட்டவர்கள் அனைவருக்காகவும் இலவச இரயில் விடப்பட்டிருந்ததாக அப்பா சொல்வார். அதிக தூரப் பயணம் மேற்கொண்டும் அண்ணாவின் முகத்தை அருகே சென்று காண முடியவில்லை என்று ஆதங்கப்பட்டபவர்கள் எத்தனையோ பேர்!

விடுதலைப் போராட்டக் காலங்களில் நமது நாட்டுக்காக உழைத்தவர்கள் பலர் இருக்கின்றனர். காந்தி, நேரு போன்ற வகை மாதிரிகளான தலைவர்கள் பேசப்பட்டுக் கொண்டிருந்தாலும் மாற்றுக் கருத்துக்களோடு சமுதாயத்தைத் திசைதிருப்ப முயன்றவர்கள் உலக அளவில் சாக்ரடிஸ், புருனோ, கோபர்நிகஸ், கலிலியோ, ஆப்ரகாம் லிங்கன், மார்ட்டின் லூதர் கிங், ஸ்பார்ட்டகஸ், காரல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஃபிடெல் காஸ்ட்ரோ, செகுவாரா, ஸ்ரீநாராயண குரு, நெல்சன் மண்டேலா, ஃபிரடெரிக் டக்ளஸ், இ.எம்.எஸ்.(சங்கரன் நம்பூதிரி), இராமலிங்க வள்ளலார், அம்பேத்கர், பெரியார், அண்ணா என்கின்ற நீண்ட பட்டியலில் வலம் வரும் இவர்கள், மந்தமாய்க் கிடந்த உலக வரலாற்றினுள் மாற்றத்தைத் தீவிர நிலையில் நிலைநிறுத்த நெம்புகோல்களாக இருந்தவர்கள் என்றே கூறலாம்.

ஒரு நாட்டில் ஒரு கூட்டத்தைச் சேர்ந்த மக்களை ஒரு மாற்றுக் கருத்தினை முன்னிட்டு அணிதிரட்ட வேண்டுமானால் அதற்கான சரியான காரணகாரியங்கள் எடுத்தியம்பப்பட வேண்டும்; அது நியாயப்படுத்தப்பட வேண்டும்; எல்லாவற்றுக்கும் மேலாக, மாற்றம் வேண்டுமென எத்தனிக்கும் மக்கள் பலம் மற்றும் பொருளாதார வசதிகள் வேண்டும்.

பெரியார், அண்ணா போன்றவர்கள் தாங்கள் கொண்ட கொள்கைகளைத் தங்களின் சுயவாழ்வைக் கடந்த பொது நல நோக்கோடு கையிலெடுத்துக் கொண்டு, அதற்காகத் தங்களை மூழ்கடித்துக் கொண்டு செயல்பட்ட விதம் மிகப் பெரிய வியப்பிற்குள்ளாக்கக் கூடியதாகும். தங்கள்வசமிருந்த மிகக் குறைந்த, எளிய, உபகரணங்களை வைத்துக் கொண்டு 'தமிழ் நாடு', 'திராவிட இனம்' , 'தமிழ் மொழி', 'சுய உரிமை', 'சாதி ஒழிப்பு', 'மத ஒழிப்பு', 'வருணாசிரம அழிப்பு' போன்ற மிகப்பெரிய விஷயங்களுக்காக நடந்தும்,

வண்டிகளில் பயணித்தும், இரவு பகலாக ஓய்வில்லாது மேடைகளில் முழங்கியும், மக்களை ஒருங்கிணைத்தும் மாற்றங்களை அறிமுகப்படுத்தினார்கள்.

சுதந்திரமடைந்த இந்தியாவிற்கென்று ஓர் ஒட்டுமொத்த போக்கு முன்வைக்கப்பட்ட ஆளுமையில் தமிழனின் அடையாளம் அழிகின்றது என்ற பதட்டம் அவர்களின் செயல்களிலிருந்தது. சுதந்திரம் அடைந்துவிட்டோம் எனறு மக்கள் மனதில் தோன்றிய நிம்மதி காங்கிரசை, இந்தியை, ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ளும் மனப் போக்கிற்குத் தள்ளியதை உணர்ந்து வீர்யத்தோடு அவர்கள் செயல்பட்டதன் நிழலில் தான் இன்று தமிழும், தமிழகமும், குறைந்த பட்ச உரிமைகளோடு நீடித்து நிற்கின்றன. திராவிடக் கட்சியின் நுழைவில் தான் பிராமணன் தனித்து அடையாளம் காணப்பட்டான். தங்களைக் கடவுளர்களாக, ஆண்டைகளாக நினைத்துக் கொண்டு இதர பிற சாதியினரை எள்ளி நகையாடினான். தமிழகத்தில் நடந்த தொடர் போராட்டத்தின் விளைவாகத்தான் பிற சாதியினரும் ஓரளவு தங்களை மனிதர்கள் என்று அடையாளம் கண்டனர். இந்தப் போக்கில்தான் இன்றும் சாதி என்பது மாட்டுப் பிண்ணாக்கு என்கின்ற முடிவுக்கு ஒன்றிரண்டு இளைஞர்களாவது வரமுடிகின்றது. இல்லையென்றாலும், எதற்கும் உதவாத சாதிக் குப்பைகளின் மேடாக முடிவதுதான் தமிழகத்தின் முடிவாக இருந்திருக்கும். இன்றைய மனிதன் மாற்றங்களை அறிவார்த்தமானவைகளாக மட்டும் வைத்துக் கொண்டு, உணர்வு வயப்பட்ட ஒன்றிப்பில் சாதிவயப்பட்டவனாகத் தன்னை மாற்றிக் கொள்கின்றான்.

மார்க்சியம் வர்க்க ரீதியாக எடுத்துச் சொன்ன பிரச்சனைகள் பெரும்பான்மை சமூக முன்னிறுத்தலாக நின்று விட்டதென்றும், சிறுசிறு நிலைப்பாடுகளில் உணர்வு வயப்பட்ட தாக்குதலுக்கு உட்படுத்தப்படும் மனிதன் மிகப்பெரிய அளவில் மார்க்ஸ் சொன்ன வர்க்கப் பிரச்சினை களுக்குள்ளும் நடத்திச் செல்லப்படுகின்றான் என்பதனால் அவனுக்கான பிரச்சினைகளை அண்ணா, பெரியார், அம்பேத்கார் போன்றவர்களே நடத்திச் சென்றவர்களாக இருந்தனர் என்கின்ற உண்மையை உணர முடிகின்றது. மார்க்ஸ் சொன்ன மூலதனம், உற்பத்தி, மனிதன், மனித உழைப்பு போன்றவைகளுக்கு முன்னதாக பிறப்பிலேயே சாதி, ஒருவனைப் பார்க்கும் பார்வையிலேயே சாதி, நடத்துகின்ற முறையிலே சாதி போன்ற இந்தியாவைப் பிடித்து ஆட்டுகின்ற கொடுமைகள் – 'மூலதனம்', 'உற்பத்தி' போன்ற பிரச்சினைகளை இரண்டாவது நிலைக்குக் கொண்டு செல்கின்றன.

இதனால் பெரியார், அண்ணா போன்றவர்கள் கல்வி கண்ணைத் திறக்குமென்ற நம்பிக்கையில் கல்வியை நிர்ப்பந்தித்தனர். 'பகுத்தறிவு' என்ற 'ஆறாம் அறிவு' மனிதனுக்கு இருப்பதை எடுத்துக் கூறினர். பகுத்தறிவுக்கு உட்பட்டவன் மூடப்பழக்க வழக்கங்களில் சிக்கிக்கொண்டு தன்னை இழக்கமாட்டான், சாதியை முன்வைப்பவன்தான் இந்தச் சமுதாயத்தில் பகுத்தறிவில்லாத மிருகம்; அதிகாரம் என்ற கொடுமுடியைத் தலையில் தூக்கிக் கொண்டு நினைத்ததைச் செய்ய நினைப்பவன் மாபெரும் மேதையாகவே வாழ்நாள் முழுவதும் இருப்பான்; அவனிருக்கும் சமுதாயத்தில் நல்ல செயல்கள் நடைபெற முடியாது என்று கூறினர்.

பெரியார், அண்ணா போன்றவர்களின் தீவிரச் செயல்பாடுகள் அவர்களது மேடைப் பேச்சிலும், எழுத்துக்களிலும், அவர்கள் கால இலக்கியங்களிலும் பிரதிபலித்ததோடு நின்றுவிடவில்லை. அண்ணா ஒரு இயக்கத்தின் தலைமைப் பொறுப்பேற்று நடத்திய ஒவ்வொரு நிகழ்வும் சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகவும் இன்றுள்ள தமிழன் ஓரளவு சௌகரியமாகத் தன்னை இருத்திக் கொள்ள ஏதுவானவை களாகவும் இருக்கின்றன என்பது உண்மை.

மிக எளிமையான, குள்ளமான, கம்பீரமான, கணத்த சாரீரம் கொண்ட அண்ணா தன்னுடைய தொடர் பேச்சினால் மக்களைக் கவர்ந்தார். தன்னுடைய பேச்சை வசீகரமாக்கிக் கொண்டதனால் குள்ளமான தன் உருவத்தை ஆகாய அளவிற்கு மேடையில் உயர்த்திக் காட்டினார். எந்தக் கருப்பொருளை எடுத்துக் கொண்டாலும், அக்கருப்பொருள் சார்ந்து அவர் வைக்கின்ற பின்னணிச் சொற்கள் அநாவசிய எழுத்துக்களை நீக்கியவைகளாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

தனக்கிருக்கும் பேச்சு மற்றும் எழுத்துத் திறமையில் உலக வரலாற்றை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, உலக நாடுகளின் புரட்சியை எடுத்துக்காட்டி, "நீயும் புரட்சி செய்" என்பதனைக் கூறாமல் கூறினார் அண்ணா. "நான் ஒருவனைத் துப்பாக்கி எடு" என்று சொல்வதற்கு ஒரு நாட்டில் எனக்கு உரிமை கிடையாது. அது தவறான ஆலோசனையு மாகும். மாறாக, என்னுடைய செயல்பாடுகளைக் கண்ணுக்குக் கண்ணாகக் காணும் ஒரு மனிதன் என்னுடைய செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, அவனுடைய எதிரியை அடையாளம் கண்டு அவனை நோக்கித் தன் துப்பாக்கியை நீட்ட வேண்டும் - தன் நாட்டு மக்களின் சுதந்திரம் வேண்டி, என்பதனை அண்ணா உணர்ந்து இங்கிதமாகச் செயல்பட்டார் என்றே சொல்ல வேண்டும்.

செயற்பாட்டுக்கு மக்களை ஒருங்கிணைத்த விதத்தில் லெனின் ரஷ்யாவில் நடத்திய அக்டோபர் புரட்சி அவருக்குள் ஆழப்பதிந்து வழிநடத்தியிருக்கிறதாக உணர முடிகின்றது. “உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்று லெனின் பாட்டாளி மக்களுக்காக முன்வைத்த தாரக மந்திரம் போல அண்ணா “திராவிட நாடு திராவிடருக்கே" என்ற மந்திரத்தை முன்வைத்தார்.

மாற்றத்தை விரும்பிய தமிழ்க்கவிஞன் பாரதி பாண்டிச்சேரியில் பல நாட்கள் பட்டினியாக இருந்திருக்கிறார். கடையத்தில் ஊரைவிட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட காலத்திலும் சரியான உணவில்லாமல் திண்டாடியிருக்கின்றார். பேனாவிற்கு மை வாங்க, தபால் கார்டு வாங்க, ரோட்டோரத்தில் விற்கும் சிறு திண்பண்டங்களை வாங்கித் திண்ண காலணா இல்லாமல் இருந்திருக்கிறார். அபூர்வமான படைப்பாளிகளைத் தமிழ்ச் சமூகம் எப்போதும் அடையாளம் கண்டுகொள்வதில் மடமையுடனேயே இருந்திருக்கின்றது. தாஸ்தாவஸ்க்கி என்கின்ற ரஷ்யப் படைப்பாளன் அவன் வாழ்கின்ற காலத்திலேயே சரியாக அடையாளங் காணப்பட்டு போற்றப்பட்டான். ஆனால், பாரதியின் சவ ஊர்வலத்தில் இருபதுக்கும் குறைவான ஆட்கள்தான் மயானத்திற்கு வந்திருந்தனர். இதில் வெள்ளைக்காரர்கள் நான்கு பேர். எஞ்சிய 16 – க்கும் மேற்பட்டவர்களை உள்ளிட்டு நடந்து சென்ற பாரதியின் சவ ஊர்வலத்தைக் கண்ட இந்தத் தமிழகத்தில் இன்று மூலைக்கு மூலை பாரதியின் பெயரில் மன்றங்கள், நூல் வெளியீடுகள், விழாக்கள், சினிமாக்கள், எண்ணிறந்த இத்யாதிகள் மலையாகக் குவிகின்றன. புலவர் சுத்தானந்த பாரதி அவர்கள் சொல்கின்ற போது, “அவருடைய வாயில் மொய்த்த ஈக்களைக் காட்டிலும் பாரதியின் சவத்தை எடுக்க வந்திருந்தவர்களின் எண்ணிக்கை குறைவு என்கிறார். இத்தகைய அவலநிலையை உணர்ந்த தீர்க்க தரிசி பாரதி என்பதனால் தான் “நெஞ்சு பொறுக்குதில்லையே... இந்த நிலைகெட்ட.... நிலைகெட்ட.... நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்" என்று பாடிச் சென்றிருக்கிறார்.

அப்பாவியான பாரதி தன் நூல்களைச் சிறுவர்களிடம் கொடுத்து விற்கச் சொல்வாராம். யாரும் வாங்க மறுத்ததாக அவரோடு விளையாண்ட சிறுவன் “கல்யாண சுந்தரம்" என்கின்ற 90 வயதுப் பெரியவர் இன்று கூறுகின்றார். ஆனால் அண்ணா பேச்சால், எழுத்தால் இந்த இந்தியாவை உலுக்கினார். அமெரிக்கப் பல்கலைக்கழகம் வரை சென்று தமிழின் புகழ் பரப்பினார். காரணம், அவர் கவிஞனாக மட்டும் இருந்துவிடாமல் இயக்கத்தில் காலெடுத்து வைத்துச் செயல்பட்ட

செயல்முறைத் திட்டங்கள் நேர்த்தியானவைகளாக இருந்தன. பாரதியிடம் அடிப்படையில் இருந்த இசையைப் போன்ற மென்மையான உணர்வுகள் லெனின், அண்ணா போன்றவர்களால் களையப்படுகின்றன. அடுத்தடுத்த திட்டங்களுக்கு மக்களை உட்படுத்த வேண்டிய தேவைக்குள் தங்களை இடம்பெறச் செய்து கொண்டு வகுத்தவைகளை வழி முறைகளாக்கினர்.

ஏழைக்குடும்பத்தில் பிறந்த அண்ணாவுக்கு இளம் வயதிலேயே உடல் நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் வாய்ப்பில்லை. என்றாலும் அண்ணா ஒரு சிறந்த சொற்பொழிவாளர் - மொழிபெயர்ப்பாளர் - கட்டுரையாளர் - ஆசிரியர் - இயக்கத்தின் செயலாளர் - தனி அமைப்பின் நிறுவனர் - பொதுச் செயலாளர் - நாடக ஆசிரியர் - நடிகர் - திரைப்படப் படைப்பாளர் - நூலாசிரியர் - சட்டமன்ற உறுப்பினர் - எதிர்கட்சித் தலைவர் - பாராளுமன்ற உறுப்பினர் - தமிழக முதல்வர் போன்ற பல பொறுப்புகளில் கால நேரம் கருதாமல் திறம்படச் செயல்பட்டவர்.

எல்லா நல்ல மனிதர்களும் உடல்நலம் பேணுவதில்லை என்பது பொதுவான வழக்காக இருக்கின்றது. பாரதி தன்னுடைய உடலைப் பாதுகாத்துக் கொள்ளவில்லை. அந்தச் சிறிய வயதில் தன்னை ஒதுக்கும் சமூகத்தினைத் தான் ஒதுக்க நினைத்து வெற்றி கண்டாலும் தன் உள்ளத்தில் ஒதுக்கிய தீராக் கவலை அவர் உடலை உருக்கியது. அறிஞர் அண்ணா, நேரம் காலம் பார்க்காத பயணம், இடைவிடாத மேடைப்பேச்சு, தொடர் செயல்பாடுகள் போன்றவற்றில் மூழ்கியதால் உடல் விரைவில் பழுதடைந்தது. தமிழகக் கிராமங்களின் மூலை முடுக்குகளெல்லாம் எதிரொலிக்கும் இந்தப்பாடல் என்றென்றைக்கும் அண்ணாவை நினைத்து நெஞ்சுருக வைக்கும்.

"எங்கள் தமிழன்னை எத்தனையோ தவமிருந்து
திங்களாய்ச் செங்கதிராய்த் திருநாட்டின் ஒளிவிளக்காய்
வள்ளுவன் குறள் போலே வடிவமோ சிறிதாக
உள்ளமோ இந்த உலகினும் பெரிதாம்..."

(1)

காஞ்சியிலே ஒரு புத்தன் பிறந்தான் - கொண்ட
கருணையினால் எங்கள் நெஞ்சில் நிறைந்தான்
அண்ணாவென் றெல்லோரும் அழைக்க வந்தான்
ஆயிரம் தலைமுறை தழைக்க வாழ்ந்தான்
அண்ணா அண்ணா அண்ணா எங்கள்
அன்பின் தெய்வம் அண்ணா...

(2)

எல்லோர்க்கும் அண்ணன் அவன்
இல்லார்க்கு செல்வம் அவன்
நல்லோர்கள் உள்ளமெல்லாம்
நாள்தோறும் வாழும் அவன்

(3)

சொன்னாலும் மனம் பதறும்
சொல்லவோ வாய் பதறும்
தன்னந்தனிமையிலே தானுறங்கப் போனானோ...
வங்கக் கடல் அலையே வாய்திறந்து பேசுதம்மா...
தங்கத் தமிழ் மகனைத் தாலாட்டுப் பாடுதம்மா...
வாழி நீ பாடு... பைந்தமிழர் நாட்டிற்கென்று
ஓடி உழைத்த மகன் உறங்கட்டும் அமைதியிலே...
ஓடி உழைத்த மகன் உறங்கட்டும் அமைதியிலே...

# 1. அண்ணாவின் மொழி நேர்த்தி

சொல்லாடல் என்பது அறிவார்த்தம். இந்த அறிவார்த்தத்தினுள் பல மாற்றுக்கள் பல கூறுகளாக இடம்பெறும். உதாரணமாக, “தான உணவு" என்பதைப் பற்றிய சொல்லாடலை எடுத்துக் கொண்டால் அது ஒரு சமூகத்தின் பழக்கவழக்கத்தையே பேச வைக்கக் கூடிய நிலையில் உருவெடுக்கும். 'சாப்பாடு' என்பது முதன்மை நிலையில் உடல்நிலையைப் பிரதிநிதித்துவம் செய்வதாக வந்தாலும் மனரீதியான உணர்வுப் பரிமாற்றத்தில் அது ஒரு மகிழ்ச்சியான செயல்பாடாகவும் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. சொல்லாடல் என்பது எப்பொழுதும் நாம் என்ன செய்கிறோம்? என்பதைப் பற்றிப் பேசுவதோடு நின்று விடாமல், நாம் ஏன் இதைச் செய்கிறோம்? என்பதைப் பற்றியும் பேசுகின்றது. ஆக, சொல்லாடல்கள் என்பன சமூகப் பழக்கவழக்கங்களைப் பற்றிப் பேசுகின்ற போது அவை பற்றிய கருத்தாக்கங்கள், மற்றும் நோக்கங்களைச் சூழல்களின் புரிதல்களோடு, அவை எவ்வாறு இணைத்துப் பயன்படுத்தப்படுகின்றன என்பதனையும் விளக்குகின்றன. அண்ணா மேடையில் என்ன பேசினார்? என்ன எழுதினார்? அவற்றால் சமூகம் உணர்ந்து கொண்டவை என்ன? அவருடைய சொற்கள் பொருள் விளக்கம் பெற்று சமூகச் செயல்பாட்டு ரீதியில் தங்களைக் கரைத்துக் கொண்ட போது பிரதிநிதித்துவம் பெற்று வெளிப்பட்ட செயல்கள் என்னென்ன? என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இன்றைய தொடர் செயல்பாடுகளின் வழியாக உணரமுடியும்.

அண்ணா ஒரு பெருங்கூட்டத்தைத் தன் சொற்களால் தட்டியெழுப்பி, குறிப்பிட்ட ஒரு கொள்கைக்குள் கொண்டுவர முயற்சித்திருக்கின்றார். ஏற்கனவே காங்கிரஸ் என்பது இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றுத் தந்து பெரும் புகழைத் தேடிக் கொண்டிருப்பதோடு, கட்சிச் செயல்பாட்டின் அனைத்து உச்சரிப்புகளிலும் அந்த மந்திரத்தை உபயோகித்துக் கொள்ளும் வல்லமை படைத்த சக்தியாக இருந்தது. அதனை எதிர்த்து முன்வைக்கின்ற பேச்சு, எழுத்து, செயல்பாடு, ஏற்படுத்த வேண்டிய தாக்கங்கள், எதிர்கொள்ள வேண்டிய விளைவுகள் அனைத்தும் 'அண்ணா' என்ற அறிஞருக்கு முன் பரந்து விரிந்து கிடந்தன.

தந்தை பெரியார் ஒரு ரீதியில் தன்னுடைய பகிரங்கமான செயல்பாடுகள் மூலம் கருத்துக்களை வெளிப்படுத்தி உருவாக்கியிருந்த பின்னணி, அண்ணாவிற்குப் பல சாதகங்களைத் தமிழகத்தில் ஏற்படுத்தி யிருந்த போதிலும் அவை போதுமானவையாக இல்லையென்பதும் உண்மையாகி இருந்தது. இந்நிலையில் அண்ணா செயல்பட்ட விதம் குறியீட்டு ரீதியில் கடந்த காலம் மற்றும் நிகழ்காலம் போன்றவற்றை விடுவிப்பதன் மூலம் எதிர்காலத்தை விடுவிக்கின்ற ரீதியிலமைந்தது. முழுக்க முழுக்க அண்ணாவின் படிப்பினைகள், சொல்லாடல்கள் போன்ற அனைத்தும் குறியீட்டு ரீதியான முறைமைத் தரவுகளாகவே காணக் கிடைக்கின்றன.

ஒரு சமுதாயத்தில் மாற்றத்தை விரும்பி முன்வைக்கின்ற குறியீட்டுத் தரவுகள் என்று கொள்ளப்படுபவை பேச்சாக, எழுத்தாக, படங்களாக, ஓவியங்களாக மட்டுமல்லாமல் தனிமனிதன் மேடையில் உபயோகிக்கின்ற பிரத்யேகச் சைகையாகக் கூட இருக்க முடியும் என்பது தமிழகத்தில் உணரப்பட்டது.

பார்வையாளர்களை நேரடியாக விளித்துப் பேசுகின்ற முறைமை கருத்து நிலையிலும், பொருள் நிலையிலும் பல நேரங்களில் கூடுதலான நெருக்கத்தையும் அழுத்தத்தையும் தோற்றுவிப்பதற்கான காரணியாகப் பேச்சாளர்களால் கொள்ளப்படுகின்றது. இன்று விளம்பரங்கள்தான் பார்வையாளர்களை நேரடியாக விளித்துப் பேசுபவைகளாக இருக்கின்றன. ஆனால், அண்ணா முதன்முதலாகப் பார்வையாளர்களை நேரடியாகத் தன் பேச்சால், எழுத்தால் தனக்கு அண்மையில் கொண்டு வரக்கூடிய வல்லமை உடையவராக இருந்தார். அவர் திராவிட நாடு பத்திரிக்கையில் தம்பிக்கு எழுதிய கடிதங்கள் அனைத்தையும் ஒருவித நெருக்கத்தோடு பார்வையாளர்களுக்குத் தகவல்களைப் பரிமாறும் முனைப்பிலேயே எழுதியுள்ளார். பத்திரிக்கையில் 'அண்ணன் தம்பிக்கு' எழுதுவது என்பதே பெயரளவில் உறவு நிலைகளை முன்வைப்பது என்ற நிலையில் பார்வையாளரின் மனங்களைத் தன்பக்கம் தக்க வைத்துக் கொண்டு அதன் வழியாக நாடு, மொழி, இனம், அரசியல், சமூகம் போன்ற பல்வேறு நிலைப்பாடுகளைப் பேசுவது நடைபெற்றுள்ளது. இது, அரசியல் சாமர்த்தியம் அல்லது ஒரு போராளி அல்லது புரட்சியை விரும்புகின்ற ஒருவன், மக்களின் அடிப்படை உணர்வுகளை ஊடுருவி நாட்டில் மாற்றத்தை முன்வைக்க எத்தனிக்கும் முயற்சியாகும்.

அண்ணா சூன்யத்திலிருந்து கொண்டு தன்னுடைய செயல்பாடுகளைத் தொடரவில்லை. அவருடைய எல்லாச்

செயல்பாடுகளுக்கும் முன்னுதாரணமாக உலகம் முழுவதிலுமாக நடைபெற்ற வெற்றிகரப் புரட்சி முழக்கங்கள் இருந்தன. சோசலிசப் புரட்சியை அண்ணா சரியாக உணர்ந்து, அறிந்து, தாக்கம் பெற்று அதன் நுணுக்கங்களால் ஈர்க்கப் பெற்றவராக இருந்திருக்கிறார். லெனினின் அத்தனை நடவடிக்கைகளையும் கருத்தில் கொண்டிருந்ததோடு, தாக்குதல்களை நிதானமாக எதிர் கொண்ட 'லெனின்' என்கின்ற மகா சக்தியின் மேல் அளவிடற்கரிய தாக்கத்தை அண்ணா பெற்றிருந்திருக்கின்றார். "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்ற லெனினின் முழக்கத்தை அண்ணா தமிழ்நாட்டில் பல சூழல்களில் இளைஞர்களை ஊக்குவிக்கவும், பல ரீதிகளில் மக்களை ஒருங்கிணைக்கும் தாரக மந்திரத் தளமாகவும் கொண்டு தனக்கு வேண்டிய சொற்களை இட்டு நிரப்பி வெளியிட்டுள்ளார்.

சமூகக் குறியீடு என்பது அமைப்பியல் குறியீட்டிலிருந்து வேறுபட்டது. அண்ணாவை ஒரு சமூகக்குறியீடாக நாம் காண முற்படுகின்றபோது குறியீடு என்றால் என்னவென்று கேட்காவிட்டாலும் எப்படிப்பட்ட செயல்பாடுகள் குறியீடுகளாகும். குறியீட்டியலாளன் என்ன செய்வான் என்பது போன்ற கேள்விகளை நாம் கேட்கலாம்.

1. தகவல்களைச் சேகரிப்பதும் முறைமையான குறியீடுகளாக இடம் பெறச் செய்வதும் - தகவல்களின் வரலாற்று நிலைக்கு உட்படும்.

2. கிடைக்கப் பெற்ற தகவல்கள் வரலாற்று ரீதியாக கலாச்சாரம் மற்றும் நிறுவனச் சூழல்களில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதனோடு மக்களுக்குள் அது எவ்வாறு பேசப்படுகின்றது – அவைகளைத் திட்டமிடுவது, படிப்பது, திறனாய்வு செய்வது, தீர்மானிப்பது போன்றவைகள் உட்பட இதனுள் இணையக் கூடும்.

3. புதிய குறியீட்டியல் தரவுகளைக் கண்டுபிடிப்பதிலும், வளர்த்தெடுப்பதிலும் கவனம் செலுத்துவதோடு குறியீட்டியல் தரவுகளைப் புதிய முறைகளில் பயன்படுத்துவதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

மேற்கில் செயல்பாட்டியல் என்பது குறியீட்டியலில் பெரும் பங்கு வகித்திருக்கின்றது. மொழியைப் பயன்படுத்துகின்ற விதத்தில் இரு ரீதியான உறவுகளை மைக்கேல் ஹாலிடே என்பவர் விளக்குகிறார்.

1. கட்டமைப்பினுள் அதன் செயல்பாடு

2. சமூகத்தினுள் அதன் செயல்பாடு

என்ற விதங்களில் மொழி செயல்படுகின்றது. 'கட்டமைப்பு' என்கின்ற சொல் கட்டமைப்பிலுள்ள செயல்பாடு என்பது வாக்கியக் கட்டமைப்பினுள் அதன் செயல்பாட்டைக் குறிப்பதாகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் அது மொழியியலாளர்கள் குறிப்பிட்ட "சரியான" "நேர்த்தியான" வாக்கியக் கட்டமைப்பைக் குறிக்கக் கூடியதாகும். அவர்கள் இந்தச் "சரியான" "நேர்த்தியான" என்ற சொற்களைச் செயற்பாட்டு நிலையில் பயன்படுத்தக் கூடிய தொழில்முறைச் சொற்களாக விளக்கமளித்தனர்.

ஆனால் அத்தகைய பொருண்மையில் "முழுமை" என்பது "சமூகம்" என்பதை உணர்த்துவதல்ல; மாறாக "பிரிவு" அல்லது "பிரதி" அல்லது அதன் 'பகுதிகள்' – அதாவது "தனித்தில்லாத பிரிவு"அல்லது "தொகுதி" என்று ஒரு சமுதாயத்தினுள் இடம் பெறுவதைக் குறிப்பதாகும். "விடுதலை" என்கின்றசொல் ஒரு வாக்கியக் கட்டமைவுத் தொகுதியினுள் செயல்பாட்டைக் குறிக்கக் கூடியதாக இடம் பெறுவதோடு சமூகத்தின் எல்லா அம்சங்களோடும் இணைத்து எண்ணக் கூடிய "சமூக வேதியியலுக்குத்" துணை புரிவதாகவும் இருக்கின்றது. மேலும் "விடுதலை" என்கின்ற சொல் நடக்கப் போவதை உணர்த்துவதோடு நடந்து போனதை நினைவுபடுத்துவதாகவும் இடம் பெறுகின்றது. சமூக மொழியியலில் சொற்களின் செயற்பாட்டுத் தளங்கள் பெறும் இடத்தினை இங்கு உணரலாம்.

அண்ணா ரோம் நாட்டில் அடிமைகள் ஒடுக்கப்படுவதை ஒன்றன்பின் ஒன்றாக அழுத்தத்துடன் விவரிக்கிறார். ரோம் பிரிட்டனை ஜெயித்தது – அடிமைப்பட்ட பிரிட்டனிலே ரோம் நாட்டவர்கள் தூக்கு மரங்களை அதிகமாக அமைக்கவில்லை. ஆனால், ரோம் நாட்டிலே, ரோம் நாட்டவர், தங்களிடம் வேலை செய்து வந்த ஏழைகளை, அவர்கள் "எஜமானர்களை எதிர்க்கத் துணிந்தனர்" என்ற ஒரே காரணத்துக்காக அவர்களைப் படுகொலை செய்திருக்கிறார்கள் - சமரிட்டு அழித்தனர் ஏராளமான அடிமைகளை – அவர்கள் போக சரணடைந்த பிடிபட்டவர்களைப் பாதை நெடுகத் தூக்கு மரங்களை அமைத்து அவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றனர் - ஒரு நூறு, ஓர் ஆயிரம் அல்ல – ஆறு ஆயிரம் ஏழைகள்.

ரோம் கலையை வளர்க்கத் தவறவில்லை. இந்தப் படுகொலை செய்த காலத்திலேயும்! அந்த நாட்டிலே நளினிகளுக்குக் கீதம்

பயிற்றுவிக்கும் இசைவாணர்கள் இருந்தனர். சிற்றிடையாளரின் சேல்விழி பேசுகிறது பாரீர் என்று வியந்துகூறி ஒரு சீமான் மற்றொரு சீமானிடம் காட்டி மகிழும் விதமான ஓவியம் தீட்டித்தர ஓவியர்கள் இருந்தனர் ; எல்லாம் இருந்தது; ஏழைக்கு மட்டும் உழைக்க வேண்டிய நிலைமையும் - உரத்த குரலிலே இது அக்கிரமமல்லவா? என்று கேட்டால் தொங்குவதற்குத் தூக்கு மரமும் இருந்தது. எதிர்க்கத் துணிந்தவர்கள் 6000 பேர் பாதை ஓரத்திலே, தூக்கு மரத்திலே தொங்கினர். கண்முன் கொண்டு வந்து பாருங்கள்; பயங்கரக் காட்சியல்லவா?

பயங்கரப் பாதை தான், பாட்டாளி விடுதலை விரும்பினால், உரிமைக்காகப் போரிட்டால், காண வேண்டும். அந்தப் பாதையைக் கண்டு கலங்கா நெஞ்சம் ஏற்பட்டாலொழிய விடுதலை கிட்டாது.

“நாம் கூறும் இந்த ஆறு ஆயிரம் அடிமைகளின் பிணங்கள் பாதையிலே தொங்கிய சம்பவம், கதையல்ல, காவியமல்ல, வரலாறு. நிழல் தரப் பாதை ஓரத்திலே நல்ல மரங்களை வைத்து வளர்க்கிறார்கள் இன்று, அன்று கூடத்தான். ஆனால் ரோம் நாட்டவர் ஆறு ஆயிரம் தூக்கு மரங்கள் அமைத்தனர். பாதை ஓரத்தில், பரந்த சாம்ராஜ்யம் - சட்டத்திற்குப் பிறப்பிடம் - கிரேக்கக் கலாச்சாரத்தை மெருகிட்டு வழங்கிய இடம் இந்த ரோம்; ஆனால் பாட்டாளிக்குக் கிடைத்தது தூக்கு மரந்தான்.

போரிலே தோற்றுவிட்டவர்கள், பிழைப்புக்காகத் திண்டாடுபவர்கள் ஆகியவர்களை ரோம் நாட்டு ஜமீன்தார்கள் - பண்ணை முதலாளிகள் - வேலைக்கு அமர்த்திக் கொண்டனர். இவர்கள் “அடிமைகள்" வேலை செய்ததால் மட்டுமல்ல அந்தப் பெயர் - சட்டத்திலே அவர்களுக்குத் தரப்பட்ட அந்தஸ்து அவ்வளவுதான்."1 அண்ணாவின் நேர்த்தியான இந்த மொழிக்கட்டமைப்பு குறியீடுகளை நகர்த்திச் செல்லும் உருளைகளாக இருக்கின்றன.

கீழ்க்கண்ட நான்கு பத்திகளின் முதல் நிலையில் அண்ணா தொழிலாளியின் உறவில் முதலாளியிடம் காணப்படும் ஒடுக்குதலைக் கூறுகிறார். தொழிலாளி – கூலிக்காரன் - அடிமை என்ற மூன்று விதமான பெயரையும் ஏழைதான் பெறமுடியும். மூன்று விதமானவர்களும் ஏழைகள் - உழைத்தே பிழைக்க வேண்டியவர்கள் - ஆனால் மூவருக்கும் நிலைமை வேறு வேறு. தொழிலாளி – தனக்கு விருப்பமில்லாவிட்டால் வேலைக்கு வரமறுக்கும் நிலைமையையும், தன்னைக் காரணமின்றி வேளையிலிருந்து நீக்கினால் ஏன் என்று கேட்கும் நிலைமையையும், கேட்கும் உரிமையையும் உழைப்புக்கேற்ற பணம் தந்தாக வேண்டுமென்றும் கிளர்ச்சி செய்யவும் சட்டப்படி உரிமை பெற்ற நிலை பெற்றுள்ளவன்.

இந்த இரண்டாவது நிலையில் கூலிக்காரன் - உடைமைக்காரன் உறவுநிலை விளக்கப்படுகிறது. கூலிக்காரன் இதற்கு ஒருபடி மட்டம் - கிளர்ச்சிக்கு வசதி கிடையாது. ஆனால் இவனையும் வேலை செய்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. தேவையானால் கூலிக் காரனை உடைமைக்காரன் ஏதோ வேலை செய்யச் சொல்வான் - இஷ்டமிருந்தால் கூலியாள் வேலை செய்வான், தொடர்பு அவ்வளவுதான்.

மூன்றாவது நிலையில் அடிமையின் மேல் ஆண்டான் நடத்தும் உயர்ரீதியான வன்முறைகளை வெளிப்படுத்துகிறார். அடிமை நிலை அதுவல்ல. அவன் வேலை செய்தேயாக வேண்டும். ஏன் என்று கேட்க முடியாது – எவ்வளவு வேலை என்று கேட்க முடியாது – என்ன பணம் தருகிறாய் என்று கேட்கக் கூடாது – அவனை எஜமான் அடிப்பான், சட்டம் குறுக்கிடா – அவனைப் பட்டினி போட்டுச் சாகடிப்பான், சகஜம் என்று சர்க்கார் சும்மா இருந்துவிடும் - உண்மையில் அவன் கால்களில் சங்கிலியும் உண்டு.

மாற்றத்தை முன்வைக்க வேண்டிய உலகில் அதிகாரத்தின் கொடு முடியைத் தக்க வைத்துக் கொண்ட அதிகார வர்க்கத்தின் பயங்கரத்தை உணர்த்துகிறார். "பயங்கரப்பாதை! அடிமைகள் விடுதலை பெற – தொழிலாளர்கள் உரிமை பெற ஏழை ஈடேற - இருக்கும் பாதை. சாமான்யமான சங்கடம் நிறைந்ததல்ல – பயங்கரமான விளைவுகள் கொண்ட பாதை - இன்று நேற்று அல்ல இந்த நிலைமை, ஏசு பிறப்பதற்கு நூறு ஆண்டுகளுக்கு, முன்பு நேரிட்ட நிலையைக் கூறினோம். ஏசு வந்தார், சுவிசேஷம் உரைத்தார் - ஆலய பூஜை மாறி தொழுகை மண்டபம் உண்டாயிற்று. ஆனால் இன்றும், உரிமைக்காகப் போரிட பாட்டாளி கிளம்பினால் பயங்கரப் பாதை தான் - அதிலே மாற்றம் இல்லை – தூக்கு மேடைக்குப் பதிலாகச் சுழல் துப்பாக்கி வந்தது – மாறுதல் இந்த வகையில் தான்"2 என்கிறார் அண்ணா.

மொழி என்பது மனிதனின் தேவைக்காகப் பரிணமித்த காரணத்தினால் அவனது தேவைக்கான விதத்தில் இணைத்துப் புரிந்து கொள்ளப்படுவதாகவும் இருக்கின்றது.

1. செயலாக்கப் பரிவர்த்தனைகளுக்கான மொழிச் செயல்பாடு
2. நினைவாக்கப் பரிவர்த்தனைகளுக்கான மொழிச் செயல்பாடு
3. தகவல் பரிமாற்ற மொழிச் செயல்பாடு
4. சுயப் பரிமாற்ற மொழிச் செயல்பாடு
5. பொருள்கள் பற்றி புரிதலுக்கான மொழிச் செயல்பாடு

6. ஒன்றினை அனுமானிப்பதற்கான மொழிச் செயல்பாடு
7. செய்திகளை வெளியிடுவதற்கான மொழிச் செயல்பாடு

மேற்கூறப்பட்ட மொழிவழிப் பிரகடனங்களை அண்ணா பல்வேறு விதமாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றார். குறிப்பாக அவர்,

"இப்படி! விடுதலைக்கு மார்க்கம், பயங்கரமானதாக இருக்கும் என்பதைத் தெரிந்தும் ஒரு மாவீரனின் சொல்லால் மன உரம் பெற்ற மக்கள் நடத்திய புரட்சியே நவம்பர் புரட்சி. அந்தப் புரட்சி வெற்றியையும் தந்தது – வெற்றி நிலைத்தும் விட்டது, வளர்ந்தும் வருகிறது – பயங்கரப் பாதையிலே போக வேண்டிய அவசியமுமின்றிப் பல்வேறு நாட்டுப் பாட்டாளி மக்கள் உரிமை பெறும் சூழ்நிலை கூட அந்தப் புரட்சி உண்டாக்கி வைத்திருக்கிறது"3

என்று அண்ணா மிக எளிதான முறையில் வர்ணனைகளே இல்லாமல், எடுத்துக் காட்டுகள் எதுவுமில்லாமல் கூறுகின்ற இந்த மொழிப் பயன்பாட்டினுள் அண்ணாவின் ஆழ்மன எண்ணம் வெளிப்படுகின்றது.

# 2.அண்ணாவின் அறிவார்த்தம்

இந்தியா 1947க்கு முன் வெள்ளையருக்கு அடிமைப்பட்டு இருந்தது. 1947இல் இந்தியா விடுதலை பெற்றது. இதையடுத்து உரிமையுணர்வு என்ற ஒன்று மேலெழத் தொடங்கியது. இதன் விளைவாக மரபு மீறலும், மரபை உடைத்து எறிதலும் கொண்ட புதிய முயற்சிகளில் ஈடுபடுதலும் தலையெடுக்கலாயிற்று. உலக அரங்கிலே பீறிட்டு எழுந்த கட்டற்ற சிந்தனையும் மனித நல நாட்டமும் தமிழகத்தை ஆட்கொண்டன. பெரியார், அண்ணா போன்ற திராவிடத் தலைவர்கள் மனிதநல மேம்பாட்டிற்காக அன்றைய தமிழ் மக்களின் மனங்களைத் தங்களது மொழி வல்லமையாலும், அது சார்ந்த செயல்பாட்டினாலும் தொட ஆரம்பித்தார்கள். அண்ணா பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும் தமிழ் மக்களின் அறியாமையையும் அதற்குக் காரணமான பழமைப் பிடிப்புக்களையும் மக்களுக்கு எடுத்துக்காட்டி விழிப்புணர்வையும், விடுதலையுணர்வையும் கொண்டுவர முயற்சித்தார்.

நாடு என்றால் பொது மரபினாலோ பொது மொழியினாலோ பொது வரலாற்றாலோ பரந்து விரிந்துபட்ட மக்கள் ஒரு பெருங்குழுவாக இணைந்து தங்களுக்கென்று வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் அரசை நிறுவி வாழ்பவர் என்றும் அந்த மண்ணிலேயே பிறந்து அந்த மண்ணிலேயே வாழ்ந்து முடியும் கூட்டம் என்றும் ஆங்கிலப் பேரகராதி விளக்கம் கூறுகின்றது.

ஒரு நாட்டினர் மொழி இனம், நாடு, மதம் போன்றவற்றை அடையாளங்களாகக் கொண்டிருந்தாலும் மொழியின் வாயிலாகவே அறிமுகப்படுத்தப்படுகின்றனர். உளவியல் அடிப்படையில் இனம், மொழி ஆகிய இரண்டிற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையாயினும், ஒரு நாட்டினரை அடையாளம் காட்டும் சிறந்த கருவியாக மொழியே விளங்குகின்றது. ஆங்கிலேயர், செருமானியர், பாரசீகர், இத்தாலியர் ஆகிய பெயர்கள் அனைத்தும் மொழியை ஒட்டி எழுந்தவையாதலால் ஒரு நாடு இனத்தைக் கொண்டும், மொழியைக் கொண்டும், இடத்தைக் கொண்டுமே வரையறுக்கப்படுகின்றது.

அண்ணா மாற்றத்தை முன்னிட்ட தன் கருத்துக்களைத் தன்னுள்ளிலிருந்து கொண்டு வருகிறார். மாற்றம், காலப்போக்கின் கண்ணோட்டம். நாகரீகம் கிராம மக்களுக்குச் செல்வதில்லை. அன்று இருந்த அவதியே இன்றும் இருக்கிறது. மேலை நாடுகளில் இதே

விவசாயம் நடத்தப்படும் விதத்தையும், அவர்கள் அங்கு கையாளும் முறைகளையும் கண்டவர் நம் நாட்டு விவசாயத்தையும் காணில் இதனைக் "கிராமவாசியின் கர்ம பலன்" என்று கூறுவாரேயன்றி நாட்டின் நலவாழ்வுச் சாதனம் என்று கூறார்" என்று அண்ணா கூறுகின்ற போது "தொடர் கசிவு" என்பது மூளையிலிருந்து அநர்த்தமாக உருவாவதில்லை மொழி வழிப் பிரகடனமாக அது உருக் கொள்வதாக உணர முடிகின்றது. "உழைப்பு இந்நாட்டில் மட்டுமே மிகமிக அலட்சியமாகக் கருதப்பட்டு வருகிறது. உழைப்பு மட்டுமா? உயர்வும் அப்படியே! ஏதோ மனிதன் பிறந்தான்! மாயப் பிரபஞ்சத்தில் சின்னாள் இருப்பான். பிறகு மறு உலகு சென்று மலரும் மணமும் போல இருப்பான் என்று கருதப்படும் நாடு இஃதேயன்றோ! ஆகவே தான் மனித உழைப்பு, உழைப்பிற்கேற்ற பலன் பெறாத முறையில் வகுக்கப்பட்டது. உழவு முறைக்குப் பலியாக்கப்பட்டு வருகிறது. எத்துணை சேதம். எவ்வளவு அமோகமான உழைப்பு வீணாகிறது! எத்தனை ஆயிரக் கணக்கானவர்கள் எலும்பு நொறுங்க வேலை செய்து வாழ்க்கையை நடத்துகின்றனர், அவ்வாழ்க்கையிலும் வெறும் நடைப் பிணங்களாகவன்றோ உள்ளனர்"[4] என்று அண்ணா வெளிப்படுத்துகின்ற போது சிறுசிறு இடைபாடுகளின் வழியாக மிகப் பெரிய ஒன்றை அறிவிக்கும் மனித மன அந்தரங்கப் பரிமாற்றம் உட்கொள்ளப்படுகிறது.

உயிர் - மொழியியல் என்பதன் மேலான கருத்தாக்கத்தை 1967ல் எரிக் லென்பர்க (Eric lenneberg) என்பவர் Biological Foundations of Language என்கின்ற கட்டுரையின் வழியாகத் தொடங்கி வைத்தார். அமெரிக்காவில் 1974ல் "Biolinguistics" என்று ஒன்று தனியாகப் பேசப்பட்டு இன்று அவற்றைப் பற்றிய சொல்லாடல்கள் பரந்துபட்ட அளவில் தர்க்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. அறிவியலைக் குறித்த பேச்சொன்றை ஆரம்பிக்கிறார் அண்ணா "விஞ்ஞானத்தின் சமீப காலக் குழந்தை டெலிவிஷன்! 'டெலிவிஷன் - இளையமகள்' என்றாலும் எல்லாரும் பாராட்டும் அழகும் - அறிவும் கொண்ட மகள் - விஞ்ஞானத் தாய்க்கு! அந்த டெலிவிஷனை, முதன் முதலில் இந்தியாவில் காட்சியில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு பிப்ரவரித் திங்களில், பம்பாயில் நடக்கவிருக்கும் அகில உலக ரேடியோ – எலக்ட்ரானிக் பொருட்காட்சியில், டெலிவிஷனை வைக்கப் போகிறார்கள்!"[5] என்பதாகத் தொடங்குகின்ற டெலிவிஷனைப் பற்றிய அவரது பேச்சு.

"விஞ்ஞானம் இந்த அளவிற்கு வளர்ந்து சென்றுள்ளது; ஆனால் இந்தியாவில் கப்பல் விட்டால் பூஜை - விமானம் பறந்தால் தீபாராதனை

என்று கற்காலக் காலண்டரைப் புரட்டுகிறார்கள்"! என்பதாக மற்றொரு கருத்தோட்டத்துக்குள் நுழைந்து கொள்கின்றது. அதோடு நின்று விடாமல் டெலிவிஷன் இந்த நாட்டிற்கு மிகமிகத்தேவை. இந்த டெலிவிஷன் மட்டுமல்ல; இன்னும் சக்தி வாய்ந்த டெலிவிஷன் தேவை! ரேடியோவில் “சீதா கல்யாணம்" நாடகமாக்கப்பட்டால் - ‘டெலிவிஷன்' தோற்றத்தில் என்ன தெரியும்? சீதை, வெல்வெட்டு செருப்பும்- ‘ராஜகுமாரி' பார்டர் போட்ட கிளிப்பச்சைப் புடவையும் நலுங்காமல்- பிரம்பு நாற்காலியில் அமர்ந்திருப்பது தெரியும்!"6 என்கின்ற முறையில் டெலிவிஷன் என்ற ஒன்றை வைத்துக்கொண்டு, ஒரு நாட்டின் காட்சிகளை அரசியல் ரீதியாக அங்கதப்படுத்துகிறார். “இந்த நாட்டையே ரேடியோ நிலையமாக்கி, டெலிவிஷன் முறையின் மூலம் - குரலையும் செயலையும், கேட்கவும், காணவும் செய்தால் எவ்வளவு வேடிக்கையாக இருக்கும்? பம்பாயில் நடக்கவிருக்கும் பொருட்காட்சியின் செயலாளர் ஒய்.ஏ. பசல்பாய், அண்மையில் தான் ஐரோப்பா சென்று திரும்பினார். அவர் ‘இந்தப் பொருட்காட்சி ஏற்பாட்டிலே டெலிவிஷனும் இருக்கிறது' என்று அறிவித்துள்ளார்".7 என்று சொல்வதன் மூலம் மனதில் தோன்றியதை மற்றவர்களுக்குக் காட்சிப்படுத்திக் காட்டுகிறார்.

அந்த டெலிவிஷனைப் போல் ‘சமூக டெலிவிஷன்' ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டால், இந்நாட்டில் உலவும் அர்த்த நாரீசுவரர்கள் அம்பலத்திற்கு வருவர்! நாக்குக்கும் - கரத்துக்கும் சம்பந்தம் வைக்காத குணசீலர்களின் குணக்கேட்டைப் படமாக்கிக் காட்டி, மக்கள் கைகொட்டிச் சிரிக்கச் செய்ய முடியும்! அதற்கு டெலிவிஷன் வேண்டும்!

ஆகவே தான், டெலிவிஷன் வேண்டும் - விஞ்ஞானத்தின் பெருமையைக் காட்ட மட்டுமல்ல - இந்நாட்டை விபரீதபுரியாக்கித் திரிவோரை நாட்டுக்கு அறிமுகப்படுத்த!"8 என்று அண்ணாவின் உயிர் மொழியியல் மெல்ல மெல்ல இறங்கி யதார்த்தத்தைத் தொடும் விதத்தை உணர முடிகின்றது.

உயிர் மொழியியல் என்பது ஒற்றைப் பரிமாண நிலையில் மொழிக்கு விளக்கங்கள் தருவதை விடுத்து, மொழி வழியாக உணரப்படுகின்ற பொருள் உயிரியல் முறைமைகளில் உள்ள குறிப்பிட்ட வேதியல் தன்மையினை அதன் துணைப் பிரிவுகளின் வழி உணர்த்துகின்றதா? என்பதைப் பற்றிப் பேசுவதாகும். அண்ணாவின் பேச்சு நிலைகளை உயிர்மொழியியல் வழி அணுகிப் பார்க்கும் போது மொழி வெவ்வேறு நிலையிலான விளக்கங்களைக் கூறுகிறது. இந்த உயிர்மொழியியல் ஒரு தனிமனிதன் தன்னுடைய பார்வையிலிருந்து வெளிப்படுத்துகின்ற மொழி, ஒலி, பொருள் கட்டமைப்பு என்ற அனைத்து

நிலைகளிலும் மனிதனோடு இணைத்து நிற்கின்ற நிலைப்பாட்டை உணர்த்துகின்றது. 18 – ஆம் நூற்றாண்டு அறிவியலாளரான நியூட்டனின் யாந்திரீகத் தத்துவத்தை, (Mechanical Philosophy) விலக்கி மனமும் உடலும் இணைந்து செயல்படுவதற்கு எந்தத் தடையுமில்லை என்பதனை முன்வைக்கின்ற உள்ளுணர்வு உணர்த்துதலில் மட்டுமே வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் இடம் பெற்றன. "மனது" என்பது 'அறிவின்' உயிருள்ள ஒரு பகுதியாக நிலை நிற்கின்றது என்று ஜோசப் ப்ரீஸ்ட்லி என்கின்ற வேதியியலாளர் கூறுகின்றார். ஒரு செய்தியை எடுத்தாளுகின்ற போது அச்செய்தியை அடியாழத்திலிருந்து வெளியிட முடியும் என்பதில் தான் மொழிப் பங்கீடு ஈடு இணையற்றதாக அமைந்து விடுகின்றது.

"உழவு பயனற்றதா! அல்ல, உழவு நம் நாட்டவருக்குப் பசிபோக பண்டந் தரவல்ல தன்றோ? ஏன், செல்வம் கொழித்து நம் நாட்டவர் சீருடன் வாழவும், தேயிலைத் தோட்டம் சென்று தேம்பி வாழும் தமிழர் யாவரும் தமிழகத்திலேயே நன் மதிப்போடு வாழவும் முடியும்? எப்போது? உழவு வெறும் உழைப்பாக மட்டுமின்றி உழவுத் தொழிலாக, விஞ்ஞான முறையைத் துணை கொண்டு நடத்தப்படின்"9 என்று பாட்டாளி மக்களின் வாழ்விற்கான வழிமுறையை எடுத்துரைக்கிறார். அதே நேரத்தில் "தொழிற்சாலைகள் நவீன முறைக்கு ஏற்ற விவசாய மெஷின்களை உற்பத்தி செய்து தரவும், விவசாயம் வேறு தொழிலுக்குத் தேவையான உற்பத்திப் பொருள்களைத் தரவும், ஒன்றிற்கொன்று துணைய - ஒன்றுடன் ஒன்று இணைந்து அமையப் பெற்றால் தரித்திர நாராயணனோ, அவன் பெயர்கூறிப் பிழைக்கும் திருட்டுக் கூட்டமோ இங்கு இராது. என்று வரும் அந்நாள்? எங்ஙனம் வரும்?"10 திராவிடம் தனியரசு பெற்ற பின்பே இத்தகு முற்போக்கை மனித உலகம் காண இயலும் என்று தொழில் வளர்ச்சிகளைப் பற்றிப் பேசும் போதும் மொழிக் கட்டமைப்பு செயல்படும் சித்திரத்தை உணர முடியும்.

இப்போதும் நம்மால் புரிந்து கொள்ளப்படாத கட்டமைப்பு நிலைகளின் மேலாகவே இவை கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. அற்புதத்தைத் தரக்கூடிய புதிய உயிரியல் சார் கருதுகோள்கள் அறிவார்ந்த நிலையிலான முற்போக்குத் தன்மையில்தான் சிந்தையின் அடிப்படைத் தத்துவங்கள் நிலை நிற்கின்றன. மனத்தின் செயல்பாடுகள் இயல்பானதாகவும் அவை நரம்பு மண்டலங்களோடும், மூளையோடும் உடலின் பிற இயக்கங்களோடும் இணைந்த நிலையில் நடக்கின்றன என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

18 – 19 ஆம் நூற்றாண்டுகளில் பொருள்களின் தோற்றுவாய்கள் உருவாக்கங்கள் போன்றவையும், இயக்கங்களின் முனைப்புகளும் கடவுளின் நிபந்தனையின் பேரில் வருவதாகக் கருதினர். அதைப் பதிவும் செய்தனர். 1929 இல் பெர்ட்சன் ரசல் பௌதீக விஞ்ஞானங்கள் வேதியியல் விஞ்ஞான நிலைப்பாடுகளைச் சுருக்கிவிடக் கூடாது என்றார். அதன் பிறகு மீண்டும் 'சிந்தை' 'மனம்' 'மூளை' பற்றிய விவாதங்கள் உலக அரங்கின் பேச்சிற்கு வந்தன.

உயிர் மொழியியல் என்பது மனித உயிரியலில் சில கூறுகளை மைய நிலைக்குக் கொண்டு வருகின்றன. மொழி பற்றிய புரிதலையும், பயன்பாட்டையும் பொறுத்து மொழி என்பது விவரணைக்கு உட்படுத்தப்படுகின்றது. Faculty Of Language மொழியின் உட்கூறுத் தன்மையாகக் கொள்ளப்படுகின்றது. அதனால் பாலூட்டிகள், பூச்சிகளின் சைகை மற்றும் உள் உணர்வு வெளிப்பாடுகள் போன்றவையும் மொழியின் உட்கூறுத் தன்மையுடனாக இணைத்துப் பேசப்பட்டன.

மூளைக்குள்ளிருந்து வருகின்ற சிறுசிறு இடைபாடுகள்தான் சிந்தனை என்பது டேவிட் ஹ்யூமின் கருத்து. டார்வின் நூறாண்டுகளுக்கு முன்பே "சிந்தனை" என்பது மூளையிலிருந்து வெளிப்படும் 'தொடர் கசிவு' என்றும் "புவிஈர்ப்பு விசையினை" விட அற்புதமான ஒன்றாக "சிந்தனை" என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்றும் கூறியுள்ளார். புவிஈர்ப்பு விசை என்பது எவ்வாறு ஸ்தூலத் தன்மையில் அளவிட்டுத் தொட்டுக் காட்ட முடியாத நிலையில் உள்ளதோ அதே போன்று 'சிந்தனை' என்பதும் வரையறுத்துக் கூறமுடியாத நிலையில் இருக்கின்றது.

விஞ்ஞானத்தில் புதிதான நிறைய பார்வைகள் உள்ளுணர்வு வெளிப்பாட்டில் முன்வைக்கப்பட்டவை – பலவாக இருந்தவை நிரூபிக்கப்படாமல் இருந்தாலும் அவற்றை பரிசோதனை முயற்சிக்கு உட்படுத்துவதற்கும், அனுபவத் திறனுக்கு உட்படுத்துவதற்கும் இவற்றைப் பற்றிய கருத்தாக்கங்களே வழி வகை செய்வனவாக இருக்கின்றன. 'சிந்தனை' என்பதன் மேலான கருத்தாக்கமும் இந்த நிலைப்பாட்டில் நிற்கக் கூடியதாகும். சிந்தையின் கடந்த காலத் தொகுப்பு நிலை பற்றி கி.பி 2000 க்கு முன்புவரை பரவலாகப் பேசப்பட்டது. இதன் இறுதியில் வெர்னோன் மௌண்ட்காசில் என்கின்ற நரம்பு அறிவியலாளர், "சிந்தையிலிருந்து உற்பத்தியாகின்ற பொருள் வெளிப்பாட்டு நிலைகளே மனம்" என்று கொள்ளப்படுகின்றன என்கிறார். கோட்பாடுகளாக அவை இதுவரை விவரிக்க முடியாத நிலையிலும் உள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆனால், போராட்டத்திற்குட்பட்ட ஒரு தலைவன் தனது சிந்தனையை எங்கிருந்து வைக்கிறார் என்பது புதிரானது.

மனித இயல்புகளை அறிவதற்கும் அவர்களுடைய செயல்பாட்டிற்கான அடியாழத் தன்மைகளை அறிவதற்கும் மொழி பக்கபலமாக இருக்கின்றது. பேசப்படுகின்ற வார்த்தைகளை நேர்வினை எதிர்வினை என்ற இரண்டு போக்கிலும் ஆய்ந்து பார்க்கின்றபோது மனித மொழியின் நோக்கங்கள் ஓரளவிற்குப் புலனாகின்றன. இருபதாம் நூற்றாண்டில் மொழியில் தத்துவம் மற்றும் உளவியல் சார் நிலை என்கின்ற இரண்டும் இரு பாகங்களாகவே செயல்பட்டாலும் மொழியும் அறிவும் இணைத்தெண்ணக் கூடியனவாகவே வந்து ஆய்வுப் பரப்பினுள் சேர்ந்திருக்கின்றன. கடந்த காலத்தில் செயற்கை ரீதியாக இவை பிரித்து வைக்கப்பட்டிருந்தாலும் கடவுள் மறுப்புக் கொள்கை, விதிக்கோட்பாடு போன்றவைகளைக் கேள்விக்குட்படுத்திய இருபதாம் நூற்றாண்டு பல்வேறு மனித உளவியல் காரணங்களால் இவற்றை ஒருங்கிணைத்தது. மொழியையும், அறிவையும் தனித்தனியே பிரித்துப் பார்த்து ஆராய்ந்து விளக்கக் கூடிய போக்குகள் குறைந்துவிட்டன என்றுகூடக் கூறலாம். அறிவியல் தகவல் பரிமாற்ற வலைப் பின்னல் தொகுதிகளில் மொழி கொண்டுள்ள தலையாய பிரச்சினைகளைக் கூடப் புதிய பரிமாணங்களுக்குட்படுத்திப் பார்க்கின்ற போக்குகள் வளர்ந்து விட்டன. மனிதச் சிந்தனையை ஊக்குவிப்பனவாகவும் இருக்கின்றன. இருபத்தோராம் நூற்றாண்டில் கணினி மொழியைக் கட்டமைக்கின்ற வேலையைச் செய்கின்றது. என்றாலும் மனித அறிவு என்பது கணிணி கட்டமைக்கின்ற, எல்லைகளைக் கடந்ததான தரவுகளைக் கொண்டிருக்கின்றது என்பதும் உண்மையாகும். சொற்களின் குணாம்சம் (Verbal behavior) குறித்து பி.எ.்.ப் ஸ்கின் போன்றோர் 1950-களிலேயே பேசியுள்ளனர் என்றாலும் மொழியைத் தத்துவம் மற்றும் உளவியல் சார்ந்து ஆய்வுக்குட்படுத்தித் தெளிவாகப் பேசுகின்ற ஏதோ ஒன்றை நிறைவு செய்வதற்குப் பல ஆய்வுகள், தவறுவதாகவே உணரப்பட்டு வருகின்றன. மட்டுமல்லாமல் சொல்வழிக் கூறப்படுகின்ற பொருட்களின் எல்லைகள் ஒரு கட்டுக்குள் அடங்காதவைகளாகவே இருக்கின்றன. மொழியில் சொற்களும், வாக்கியங்களும் அவை சார்ந்த கட்டமைப்புக்களும் இத்தகைய கட்டுக்கடங்காத் தன்மையின் வழியாகவே தங்களைப் புதுப்பித்து நிலைநாட்டிக் கொள்வனவாகவும் இருக்கின்றன.

அண்ணாவின் மொழி என்பது புரியாத புதிர்களை உடையதான வாக்கியக் கட்டமைப்புகளுக்குள் தன்னை அடைத்துக் கொண்டு புதிய முறைகளில் அமைக்கப்படவில்லை. ஆனால், தனது மூளை சிந்தித்ததை மொழி வழி வெளிப்படுத்துவதற்கு அண்ணா பல முறைகளைப் பயன்படுத்தியுள்ளார். அவை, உள மொழியியல் தன்மைக்கும் செயல்பாட்டு மொழியியல் தன்மைக்கும் உட்படுவனாக இருக்கின்றன.

தமிழன் அடிமையாக இருக்கக் கூடாது. சிந்திக்க வேண்டும் என்பதைக் கூறுவதற்காக அண்ணா மிகப்பெரிய அளவிலான கதையாக 6000 பேருக்கு ரோம் வீதிகளில் தூக்கு மரங்கள் நட்ட கதையை எடுத்துக் கூறுகிறார். ரோமில் தூக்கு மரங்களில் ஏற்றப்பட்டவர்களைக் கூற உயர்வு கேட்கும் நம்முடைய தமிழகத்து மக்களோடு ஒப்பிடுகிறார்; வருணனை வார்த்தைகளில் கூறினாலும் சொல்ல வேண்டிய செய்தி பதிய வேண்டிய விதத்தில் மக்கள் மனதில் பதிந்தாகவே வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் எழுதிச் செல்வதை "உணர முடிகின்றது". இந்த உணர முடிகின்றது என்று கூறுகின்ற பட்சத்தில்தான் அண்ணாவின் மொழி ஓர் உணர்த்துதல் முறையில் அவரால் பயன்படுத்தப்படுகின்றது என்பது தெரிய வருகின்றது.

"மண் எங்கும் இரத்தம்! விண் புகை மயம்! வீதிகளடங்கிய வீடுகளில் பிணங்கள்! ஸ்டாலின் கிராட் இடி கட்டடங்கள், கருகிய இடங்கள், கண்ணை மருட்டும் காதைக் குடையும் வேட்டொலியும் கொண்ட பயங்கர நாச பழிவாங்கும் பட்டினமாக, பலிப்பீடமாக, பசிதீராப் புலியாக இன்று இருக்கிறது. ஒரு தெருவேனும் உருவாகவில்லை, ஒரு வீடேனும் முழுதாகக் கிடையாது"[11] ஒரு நாட்டின் புரட்சிக் காட்சியை இன்னொரு நாட்டிற்கு எடுத்துக் கூறத் தன்னுடைய மொழியைச் சாதகமாக்கிக் கொண்டுள்ள வித்தகன் அண்ணா என்றே கூற வேண்டும். மரபார்ந்த ரீதியிலான உணர்வுகள் எதுவும் இந்த மொழிக் கட்டமைப்பினுள் இல்லை. ஆனால், மரபு வழியாகத் தமிழன் பயன்படுத்தி வந்துள்ளவைகளாகத் தமிழ்மொழிச் சொற்கள் இதனுள் இடம்பெற்றிருக்கின்றன. இங்கே ஒரு மொழி வல்லுநன் எந்த அளவிலான அறிவார்த்தத்தோடும், எந்தத் தன்மையிலானஅறிவார்த்தத்தோடும் மொழியை வெளிப் படுத்தியுள்ளான் என்பதே ஆராய்வதற்குரியதாகிறது. மொழியின் உளவியல் தன்மையென்பது தமிழகச் சூழலுக்கேற்ற முறையில் தன் இருப்பிடத்தை அண்ணாவின் மொழி வழியாகத் தாங்க வேண்டியவைகளைத் தாங்கி அமைந்திருக்கிறது என்று கூறலாம்.

"கப்பல் நஷ்டத்துக்கும், கப்பல் உற்பத்திக்கும் உள்ள புள்ளி விவர பேத விளக்கத்துக்கோ பிறவற்றுக்கோ சோவியத் நாட்டிலே நேரமில்லை.

ஸ்டாலின் கிராபிலே எத்தனை படை?

இன்னம் எவ்வளவு வேண்டும்?

லெனின் கிராபிலே எதிரி எவ்வளவு தூரம் பின் வாங்கினான்?

காகசசிலே கணவாய்களிலும் மலைப் பகுதியிலும் காசாக் வீரர்கள் கண்காணித்து வருகின்றனரா?

காலினின் முனையிலே ஜெர்மன் படைகள் களைத்துக் கிடக்கின்றனவா? வாரனேஷில், ரிஜாவில், நமது படைகள் முன்னேறினவா?"[12]

என்று கேட்டுக் காரியத்தைக் கவனிக்கவே, ஸ்டாலினுக்கு நேரமிருக்கிறது என்று அண்ணா ரஷ்ய நிகழ்வைத் தமிழ் மக்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாகத் தமிழன் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் எழுதுகின்றார். பல இடங்களின் பெயர், கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் அன்றும் இன்றும் இருந்து வருகின்றது. ஆனால் அண்ணா "தம்பிக்குக் கடிதம் என்ற ஓர் உணர்வுப் பூர்வ ஒன்றிப்பின் தலைப்பில் தமிழ் நாட்டு மக்களுக்குப் பாட்டாளி மக்களின் விடுதலையை நடத்தி வெற்றி கண்ட ரஷ்யாவைக் கண்முன் கொண்டு வருவது தமிழக மக்களுக்கு ரஷ்யாவின் மேல் இரக்கம் வர வேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக, ஒன்றை வெளிப்படையாகக் காட்சிப் படுத்தி அது போன்ற ஒரு காட்சியை இத்தமிழகம் காணவேண்டும் என்ற உளப்போக்குக் குறியை அண்ணா தன் மொழிவழியாக உணர்த்தியுள்ளார்.

மொழியைப் படைப்பாக்க ரீதியில் பயன்படுத்தத் தெரிந்த மேதை அண்ணா. படைப்பாக்க ஆளுமைத் திறனை வெளிப்படுத்தும் போதும் அதன் இசைவிலும், பாராளுமன்ற நடவடிக்கைகளைக் கையாளும் போது அதற்கேற்ற இசைவிலும், மொழி வழிப் பிரகடனங்களை முன்வைக்கும் போது அதற்கேற்ற இசைவிலும், பொது மக்களிடம் ஒரு தலைவனாக நிற்கும் போது அதற்கான இசைவிலும் அவருடைய மொழி வெளிப்படுகிறது. "நியூட்டனின் புவி ஈர்ப்புவிசை" அறிவியல் பூர்வமாக எவ்வாறு மெய்ம்மையில் மெய்ப்பிக்கப்படுகிறதோ அது போன்று மொழியும் அறிவிலிருந்து வீசியெறியப்பட்டு, அது சென்று சேர்கின்ற சமூகத்தில் ஈர்ப்பு விசையைப் பெற்று உரிய பலனை உருவாக்கக் கூடியது என்பதனை அண்ணா உணர்ந்திருந்தார்.

மொழியென்பது மனித உயிரிதன் இருத்தலைப் பரிபூரணமாக்கிக் கொள்வதற்கான தேடலின் விளைவில் தோன்றியதென்றாலும், அது அறிவார்த்தத் தன்மையுடன் வெளிப்படுகின்ற போது அது சாதாரணத் தன்மையில் பயன்படுத்தப்படும் மொழிப் பயன்பாட்டிலிருந்து வேறுபடுகின்றது என்பதை உணர முடியும். "அறிவார்த்தக் கட்டமைப்பு" என்பதனுள் செயல்படுவதனால்தான் மனித மொழி மிருகங்களின் மொழியிலிருந்து வேறுபடுகின்றது.

நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான சொற்களை நம் நாவிலிருந்து வெளிவருபவைகளாகத் தொடர் பிரயோகம் செய்து கொண்டிருந்தாலும் குறிப்பிட்ட சொற்கள் நம் நாவிலிருந்து

பிரத்யேகமாக வெளிவருபவையாகும். குறிப்பாக "விடுதலை" போன்ற சொற்கள் தொடர் பிரச்சினைகளுக்குரியனவாகி விடுகின்றன.

"சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டிக்க நடைபெற்ற போரின் போது, வீரதீரச் செயல் புரிந்த சர்தார்களுக்கெல்லாம், அழைப்பு அனுப்பி இருந்தனர் - விருந்துக்கு வருமாறு. அனைவரும் வந்தனர். – ஆனால்....?

விருந்து மண்டபத்திலே போடப்பட்டிருந்த ஆசனங்களின் அமைப்பைக் கண்டதும், சர்தார்கள் முணுமுணுக்கலாயினர் - முகம் சுளிக்கலாயினர்.

"இரு வரிசைகள் உள்ளன – சரி அதோ ஓர் ஆசனம் முகப்பிலே உள்ளதே – அது ஏன் - யாருக்கு?" என்றோர். கேள்வி பிறந்தது.

"அந்த ஆசனத்திலேதான் அஞ்சா நெஞ்சன் சிவாஜி அமரப் போகிறார்!" என்று பதிலளித்தார்.

"அமரட்டும் - ஆனால், அந்த ஆசனமும், இரு வரிசைகளிலே எதேனும் ஒன்றோடு சேர்த்துப்போடப்பட்டிராமல் தனியாக, இரு வரிசைகளுக்கும் மேலாகப் போடப்பட்டிருப்பானேன்? என்ன பொருள் இதற்கு? என்று கேட்டனர்.

"விருந்துக்கு அவர் தலைமை தாங்குபவர் என்ற முறையிலே இது போல் அமைத்தோம்" என்று பதிலளித்தனர்.

"அதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம்" என்றனர் சர்தார்கள்.

களத்திலே ஒரு முறையேனும் சிவாஜியின் சொல்லை ஆட்சேபித்தறியாத சர்தார்கள், ஆசன அமைப்பை ஆட்சேபித்தனர்."[13] என்று அண்ணா "திராவிட நாடு" பத்திரிக்கையில் இவற்றை எழுதுவதன் மூலம் எதை மக்களுக்கு அறிவித்தார் என்பது தெரியும். எத்தகைய வீரதீரச் செயல் புரிபவனாக இருந்தாலும் சுயநல லாபங்களுக்காக அவன் செயல்களை ஏற்றுக் கொள்ளும் "வருணாசிரமம்" என்னும் அதிகாரம் அவனை உயர் இடத்தில் வைத்துப் போற்றுவதற்குப் பொறாமையுடன் காழ்ப்புணர்ச்சியுடனான இழி செயலுக்கு "வருணாசிரமம்" என்பதனைப் பிடித்து முன்னேறிக் கொள்கின்றது என்று கூறுகின்றார்.

நமக்கு எப்பொழுதோ வரலாறுகளின் ஒரு பகுதியாக "மராட்டிய மன்னன் சிவாஜி" என்று தமிழ்நாட்டுப் பாடத்திட்டத்தில் புகுத்தப்பட்ட சிவாஜியின் வாழ்க்கை வரலாற்றில் அவர் சாதி ரீதியாக ஒடுக்கப்பட்டார் என்பதைக் கேட்டிருக்கிறோமா? அண்ணா எழுதுகிறார் மொழியைக் கலைத்துவக் கருத்தாக்கத்தோடு இணைத்துக் கொண்டு, இருக்கின்ற கட்டமைப்புக்களைக் கடந்த ஒன்றிற்காக அண்ணா வெளிப்படுத்த

வேண்டிய தேவையில் இருந்திருக்கின்றார். இதற்காக வரலாற்றுத் தொகுப்பமைவின் பின்னணியில் தன் எழுத்துக்களைத் தருபவராக விளங்குகின்றார்.

"போரிடத்தான் சிவாஜியை அனுமதித்தனர். ஆபத்தைப் போக்கத்தான் அனுமதித்தனர்! - அரசாளும் உரிமை தர — ஆகமம் இடந்தரவில்லை — ஆரிய தர்மம் அனுமதிக்கவில்லை"[14] என்று வீரன் சிவாஜி அரசாளும் உரிமை ஏற்பதற்கு மராட்டியத்திலே பார்ப்பனரிட மிருந்தும், குலப்பெருமை பேசும் குடிலர்களிடமிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியதை வர்ணிக்கிறார். சிவாஜிக்குப் பட்டம் சூட்டுவதை விடுவித்து சிவாஜிக்காக உழைக்க வந்த பாலாஜிக்குப் பட்டம் சூட்டலாம் என்ற முடிவைக் காகபட்டர் என்கின்ற பிராமணன் முன்வைப்பதைப் பேசுகிறார். ஆதிக்கம் ஒருவன் இன்னொருவனுக்காக பேசுவதைத் துண்டிக்கும் வஞ்சத்தை எப்படிக் கையாளுகிறது என்பதை அண்ணா விளக்குவது தனிக் கலையாக இருக்கிறது.

"பைத்தியக்காரா! இதோபார்! நீ காயஸ்த வகுப்பு - ஷத்திரியனாகலாம்! சிவாஜி, ஷத்திரியனாக முடியாது. இப்போது சம்மதம் என்று சொல், உனக்கு ராஜ்யாபிஷேகம் செய்து வைக்கிறேன்! முடித்துக் கொள்! மராட்டியத்துக்கு, மகாராஜனாகு" என்று காகபட்டர் புதிதாக ஒரு பாணம் போடுகிறார். பாலாஜி திடுக்கிட்டுப் போகிறான்"[15]..... என்று காகபட்டரின் செயல்களை அண்ணா பின் வருமாறு வருணிக்கிறார்.

"முதலில் மறுத்தார் - பிறகு சம்மதித்தார் - மீண்டும் மறுத்தார் - மறுபடியும் சம்மதித்தார்! நாலு காரணம்! நாலு வேதம் கற்றவர் அல்லவா!

உழைக்காமல் திண்ணும் வருணாசிரமத்தாரை அண்ணா புள்ளி விபரங்களோடு விவரிப்பதை இன்றைய உலகமும் உணர வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றது. "கடைசியில் காகபட்டர் தீட்டிய முறைப்படி, சடங்குகளும் குறைவின்றி நடைபெற்ற பிறகு, போரிட்டுப் போரிட்டு நிறுவிய ராஜ்யத்துக்கு சிவாஜி மகாராஜனாகிறார். மராட்டியம் களிக்கிறது — கண்களுக்கும் கருத்துக்கும் விருந்து. மன்னர் சிவாஜி முடிதரித்துக்கொண்ட காட்சி என்று மக்கள் கூறிக் களிக்கின்றனர். இந்த விருந்துக்கு முன்பு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பிராமணக் குடும்பங்கள் பட்டாபிஷேக வைபவத்தை முன்னிட்டு, விருந்துண்டனர்...!

1674, ஜீன் மாதம் 16ஆம் தேதி 426லட்ச ரூபாய் செலவில், காகபட்டார் ஆசியும், வேதாகம சம்மதமும் பெற்று நடத்தப்பட்ட ராஜ்யாபிஷேகத்தின் மூலம் ஷத்திரியராக்கப்பட்டார் சிவாஜி. இதிலே

காகபட்டர் ஒரு இலட்ச ரூபாயும், பிராமணோத்தமர்கள் தட்சணை மூலம் பல இலட்சமும், துலாபாரத்தின் மூலம் மேலும் பல இலட்சமும் பெற்றதாக, வைத்யா எனும் வரலாற்று வல்லுநர் கூறுகிறார். மராட்டிய மண்ணிலே குருதியைக் கொட்டி மாவீரன் சிவாஜி கண்ட ராஜ்யத்துக்கு, மன்னனாவதற்கு, காசிவாசி காகபட்டரின் காலடியில் பணம் கொட்ட வேண்டி நேரிட்டது. விருந்து! மராட்டியம், இந்த விருந்தையும் கண்டது – முன்னம் நடைபெற இருந்து, குலப் பெருமை பேசினவர்களின் போக்கின் காரணமாக, வீர சிவாஜிக்கு விசாரம் தந்த, அந்த விருந்தையும் கவனப்படுத்திக் கொண்டனர்.

இவ்வளவு இன்னலுக்குப் பிறகு மராட்டியத்தின் மணிமுடி சிவாஜிக்குக் கிடைத்தது – காகபட்டரின் சாஸ்திரோக்தமான சடங்குகளின் மூலம், சிவாஜி ஷத்திரியராக்கப்பட்டார்! ஆனால் ....? சிவாஜி, பட்டாபிஷேகம் செய்து கொண்ட நாளை, நன்னாளாக, பொன்னாளாகக் கொண்டு, மராட்டிய மண்டலத்தில் ராஜ்யாபிஷேக சகாப்தம் ஒன்று துவங்கினார்! ஆனால்...

பீஷ்வாக்கள் ஆட்சி வந்ததும் சிவாஜியின் ராஜ்யாபிஷேக சகாப்தம் கை விடப்பட்டது.

அது மட்டுமா! 1928 ல் சென்னை உயர்நீதி மன்றத்திலே வழக்கே வந்துவிட்டது – மராட்டியர் ஷத்திரியர்களா, அல்லவா என்பது பற்றி!

தஞ்சையில் சிவாஜியின் உடன்பிறந்தார் அமைத்த அரசு பற்றிய வழக்கொன்று சென்னை ஹைகோர்ட்டுக்கு வந்தது. 229 பக்கங்கள் கொண்ட தீர்ப்பு. இதிலே, மராட்டியர் ஷத்திரியர்களா என்பது பற்றி வாதப்பிரதிவாதங்கள் விரிவாக விளக்கப்பட்டு முடிவு கூறப்பட்டது. முடிவு என்ன! மராட்டியர், ஷத்திரியரல்ல. சூத்திரரே என்பதே தீர்ப்பு! வீரம், தியாகம், அறிவு ஆற்றல் போதவில்லை – காகபட்டர் தேவைப்பட்டார். சிவாஜி ஷத்திரியராக!! காகபட்டர்! அவர் காட்டிய ஏடுகள்! பெற்ற தட்சணை! செய்த சடங்குகள் எவை பற்றியும் சென்னை உயர்நீதி மன்றம் கவலை கொள்ளவில்லை வேறு தீர்ப்பு அளித்தது!"16

ஒடுக்கப்பட்டவன் மன்னனாக இருந்தாலும் ஒடுக்குகின்றவன் தனக்கேற்ப சட்டதிட்டங்களை வைத்துக்கொண்டு சூட்சுமத்தில் பிழைக்கும் அதிகார வர்க்கத்தை தனிமொழியினால் அண்ணா நேரடியாகச் சாடவேயில்லை. அங்கத நடையில் குறிப்பிடவுமில்லை. ஆனால் வரலாற்றைக் கதை போன்று தன் எழுத்துக்களில் நடத்திச் செல்வதன் மூலம் தான் வெளிப்படுத்த நினைத்த உண்மையை நிலைபெறச் செய்கின்றார். மொழி ரீதியாக, இனரீதியாக, நாட்டு

ரீதியாக ஒடுக்குதலுக்குட்பட்டு சரியான ஆளுமைக்காகத் தமிழகம் தவித்துக் கொண்டிருந்த காலத்தில் அண்ணா புது உருத்தரித்த பேச்சில், எழுத்தில், நடப்பில் தன்னைச் செயல்படுத்தியிருக்கின்றார்.

இனம் என்பது உயிரின் அடிப்படையிலான உடலியல் கூறுகளின் வழி அறியப்படுவது ஆகும். உடல் தோற்றத்தாலும் இரத்தத்தின் இயல்புத் தன்மையினாலும், மனிதன் வளர்த்துவரும் பழக்க வழக்கங்களாலும் ஓர் இனமாக மக்கள் குழுவை அறிய முடிகின்றது. இதனால் சிக்கலான நீண்டகாலப் பரிணாமப் போக்கில் மனித குலத்தில் உண்டான உயிரியல் பாகுபாடே ஓர் இனமென்று கொள்ள முடிகிறது. மேலும் வம்சம், இரத்த உறவு, பரம்பரை என்ற மூன்றின் அடிப்படையால் இணைந்திருக்கும் மக்கள் கூட்டமே 'இனம்' என்று குறிப்பிடப்படுகின்றது. தமிழினத்தை "மொழி வாயிலாக உருவான இனம்" என்றே பண்டு தொட்டு அடையாளப்படுத்தி வந்திருக்கின்றனர். மொழியைக் கொண்டு இனம் அறியப்படுகின்றமையால் ஒரு மொழி பல ஆதிக்க மொழித் தாக்கத்தினால் சீரழிவிற்கு உள்ளாவது போன்று பல்வேறு இனத்தாக்குதலில் ஓர் இனம் சீரழிவது உறுதியாகிறது. எனவே இனப்பாதுகாப்பிற்கு மொழி வழியான ஆதிக்கத் தாக்குதலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தநிலை உலகில் அனைத்து மொழிகளுக்கும், இனங்களுக்கும் உரிய ஒன்றாகும்.

தமிழினம் சிறப்பாக வாழ்ந்த ஓர் இனம். இதன் செழுமைக்கு எடுத்துக் காட்டுகளாக அதன் பண்டைய இலக்கியங்களும் இலக்கணங்களும் விளங்குகின்றன. இந்தி, ஆங்கிலம் போன்ற வேற்று மொழித் தாக்கம் ஏற்பட்ட விதம் அதிகார நிலை நிறுத்தலின் காரணமாகவே தமிழை அப்புறப்படுத்த நினைத்தது.

"சிலம்பு ஒலித்த திருநாட்டிலே இன்று செய்வதென்னவென்று தெரியாதோரின் புலம்பொலியல்லவா கேட்கிறது! சீறும் புலியெனச் சிங்களத் தீவின் மீது படையெடுத்துச் சென்ற இனத்தான், கள்ளத் தோணி என்றல்லவா ஏளனம் செய்யப்படுகிறான்? முத்தெடுத்து மூலை முடுக்குகளில் உள்ள நாடுகளுக்கு எல்லாம் அனுப்பிய தமிழன் இன்று பிச்சையெடுத்துப் பிழைக்க அனுமதி கிடைக்கும் நாடு எது என்றல்லவா கேட்கிறான். ரோம் நாட்டு வீரர்களைக் கட்டியடித்து விளையாடியது போதும் கண்ணாளா! என்றழைத்துக் கண்டாரைக் கொல்லும் கட்டழகிகள் அந்தக் கவர்ச்சியினைப் பெற்றது. தத்தம் நாட்டினர் நெய்து அனுப்பிய பொன்னார் இழையும் துகிலும், என்று கவிவாணர் நமக்குக் கூற இன்று கைத்தறியாளர் தம் கைக் குழந்தையை, காற்படி அரிசிக்கு விற்றிடும் கொடுமைக்கல்லவா ஆளாயினர். கலம் காட்டினர் தமிழர்

என்கிறது கல்வெட்டு; கல் உடைத்துப் பிழைக்கக் கண்காணா நாடு செல்கின்றனரே அவர்தம் வழி வந்தோர்...."[17] என்று அண்ணா நன்றாக வாழ்ந்த தமிழினம் மைய அரசின் ஆதிக்கத்தினால் இன் வேறுபாட்டிற்குட்பட்டுத் தரம் தாழ்த்தப்படுவதை எழுதுகின்றார். நேரு வடபகுதியில் உள்ள இனத்தார் நலிவடைகின்ற போது தாமும் நலிவடைந்து பதட்டமுடன் நேரில் சென்று கண்டு அவர்களின் குறை தீர்க்க முற்பட்டுள்ளார். ஆனால் தெற்கில் உள்ள திராவிடர்கள் இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் தாக்கத்திற்குட் படுகின்ற போது நேரு அவற்றிற்குச் செவிசாய்ப்பதேயில்லை என்று அண்ணா நேரடியாக அறிவிக்கிறார்.

"சிலோன் விஷயத்தைப் பாருங்கள் அங்கு நமக்கு (தமிழினத்திற்கு) எவ்வளவு கொடுமை செய்கிறார்கள் பதறுகிறார்களா? (மைய அரசினர்) அதற்காகப் பரிகாரம் தேடுகிறார்களா? இல்லையே. ஆனால் தென்னாப்பிரிக்காவில் ஒருவனுக்கு ஒன்று நடந்து விட்டால் எவ்வளவு ஆத்திரம் காட்டுகிறார்கள். ஏன்? அங்கே வடநாட்டுக்காரன். சிலோனில் இருப்பவன் தென்னாட்டுக்காரன். அது தான் வித்தியாசம்"[18] அன்றைய மத்திய அரசாங்கம் திராவிட இனத்தைக் கண்கொண்டு பார்க்கத் தவறிய அரசாக இருந்தது. அதனால் திராவிட இனம் மத்திய அரசின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுத் தன் சுயாட்சியைத் தேடி, தன் இனத்தை வலுப்பெறச் செய்வது திராவிடனாகிய ஒவ்வொருவனுடைய கடமை என்று அன்றே அண்ணா வலியுறுத்தத் தவறவில்லை. இன்றும் இலங்கைத் தமிழர்கள் ஒடுக்கப்படுவதும், தமிழ்நாடு இதற பிற நாட்டினரால் ஒடுக்கப்படுவதும் அன்றே வட இந்தியவர்கள் விதைத்துச் சென்ற விதையில் முளைவிட்ட ஆலமரங்களாகவே படர்ந்திருக்கின்றன. அண்ணா யார் யாரெல்லாம் சனாதனக் கோட்பாடுகளைத் தகர்த்தெறிய வேண்டுமென்று கருதுகிறார்களோ, யார் யாரெல்லாம் மக்கள் உள்ளத்தில் படிந்துள்ள மாசுகளைத் துடைத்துச் சீர்திருத்த வேண்டுமென்று முயற்சி செய்கிறார்களோ அவர்களையெல்லாம் திராவிடர்கள் என்றும் அவர்கள்தான் திராவிடர்களாக இருக்கத் தகுதி உடையவர்களென்றும் அறிவித்தார். அண்ணாவால் திராவிடர்களுக்கான விளக்கம் அன்றே செம்மையாகக் கூறப்பட்டது. தத்துவத் துறையிலும், நீண்ட நாட்களாக இருந்து வரும் மடைமைகளையும், முன்னேற்றத் தடைகளையும், குறைபாடுகளையும், நீக்கவும், மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி ஒரு சமுதாயமாக ஆக்கவும் சிறப்பாகத் திராவிட இனத்துக்கு இருந்துவரும் சமுதாய இழிவு, மத, மூட நம்பிக்கை, சாதிப் பிரிவு வேறுபாடு அடியோடு அழிக்கப்பட்டு ஆரியக் கொடுமையிலிருந்து மீளுவதற்கு – திராவிடர்கள் முன்வர வேண்டுமென்று வற்புறுத்தினார்.

இன்று ஆதி திராவிடர்கள் என்று சொன்னால் அரசாணைப்படி பறையர், அருந்ததியர், குறவர், தீயர், புலையர் போன்ற இனத்தவர்களை மட்டுமே குறிப்பதாக இருக்கின்றது. அப்படியானால் மற்ற இனத்தவர் அனைவரும் மேற்கூறிய கருத்துப்படி ஆரிய இனத்தவராகவே கொள்ளப்படுகின்றனர். இந்தியாவைச் சொந்தம் கொண்டாடும் இனங்களும் இவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள்தான் கால்டுவெல் போன்ற வரலாற்றாசிரியர்களால் எடுத்துக் காட்டப்பட்ட திராவிடர்கள். தமிழினத்தையும், தமிழ் மரபையும் தமிழரின் அற நெறியையும் போற்றிப் பாதுகாத்து வந்திருக்கும் பழங்குடிகளாக இவர்களே இருந்திருக்கின்றனர்.

இந்தியா என்ற பெரிய பெயரின் கீழ் சிறுசிறு இனங்களாக நிலவி ஒரு பெரிய கண்டத்தைப் போற்றி வந்த பாவப்பட்ட மக்கள் பெருங் கலாச்சாரத்தின் கீழ் ஒடுக்கப்படுவதை அண்ணா உணர்ந்திருந்தார். இந்தியம் என்பதும் தேசியம் என்பதும் இந்திய ஒருமைப்பாடு என்பதும் ஒற்றைக் கலாச்சாரத்தை முன்வைத்து அடையாளம் ஆகும். அது ஆதிக்கச் சாதியினர் சிறுசிறு இனங்களை ஒடுக்குவதற்குத் தேடிய ஆயுதம் என்பதை அண்ணா உணர்ந்து செயல்பட்டார். திராவிட இனம் என்பது முற்றிலும் ஆரிய இனத்திலிருந்து வேறுபட்டது. பல்வேறு இனங்கள் ஒன்றிணைந்து வெள்ளையரை விரட்ட முற்பட்டிருந்தாலும் இந்தியா என்ற ஒருமித்த உணர்வு என்பது போலியாகக் கட்டமைக்கப்பட்டதோடு, சாதி ரீதியான ஒடுக்குதலை அதன் உள்ளீடாகக் கொண்டிருந்தது என்பதே உண்மையாக இருந்தது. வெள்ளைக்காரர்களை விரட்ட ஒருமித்த காரணத்தினால் இந்திய இனம் என்ற ஒன்று தோன்றிவிட முடியாது என்பதை நடப்புலகினைக் கண்ட அண்ணா எடுத்துரைத்தார். "இந்தியர்கள் என்று ஓர் இனம் தோன்றவில்லை, அவர்களுக்கு முன்னும் இருந்ததில்லை, இனியும் தோன்ற வழியில்லை"[19] என்பது அண்ணாவின் ஆணித்தரமான கருத்தாக இருந்தது. இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னுள்ள நிலைமையைப் பற்றிப் பேசும்போது அண்ணா,

"ஆங்கில அரசு நம்மைப் பிடித்துக் கொண்டிருந்தது. அதனை அகற்ற வேண்டி அனைவரையும் ஒரு முகாமுக்குள் கொண்டுவர வேண்டியதாயிற்று. ஆகவே தமிழினம், பிறஇனம், தமிழ் மரபு, மற்றையோர் மரபு என்பன பற்றிப் பேசவும், எண்ணிடவும்கூட நேரமில்லை. வெள்ளையன் அந்நியன்; விரட்டப்பட வேண்டும்; அதற்கு வீரர் திரண்டிடல் வேண்டும். அதிலே வடக்கு என்றோ தெற்கு என்றோ பேதம்பேசுதல் ஆகாது என்று தேசியம் பேசப்பட்டது. அந்தத் தேசியம் ஏற்றுக் கொள்ளவும் பட்டது. அதன் பயனாக நன்மை ஒன்று விளைந்தது. வெள்ளையாட்சி ஒழிந்தது. எதிர்பாராத வகையில் தீமை ஒன்று வந்துற்றது. தமிழன் தன் இனம், மரபு, நாடு மறந்ததே அந்தத் தீமை"[20]

என்று கூறுவதன் மூலம் திராவிடத் தமிழினம் என்பது தனியான ஒரு இனம் என்பதை உறுதிப் படுத்துவதோடு நெருக்கடிகளை முன்வைத்து வடக்குப் பகுதியுடன் இணைந்து செயல்படுவது நிரந்தர இணைப்பிற்குப் பாலம் வகுக்காது என்றார். ஆனால், மத்திய அரசு அதனையே ஒரு பெரிய காரணமாகக் கருதி ஒன்றுபடுத்தி தமிழ் இனத்தின் தனி இயல்பை, தனி மரபை அழிக்க முயன்றதோடு தமிழர்களைப் பிற – அந்நிய மொழிகளை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தி அதிகாரம் செலுத்தி உரிமைகளைப் பறிக்கின்றது என்பதனை உணர்வுப் பூர்வ, அறிவுப் பூர்வ நிலையில் மக்களுக்கு விளக்கினார்.

பிறநாட்டுக் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளைத் தெரிந்து கொண்டு செயல்படுத்துவதில் அண்ணா லெனினைப் போலவே செயல்பட்டுள்ளார். ஒரு தலைவன் பிறநாட்டு இழப்புகள் உட்பட வரவுகள் அனைத்தையும் தெரிந்து கொள்ளும் போது மனிதனுக்குள் உட்படுத்தப்படுகின்ற செயல்படுகின்ற செயல்களின் ஏகதேசத் தன்மைகளின் ஒற்றுமைகளை ஓரளவிலான விளைவுகளாக எதிர் பார்க்க முடியும் என்பதைச் செயல்படுத்தி நிறுவினார். புத்தக சாலைகளின் மேல் பெரும் பிரியத்தை அண்ணா லெனினைப் போலவே வைத்திருந்தார். காரல் மார்க்ஸ் ஏங்கெல்ஸின் கொள்கைகளை ரஷ்யாவிற்குள் கொண்டுவர லெனின் பட்டபாடு புரட்சியின் ஒரு பாகமாகவே நடக்கின்றது. அண்ணாவும் தான் படித்ததோடு எழுதியதோடு மக்களைப் படிக்கவும் எழுதவும், விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் நிர்ப்பந்தித்தார் என்றே சொல்லலாம்.

இந்த நாட்டிலே நம்மவர் வீடு கட்டுவர்; அதிலே பல அறைகளும் அமைப்பர். மாட்டுக் கொட்டகை ஒரு பால்; பொக்கிஷ அறை ஒரு பால், சமயலறை மற்றொரு பால்... மற்றதை மறக்கினும் ஆண்டவனுக்குப் பூசை செய்ய அறை-அமைக்க மட்டும் மறவார். ஆனால் அறிவூட்டும் ஏடுகள் நிறைந்த படிப்பறை பற்றிய பகற்கனவும் காணார்; படிப்பறை மிகவும் முக்கியமானது; அவசியமானது அலட்சியப்படுத்தக் கூடியதன்று. ஆயினும் அது அவர்தம் சிந்தனையில் தோன்றாது.

என்று அண்ணா படிக்கும் ஆர்வமில்லாத தமிழ் மக்களைச் சாடுகின்றார்.

சட்டசபையில் கேள்விகளுக்குப் பதிலளிக்கின்ற போது விளக்கமான வரலாற்றுச் செய்திகளைப் பதிலாகத் தருவதோடு அவற்றைச் சரியான விவரணைத் தோரணையோடு கொடுப்பது பல உண்மைகளை வெளிக்கொண்டு வருவதாக உள்ளது.

"கட்டபொம்மன் குடும்பம், சிறைபட்ட போது ஆறு பேர்களைக் கொண்டதாக இருந்தது. அவர்களுக்கு 15 வராகன் (52.80) ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அத்தொகை பின்னர் 40 வராகனாக (ரூ140) உயர்த்தப்பட்டது. அக்குடும்பத்தில் ஒருவராகிய கம்பெனி செல்வம் ரூ52.80 பெற்று வந்தார். மற்ற பங்குகள் அனைத்தும் கால்வழி உரிமை உடையோர் இல்லாத காரணத்தால் நிறுத்தப்பட்டன என்றுத் தோன்றுகிறது. கம்பெனி செல்வம் 1871-இல் இறந்தபோது அவருக்கு வழங்கப்பட்ட உதவி ஊதியத் தொகை ரூ47.80 ஆக மாற்றப்பட்டது. அத்தொகை அவரது சகோதரர் தளவாய் சுப்பிரமணியத் துரைக்கு வழங்கப்பட்டு வந்தது. சுப்பிரமணியத் துரைக்கு 1.11.1944 - இலிருந்து திங்களுக்கு 5 ரூபாயாக உதவித் தொகை தற்காலிகமாக உயர்த்தப்பட்டது. அவர் 1.6.1958-இல் இறந்துவிட்டார். அந்த உதவித் தொகை அதனைப் பெறுகின்றவர் இறக்கும் போது இறுதி அடைந்துவிடத்தக்க ஆயுள் உதவியாகும். எனவே அவருடன் அது (உதவித்தொகை) அடியோடு நிறுத்தப்பட்டது.

காலஞ்சென்ற சுப்பிரமணிய துரையின் மகள் திருமதி. பாஞ்சாலியம்மாள் அவரது தந்தை பெற்றுவந்த ஊதியத்தைத் தொடர்ந்து வழங்குமாறு அரசாங்கத்தை வேண்டினார். இந்த வேண்டுகோளை இந்திய அரசு ஏற்க மறுத்துவிட்டது. திருமதி. பாஞ்சாலியம்மாளிடமிருந்து மேற்கொண்டு வரப்பெற்ற மனுக்களையும் இந்திய அரசாங்கம் நிராகரித்தது.

இந்தக் காலகட்டத்தில், மத்திய அரசை நடத்திச் சென்றது காங்கிரஸ் அரசாங்கமாகும். மாநிலத்தில் நடைபெற்ற ஆட்சியும் காங்கிரசினுடையது தான். இருப்பினும் கட்டபொம்மன் பரம்பரை யினருக்கு முந்நூறு ஆண்டு காலமாகத் தொடர்ந்து வெள்ளையர் அரசால் ஓய்வூதியம் கொடுக்கப்பட்டு வந்தது. சுதந்திரப் போராட்டத்தின் முதல் சங்கை ஊதியவன் கட்டபொம்மன். அவனது பரம்பரையில் வந்துதித்த பாஞ்சாலியம்மாளுக்கு ஓய்வூதியம் ரூ 52.80 மிகமிகச் சாதாரண ஊதியம் தான். ஒரு பெரிய தொகையுமல்ல. அதையே காருண்யமிக்க காங்கிரஸ் சர்க்கார் மறுத்துவிட்டது. சுதந்திரப் போராட்ட காலத்தில் வெள்ளையனுக்கு அடிபணிய மாட்டேன் என்ற வீரக்குரல் எழுப்பியவன் கட்டபொம்மன். நாங்கள் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தோம் என்று மார்தட்டிக் கொள்ளும் காங்கிரஸ்காரர்கள் ரூ 52.80 கொடுக்க மறுத்தது ஏன் என்று புரியவில்லை"[21] என்று பேசும் அண்ணா எதிர்த் தரப்பினரை வார்த்தைகளால் அவசியமற்றுச் சாடுவதை விடுத்து புள்ளி விவரங்களோடு உண்மைகளை எடுத்துக் கூறுகின்ற தனிப் போக்கைக் கொண்டிருந்தார்.

அரசாங்கம் ஏற்பட்டது மனித சமுதாய நலனுக்காகத்தான். மக்களின் பண்பாடு சார் வாழ்க்கை அவர்களின் ஒத்துழைப்பு போன்றவைகளின் மேலே கட்டப்பட்டதாகத்தான் அரசாங்கம் இருந்து வருகின்றது. மக்களுடைய அறிவைப் பெருக்குவதற்கும், மக்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் அரசாங்கம் என்பது தோற்றுவிக்கப் பட்டது என்பதனை அண்ணா பலமுறை எடுத்துரைத்திருக்கின்றார்.

மாணவர்களைப் பற்றிச் சொல்லுகின்றபோது முந்தைய தலைமுறையைச் சேர்ந்த மாணவர்களைவிட இந்தத் தலைமுறையில் இருக்கிற மாணவர்கள் உலகத்துப் பொது அறிவையெல்லாம் பெற்றுக்கொண்டு, உரிமையுணர்ச்சியுடனும் கடமை உணர்ச்சியுடனும் செயல்பட எவற்றையெல்லாம் முன்னெடுக்க வேண்டும் என்ற முற்போக்கு உணர்ச்சியுடன் செயல்படுகின்றார்கள் என்று பாராட்டிப் பேசியிருக்கின்றார். மாணவர் சமுதாயத்தை வாழ்த்துவதிலும், வழிநடத்துவதிலும் பெரும் அக்கறை காட்டினார். சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்ட போதும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஏற்பட்ட போதும் மாணவர்கள் என்.சி.சி.யில் சேர்ந்தும் ஹோம் கார்டுகளாகப் பணியாற்றியும் செயல்பட்டதை நினைத்து பெருமைப்பட்டுள்ளார். பொதுவாகக் கல்வியின் தரம் நன்றாக உயர்ந்து இருப்பதற்குக் காரணம் மாணவர்களின் வளர்ச்சி நிலைகள் தான். மாணவர்களிடையே பொது அறிவு வளர்ந்திருக்கிறது. இதனால் மாணவர்களின் வளர்ச்சிக்கேற்பக் கல்வித்தரம் உயரவேண்டும் என்பதனை அண்ணா உணர்த்தினார்.

உலக அறிவை முன்னிட்ட பாடத்திட்டங்கள் வர வேண்டும் என்பதை அண்ணா குறிப்பிட்டுக் கூறினார். கல்வி விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் இன்னும் அதிக அக்கறை காட்டும் என்றார். பாடத்திட்டங்கள் மாற்றியமைப்பதன் மூலம் உலக அறிவையும் பொது அறிவையும் அதிகம் கொடுக்கக் கூடிய வகையில் இந்தக் கல்வி மாற்றப்படலாம் என்பதைக் கருத்தில் கொண்டு கூறவும், செயல்படவும் செய்தார். அதற்கு எடுத்துக்காட்டாக அண்ணா பின்வருகின்ற செய்தியைக் கூறுகின்றார்.

இப்போது பழைய ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் பழைய முறைப்படியே கற்றுக் கொடுத்து வருகிறோம். பாடங்களைக் கூடப் பார்க்கலாம். நீங்கள் மகாபாரதக் கதையில் இருந்து "கண்ணன் வெண்ணெய் திருடிய கதையை ஒருவர் முதுகின் மேல் ஒருவராக நான்கு பேர்கள் நிற்பதை, அவர்கள் மேல் கண்ணனை நிறுத்தி - உரி - உரியின் மேல் வெண்ணெய்த் தாழி — அந்தத் தாழியில் இருக்கிற வெண்ணெயைக் கண்ணன் எடுத்துத் திண்பது போல் படத்தைப் போட்டு

அதன் கீழே 'கண்ணன் தின்னும் பண்டம் என்ன?'- வெண்ணெய் என்று தான் காட்டியிருப்பார்கள். புராணம் கூடாது என்பதற்காக நான் பேசுவதாக யாரும் நினைக்க வேண்டாம். மாலை நேரத்திலே மக்களிடத்திலே சொல்வது, இந்தப் பாடம் சின்னவயதிலே மாணவர்களுக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறது. பள்ளிக் கூடத்திற்குப் பக்கத்துத் தோட்டத்திலே மாங்காய் இருக்குமானால் அதைப் பறிப்பதற்கு ஏமாளியாகிய பையன்களைக் குனியவைத்து, அவர்கள் மீது ஏறி நின்று கொண்டும், மாங்காய் பறிப்பதற்கும் தான் நாம் கற்றுக் கொடுக்கிறோம். அப்படிப்பட்ட பாடத்திட்டங்களைமத் திருத்தியமைக்கின்ற விஷயத்தில் இது பகுத்தறிவா – சுய மரியாதையா? என்று பயப்படாமல் உலக அறிவு என்ற வகையில் கவனம் செலுத்தினால் நல்ல பயன் அதிகமாகக் கிடைக்கும்".[22]

அண்ணாவின் பேச்சு கல்விமானியக் கோரிக்கையின் மீதான விவாதமாக அமைகின்ற போது வறட்டுத்தனமாக இல்லாமல் 'லாஸ்கியை' வேறொரு கோணத்தில் உபயோகப்படுத்தி விவாதங்களை வழங்கியிருக்கின்றார்.

பிரிட்டிஷ் அரசாங்கம் 1857ஆம் ஆண்டிலேயே இந்து மதத்தையும், சம்பிரதாயத்தையும் நாங்கள் காப்போம், அவற்றில் தலையிடமாட்டோம் என்ற பிரகடனப்படுத்தி அதிகாரத்தைப் பாதுகாப்பாகத் தக்க வைத்துக் கொண்டது. இந்து மதத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு தமிழர் சமூகத்தில் மூட நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களை வசதிவாய்ப்புக்களோடு வளரவிட்டது. மறுமலர்ச்சி என்ற ஒன்று அவசியம் என்பதை உணர்ந்த அண்ணா தன்னுடைய ஆற்றல் முழுவதனையும் அதற்காகப் பயன்படுத்தினார். பொருளாதார ஏற்றத்தாழ்வு, சாதி மதவேற்றுமை, கடவுளின் பேரால் நடக்கும் சமயக் கொடுமைகள் ஆகிய பிரச்சினைகளுக்குத் தேவையான மாற்றங்களைத் தம் எழுத்தால், பேச்சால், தொடர் செயல்பாடுகளால் முன்வைத்தார்.

ஆண்களுக்குச் சரிசமமாகப் பெண்கள் நடத்தப்பட வேண்டும். பெண்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் சமவாய்ப்பு, சமூகத்தில் சம உரிமை போன்றவற்றைப் பற்றிப் பேசியதோடு சொத்துரிமை, திருமண முறிவு உரிமை, மறுமணம் செய்து கொள்ளும் உரிமை, விருப்பப்படி வாழும் உரிமை போன்றவற்றையும் ஓர் அரசு கணக்கில் கொள்ள வேண்டுமென்றார். சில பணிகளுக்குப் பெண்களையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொன்ன அண்ணா பெண்களுக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கிட வேண்டும் என்று வலியுறுத்தி அதனை அரசியலில் செயல்படுத்தவும் செய்தார்.

சமத்துவம், பொதுவுடைமை போன்ற புரட்சியின் விருட்சங்களாகப் படிப்பவனைப் புரட்சிக்குள் கொண்டு செல்லும் தோணிகளாக இருந்தாலும் செயலாக்கத்தில் ஒரு புரட்சியை எவ்வாறு திட்டமிட்டு உண்டாக்க வேண்டும்; அதற்கான வழிமுறைகள் என்னென்ன என்பதனை அவை தெளிவுபடுத்தவில்லை என்பது இலெனினால் உணரப்பட்டது. புரட்சியைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வந்து அதனை மெல்ல மெல்ல நீட்டிச் சென்று எவ்வாறு வெற்றிப்பாதையைத் தொட வேண்டும் என்பதை இலெனின் திட்டமிட்டுச் செய்தார். நீண்ட காலச் சீரழிவுகளை ஒரு நாட்டிலிருந்து அடியோடு களைய அனைத்து சமூகத்தரப்பு நிகழ்வுகளையும் உண்மையின் பால் வழிநடத்த இலெனினுக்கு மிகப்பெரிய திட்டமிடல் தேவைப்பட்டது. இதே திட்டமிடலைப் பின்பற்றி செயலுக்குட்படுத்தி பலநாடுகள் சமத்துவ சோசலிச நாடுகளாகப் பொதுவுடைமை நலவாழ்வு வாழும் மக்கள் சமுதாயத்தைப் படைத்திருக்கின்றன. அதனால்தான் இலெனின் வழி இலெனினியம் என்று சொல்லப்படுகின்றது.

# 3.தமிழின உணர்வில் அண்ணா

1949ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் தி.மு. கழகத்தைத் தோற்றுவித்து அதன் தலைவரானார். அடுத்த ஆண்டு 30-6-1950-இல் நிகழ்த்திய பேச்சின் முக்கிய பகுதிகளாகக் கீழ் வருபவை அமைகின்றன.

சாக்ரடீஸ், வால்டேர், இலெனின் ஆகிய மூவரது புரட்சியின் கூட்டுறவு இயக்கம் திராவிடர் இயக்கம்.

வைதீகர்களை வீதி சிரிக்க வைத்தார் சாக்ரடீசு. தொடர்ந்து வால்டேர் அப்பணியைச் செய்தார். அந்தப் புரட்சிப் பணியைக் கலிலியோ, ரூசோ, விக்லிப் போன்று பலர் பல்வேறு காலகட்டங்களில் தொடர்ந்தனர்.

பின்னர் முதலாளியின் கொடுமையைக் களையப் புரட்சி செய்தார் மார்க்சு. தொடர்ந்து முதலாளிகளை எதிர்த்துப் போராட இலெனின் தோன்றினார்.

கூர்முனை பேனா கொண்டு அரண்மனைகளை அஞ்ஞானிகளின் இருப்பிடத்தைப் பழமையின் கோட்டைகளைத் தாக்கி வெற்றி கொண்டான் வால்டேர். அதற்குப் பின்னர்தான் புரட்சித் தேவன் இலெனின் போராடி வெற்றி பெற முடிந்தது. சமுதாயத் துறையில் ஒரு புரட்சியை உண்டாக்கிய பின்னர்தான் மக்கள் இலெனினை வரவேற்றனர்.

முதலில் சாக்ரடீசு, பின்னர் வால்டேர், அதற்குப் பின் இலெனின் இந்த மூன்று சம்பவங்களும் வேறு வேறு காலத்தில் நடைபெற்றன. இவ்வளவும் சமுதாயப் புரட்சியாகவே நடைபெற்றன. ஆனால் இவர்களிடையே வேறு வேறு சீர்திருத்தங்கள் இல்லாமல் இல்லை. சாக்ரடீசை அடுத்து பிளேட்டோ, வால்டேரை அடுத்து ரூசோ, மார்க்சை அடுத்து இலெனின். இப்படி மூடநம்பிக்கை எதிர்ப்பும், அறிவுப் புரட்சியும், சமூகப் புரட்சியும் எங்கும் பரவின. ஆனால் நம் நாட்டில் இம் மூன்றையும், நம் இயக்கம் ஒருங்கே நடத்த வேண்டியிருக்கிறது. இதனால்தான் நம் புரட்சி மூன்றாம் புரட்சிகளின் ஒரு கூட்டாய் இருக்கிறது.

முதன் முதலிலே மக்களுக்கு அறிவுப் புரட்சியை உண்டாக்கிய பின்னர்தான் மதம், கலை, பண்பாடு ஆகியவற்றில் மக்களைத் திருத்த முடியும்.

வெள்ளுடை வேந்தர் நீதிக்கட்சியின் தந்தை சர்.பி. தியாகராயர் தான் முதலில் நம் அறிவுக் கண்களைத் திறந்தவர். அதைக் கொண்டு

தான் நாம் இன்று மதத்தை எதிர்க்கிறோம். மூடப் பழக்க வழக்கங்களை முறியடித்து நாட்டின் நலிவைப்போக்கப் பாடுபடுகிறோம் (பக் 17-19) என்று அண்ணா தெளிவாகத் திராவிடர் இயக்கத்திற்கும் இலெனின் இயக்கத்திற்கும் உள்ள பிணைப்பை அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இலெனின் தான் மாணவனாக இருந்த காலகட்டங்களில் முற்போக்குக் கொள்கைகளைத் தெள்ளத்தெளிவாக ஆராய்ந்து மனத்திலேற்றி தன்னுடைய வாழ்வின் இறுதிவரை அக்கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு உழைத்ததைப் போல, அண்ணாவும் மாணவராக இருந்த காலகட்டத்திலேயே பொது உடைமை இலட்சியங்களை ஏற்றுத் தமிழ் நாட்டின் இலெனின் என்று மதிக்கத்தக்க அளவிற்குத் திராவிட இயக்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் கவனமாகக் கொண்டு சென்றார்.

முதலாளித்துவத்தின் கேடுகள் எல்லா நாடுகளுக்கும் ஒரு பொதுவான விளைவினையே உண்டாக்கும் என்று மார்க்ஸ் நினைக்கவில்லை. அதனால் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பாதையைக் கடைப்பிடித்து முதலாளித்துவத்தை அழிக்கமுடியும் என்று எப்பொழுதுமே கூற அவர் முன்வரவில்லை. முதலாளித்துவம் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியான போக்கைக் கொண்டிருக்கவில்லை என்பது உண்மை. ஆனால் அது எவ்வளவு நச்சுக்களைப் பரப்பும் என்பதை மார்க்சைப் படித்து இலெனின் அறிந்து கொண்டார். இவர்களின் அணுகுமுறையை அடியொற்றியே பலவற்றுக்கான பரிசீலனைகளை அண்ணா நடத்துகின்றார்.

திராவிடர் என்றால் யார் என்ற கேள்விக்குப் பண்டைக் காலம் தொட்டுப் பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை இலக்கியம் சார்ந்தும், மனித வரலாறு சார்ந்தும் சான்றாதாரங்களைக் கொண்டமைகின்றன. ஆனால் அண்ணா அவர்கள் 'திராவிடர்' என்றால் யார் என்பதற்கு ஒரு நிகழ்வைச் சாட்சியாக்கி விளக்கும் விதத்தைப் பார்க்கலாம். ஒரு மேதின நிகழ்வன்று,

"இந்த ஆண்டு மே தினவிழாவில் திராவிடமுன்னேற்றக் கழகத்துக்கு ஒரு தனிச்சிறப்பு என்னவென்றால் கவிஞர் ஹரீந்திரநாத் சட்டோ பாத்யாயா நம் கழகம் சார்பாகக் கூடிய கூட்டத்தில் பேசியதாகும்"[23] என்று தனது பேச்சைத் தொடங்குகின்றார் அண்ணா.

"வான முகட்டிலே, நிலா பட்டொளி வீசிப் பறக்கிறது. நிலா மலர்ந்த இரவிலே நாம் கூடியிருக்கிறோம். இன்று நல்ல நிலவு

இருப்பதால்தான் கவிஞர் ஹரீந்திரநாத் அழகாகப் பேசினார். நிலா மலர்ந்த இரவிலேதான் கவிஞர்களுக்கு அழகிய கவிதைகள் தோன்றும்..."[24] என்று பேச்சை வளர்க்கும் அண்ணா,

"மேலே நல்ல நிலவு; கீழே பார்த்தால் ஒரே இருள் இங்கு மக்கள் குழுமியிருக்கும் மாபெருங் கூட்டத்தின் அளவைத் தொலை தூரத்தில் இருக்கும் வீதியிலே செல்லும் மோட்டார்கள் உமிழ்கின்ற விளக்கு வெளிச்சத்தின் மூலமாகத்தான் கண்டுபிடிக்க முடியும். அவ்வளவு தூரத்திற்கு மக்கள் இந்த மேதினத்தில் குழுமியிருக்கிறார்கள். மேதினச் சிறப்புகளைப் பற்றியும் உலக நிலைமையைப் பற்றியும் கவி ஹரீந்திரநாத் விளக்கியதோடு தான் ஒரு திராவிடர் அல்ல என்று குறிப்பிட்டார். அது கொஞ்சம் சிந்திக்க வேண்டிய செய்தியாகும்"25 என்கிறார். ஹரீந்திரநாத் குறிப்பிட்டதைத் தவறென்று சொல்லாமல் சிந்திக்க வேண்டிய செய்தியென்று குறிப்பிட்டுப் பின் தன் விளக்கத்திற்கு வருகின்றார்.

"யார் யார் சனாதனக் கோட்டைகளைத் தகர்த்தெறிய வேண்டுமென்று கருதுகிறார்களோ, யார் மக்கள் உள்ளத்தில் படிந்துள்ள மாசுகளைத் துடைத்துச் சீர்திருத்த வேண்டுமென்று எண்ணுகிறார்களோ, யார் யார் மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்க வேண்டுமென்று முனைகிறார்களோ அவர்களெல்லாம் திராவிடர்கள். அவர்கள் வங்கத்திலே பிறந்தாலும் சரி, சிந்துவிலே இருந்தாலும் சரி அவர்கள் திராவிடர்கள்தான். திராவிட நாடு பலபேரை சுவீகாரம் எடுத்திருக்கிறது. திராவிட நாட்டுக்கு – ஹரீந்திரநாத் சுவீகாரப் பிள்ளையாகக் கிடைப்பாரானால் அதை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்போம்" என்று அண்ணா தெளிவான விளக்கம் தருகின்றார். அண்ணா 'திராவிடர்' என்ற சொல்லிற்குத் தருகின்ற விளக்கத்தை முன்னிட்டே அதே பொருண்மைச் சூழலில் இன்று "தலித்" என்ற சொல்லுக்கான விளக்கமும் முன் வைக்கப்படுகின்றது. அண்ணா, அன்றைக்கே ஒரு இனத்தைக் குறிக்கின்ற ஒரு சொல்லுக்கான உலகத்தை முற்போக்கு நிலையில் சமூகச் சூழலை மையமிட்ட விளக்கத்தோடு எடுத்துரைக்கும் மனப் பக்குவம் பெற்றிருந்தார்.

திராவிடக் கட்சி தோன்றிய காலத்தில் அதன் உறுப்பினர்களுக்கு மாஸ்கோ கூலிகள், துரோகிகள், கம்யூனிஸ்டுகள் என்ற பட்டங்களைப் பழிச் சொற்களைப் போல் எதிர்த்தரப்பினர் வழங்கியதாக அண்ணா கூறுகின்றார். "நம்முடைய காங்கிரஸ் தோழர்கள் ஒரு காலத்திலே நம்மை தேசத் துரோகிகள், கம்யூனிஸ்டுகள் என்றார்கள். இப்பொழுது நம்மை கம்யூனிஸ்டுகள் அல்ல என்றாலும் - கருங் கம்யூனிஸ்டுகள்

(Black Communist) என்று சொல்லுகிறார்கள். அகராதியில் Black Communist என்ற புதிய பதம் சேர்க்கப்படுவதற்காக நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்"[26] என்கிறார் அண்ணா. அதாவது பார்ப்பனர்கள் அதிகமாகக் கூட்டுச் சேர்கின்ற கட்சியில்லாதவர்கள் கருங்கம்யூனிஸ்டுகள் என்ற பெயரிலும், 'கருங்காலிகள்' அதாவது எதற்கும் அடங்காதவர்கள் (புரட்சி செய்பவர்கள்) கருங்காலிகள் என்ற பதத்திற்கு இணையான பெயரிலும் அவர்கள் வழங்கப்பட்டார்கள் என்பது அண்ணா கூறுவதிலிருந்து தெரிகின்றது.

பொதுவுடைமைக் கட்சி அக்காலகட்டத்தில் வைத்த தீவிரக் கருத்துக்களை மறுத்து அண்ணா பலாத்காரத்திலே நமக்கு நம்பிக்கையில்லையென்று சொல்கின்றார். "ஒரு புரட்சியை உண்டாக்கிய பின்னர்தான் மக்கள் லெனினை வரவேற்றார்கள். ஒரு வால்டேர் தோன்றிய பின்னர்தான் ஒரு லெனின் தோன்ற முடிந்தது. லெனின் தோன்றுவதற்கு முன் ஒரு வால்டோ, ஒரு ரூஸ்ஸோ தோன்றியாக வேண்டும். போப்பின் கொடுமையைக் களைந்து எறிய – உலகம் தட்டையாக இல்லை, உருண்டையாக உள்ளது என்று சொல்ல – அண்டத்தில் உள்ளவற்றைத் துரதிருஷ்டிக் கண்ணாடியில் கண்டு தெரிவிக்க, அலை கடலின் ஆழத்தை அறிந்து கூற, பல அறிஞர் தோன்றிய பாதையை அழகுறச் செப்பனிட்ட பின்னர் தான் புரட்சித் தேவன் லெனின் தோன்றி வெற்றியுடன் உலாவ முடிந்தது."[27] என்கின்ற அண்ணாவிற்கு இலெனின் தாக்கம் இருந்திருக்கின்ற அதே நேரத்தில் உலக மகா புரட்சியாளர்கள் அனைவரின் புரட்சிப் பாதைகளையும் உள் வாங்கிய போக்கில் தமிழகத்தில் எதனைச் செயல்படுத்தலாம் என்ற தெளிவுடன் அண்ணா செயல்பட்டிருக்கின்றார்.

அதனால்தான் நம் நாட்டிலே உண்மைச் சரித்திரம் நிலவ வேண்டுமானால் சாதிபேதம் ஒழிய வேண்டும் என்றார் அண்ணா. சாதிக் கோட்டையை இடித்துத் தகர்த்தால்தான் - அடிப்படை இறுகிக் கெட்டியாக இருக்கும் மூடப்பழக்க வழக்கங்களை முறியடித்து அதற்கு முற்றுப்புள்ளி வைத்தால்தான் அடிப்படை பலமாக இருக்கும். ரஷ்யாவிலே அடிப்படை பலமாக இருந்ததால்தான் ஜார் அரசன் கவிழ முடிந்தது. ஜார் அரசன் கவிழ்ந்த பின்னர்தான் மாஸ்கோ மணம் மாநிலம் முழுவதும் கமழும் நிலை ஏற்பட்டது. எதிர்ப்புப் புரட்சியை ஆங்கிலத்தில் கவுண்டர் ரிவல்யூஷன் (Counter Revolution) என்று சொல்லுவார்கள். நம் நாட்டிலே நடந்தது 'எதிர்ப்புப் புரட்சி' என்று அண்ணா அன்றே குறிப்பிட்டுள்ளார். 1990க்குப் பின்னர் தான் தமிழ் இலக்கியம், இலக்கியம் சார் கருத்து முன்வைப்புகள், இலக்கிய அரசியல்' கட்டுரைகள் போன்றவற்றில்

பேசவும், செயல்படவும் செய்துள்ளனர். ஆனால் அண்ணாதான் எடுத்துக் கொண்டுள்ள புரட்சி சார் நடவடிக்கைகளைச் சரியாக அடையாளம் கண்டு 'எதிர்ப்புப் புரட்சியென்று' கூறி வழிநடத்துகின்றார்.

இன்று உலகமயமாதலால் ஏற்படும் அடையாள இழப்புகள், பொருள் இழப்புகள், நாட்டின் உன்னதத் தன்மைகளின் இழப்புகள் என்று இழப்புக்களை அடுக்கிக்கொண்டே போகக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் "இன்னும் இந்தியாவில் மேல்நாட்டு மூலதனம் கோடிக்கணக்காக வந்து குவிந்து கொண்டிருந்தது. டில்லியில் இந்து பத்திரிக்கையின் நிருபரான தோழர் சிவராவ் 'பண்டித நேரு அமெரிக்காவுக்குக் கருப்பு யானைகளை அனுப்புகிறார். அதற்குப் பதிலாக, அமெரிக்கா, இந்தியாவுக்கு வெள்ளை யானைகளை அனுப்புகிறது' என்று வெள்ளையானை என்பதனை அமெரிக்க டாலர்களுக்குப் பதிலாகக் கூறியுள்ளார்"28 என்பதை அண்ணா எடுத்தாளுகின்றார்.

"சுதந்திரம் பெற்றவுடனே கடன் வாங்கும் நிலை சர்க்காருக்கு ஏற்பட்டது. இந்தியாவுக்குக் கடன் தரலாமா என்பதை விசாரித்தறிய 14 அமெரிக்கர் கொண்ட தூது கோஷ்டியொன்று இந்தியாவுக்கு வந்தது. அவர்கள் தாஜ்மகாலைக் கண்டு களிக்க வரவில்லை! கங்கையில் மூழ்க வரவில்லை! காவேரியில் நீராட வரவில்லை! அவர்கள் வந்தது, இந்தியாவில் எவ்வளவு பொன் இருக்கிறது? தேயிலைத் தோட்டங்கள் எவ்வளவு இருக்கின்றன? தொழில் வளர்ச்சி எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது? என்பதையெல்லாம் தெரிந்து செல்லத்தான்"[29] என்று சொல்லும் அண்ணா அமெரிக்காவிலே நேருவுக்கு மிகப் பெரிய வரவேற்பு இருந்ததையும், அதனைப் பத்திரிக்கைகள் பிரபலப் படுத்தியதையும் விளக்கமாகக் கூறுகின்றார். இதற்குக் காரணம், நம் நாட்டிலே மக்களிடத்திலே செல்வாக்குப் பெற்றவர்கள் யார் யாரோ அவர்களையெல்லாம் வரவேற்றால்தான் அமெரிக்கர்கள் தங்களால் சாதிக்க முடியுமென நினைத்திருந்தனர் என்பதையும் கூறினார். நேருவை அமெரிக்க முதலாளிகளிடம் சிக்க வைப்பதற்காகவே அவர்கள் வரவேற்புக்கு மேல் வரவேற்பு செய்தனர் என்பதனை அண்ணா வெளிப்படையாக் கூறினார்.

"இந்தியாவிலே உணவுப் பஞ்சம்; கோதுமை உங்கள் நாட்டிலே வேண்டிய அளவு உள்ளது. மக்களினமும், விலங்கினமும் உண்டு மிகுந்ததை விலைக்குத் தந்தால் போதும். இதற்குப் பதிலாக எங்கள் நாட்டிலேயிருந்து இராமாயணம், பகவத்கீதை போன்ற அரிய நூல்களைத் தருகிறோம்" என்று பண்டிதநேரு கேட்டாரா? இல்லை. விருந்தளித் தோரிடம் நேரு கோதுமையை என்ன விலைக்குத் தருகிறீர்கள்? என்று கேட்டார். அவர்கள் அதற்கு அளித்த விடை என்ன தெரியுமா?

"கோதுமை வேண்டுமென்றால் அது வேறு விஷயம். கோதுமையின் விலையைக் கோதுமை வியாபாரிகளிடமே கேட்டுக் கொள்ளுங்கள் விருந்தென்றால் விருந்து. வியாபாரமென்றால் வியாபாரம்"30 என்று பதில் சொன்ன அமெரிக்கர்கள் நம் நாட்டுக்குக் கோதுமையைக் கொடுக்காத நிலையைக் கூறுகின்றார்.

தமிழ்நாட்டின் அரசியல் நிலைமாற்றங்களைக் குறித்துப் பேசுவதற்கு முன்பாகத் தமிழகம் என்பது அன்று எவ்வாறு இருந்தது என்ற வரலாற்று நிலையைப் பார்க்க வேண்டும். ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்குத் தமிழகத்தை அந்நியர்கள் ஆண்டு வந்திருக்கின்றனர். அதற்கு முன்னதாக களப்பிரர், பல்லவர் போன்றவர்களின் ஆதிக்கத்தோடு சைன, புத்த, இந்து மத இணைப்புக்களும் தலைதூக்கியிருந்தன. மிகப்பெரிய பூதாகர சக்தியாகத் தமிழகத்தை ஆட்கொண்டுவிட்டு அதனை விட்டு விலக முடியாத சூழலை உருவாக்கும் முரட்டுப் பிடிவாத கோட்பாடாகத் தமிழகத்தினுள் தன்னைத் தானே வளர்த்துக் கொண்டது வருணாசிரமக் கோட்பாடு ஒன்றுதான். ஆளப்படுவோர், ஆள்வோர் என்ற கருத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த இந்துத்தத்துவத்திற்கு மதத்தின் சாயம் பூசப்பட்டிருந்தது – என்பது உண்மை. இது ஒரு பக்கமிருக்க, தமிழ் மண்ணில் படர்ந்த தெலுங்கு ஆதிக்கம் சொந்த நலன் கருதி தமிழகத்தினுள் தெலுங்கர்களைக் குடியேற்றியது. பாளையக்காரர்கள் ஒரு பக்கமாக உள்ளே நுழைந்தார்கள். இவர்கள் அனைவரும் தமிழகம் பொக்கிஷமாகப் பேணிப் பாதுகாப்பதாகக் கூறிய வருணாசிரம தர்மத்தை உயர்த்திப்பிடித்து உலவி வந்தார்கள். ஆங்கிலேயர்களும் வாணிகத்தை மையமாக வைத்துக் கொண்டு தமிழகத்தை இந்தியா என்ற ஒட்டுமொத்தக் கட்டமைப்போடு இணைத்துப் பொது சுகம் தேடினர். சங்ககால வாழ்க்கையில் கடைபிடிக்கப்பட்டு வந்த அரசியல், சமூகம் பொருளாதார வாழ்வை, அக்பர், அசோகர் போன்ற மாமன்னர்களால் தோற்கடிக்க முடியாத வாழ்க்கையை ஆங்கில ஆட்சியில் அடிவருடிகளாக இருந்து கொண்டு உயர்பதவிகளைத் தக்க வைத்துக் கொண்ட இந்து மத வாதிகள் தோற்கடித்துச் சாதித்துவிட்டனர். ஆங்கிலேயர்களுடன் இணைந்து கொண்டு ஆரியச் சட்டங்கள் தமிழ் மக்கள் மேல் திணிக்கப்பட்டன. தமிழ் மக்களின் வாழக்கையோடு எவ்வகையிலும் ஒன்றிவராத தமிழ் மக்கள் அறியப்படாத "வேதம்" என்கின்ற ஒன்று மக்களுக்கான வாழ்க்கையின் சட்டங்களைப் பிரகடனப்படுத்துகின்ற இயந்திரமாக உள் நுழைந்தது. தமிழும், தமிழ் நெறியும் புறக்கணிக்கப்பட்டதால் "தமிழன்" என்றாலே தாழ்த்தப்பட்டவன்

என்ற ஒரு கருத்தின் வழியான தாழ்வு மனப்பான்மை தமிழ் மக்களின் மனதில் புகுத்தப்பட்டது.

இந்நிலையில் அண்ணா என்கின்ற அரசியல் தலைவனின் வரலாறு அவருடைய நாட்டு வரலாற்றுடன் பின்னிப் பிணைந்துள்ள ஒன்றாகவே காண முடியும். 1909ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் காஞ்சியில் பிறந்த அண்ணாவின் இயற்பெயர் அண்ணாத்துரை. வருணாசிரமக் கோட்பாடுகளில் நசுக்கப்பட்ட எளிய குடும்பத்தில் பிறந்த மனிதர் தான் என்பதை "…..நான் சாமானியன், மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன்…. பிற்பட்ட இனத்தை சேர்ந்தவன்."[31] என்ற அவருடைய வார்த்தைகள் மூலம் புரிந்து கொள்ள முடியும். ஆதிக்க இந்துக்களின் கொடுமைகளுக்குட்பட்ட அண்ணாவினுடைய பெற்றோர்களின் துயரங்கள் சிறு வயதிலேயே அண்ணாவின் மனதில் சமூகம் பற்றிய, வாழ்க்கை பற்றிய மாற்றுக் கண்ணோட்டத்தை உருவாக்கியுள்ளது. இதுவே பிற்காலத்தில் அவரை ஒரு புரட்சிக் காரராகவும் மாற்றியிருக்க வேண்டும்.

# 4. உலக அரசியலின் பின்னணியில் அண்ணா

1909ஆம் ஆண்டு பிறந்த அண்ணா தன்னுடைய இளமைக் காலங்களில் உலக நடப்புக்களில், உலக அரசியலில் அக்கறை கொண்டவராக இருந்துள்ளார். குறிப்பாக நாடு, மொழி, மக்கள், சுதந்திரம், அரசியல், அரசியல் சார் செயல்பாடுகள் அனைத்திலும் அண்ணா ரஷ்யப் புரட்சி வீரர் லெனினை உன்னிப்பாகக் கவனித்துச் செயல்பட்டார் என்று கூற முடியும்.

அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளில் பசி, பட்டினி, அடக்கு முறை கோரத்தாண்டவம் ஆடிக்கொண்டிருந்த காலம் அது. 1910ஆம் ஆண்டு ரஷ்யாவின் இருண்ட காலம் என்று சொல்லப்படுகின்ற நாட்களில், 'மனந் தளர வேண்டாம்' என்று லெனின் தைரியம் கூறி மக்களை உற்சாகப்படுத்துகின்றார். 'மனந்தளர வேண்டாம்' என்ற அவரது சொல், துன்பப்படும் தொழிலாளர்களிடையே தொடரொலியாக இருக்கத் தொடங்கிய காலத்தில்தான் அண்ணாவின் குழந்தைப் பருவம் நடக்கின்றது. "இந்தக் காரிருள் நம்மை விட்டு விலகும். சேறு நிறைந்த அலைகள் மறையும். தூக்கிச் செல்லப்படுவோம். தொழிலாளர் புரட்சி புத்துயிர் பெறும்" என்று ரஷ்ய மக்களுக்குத் தன் வார்த்தைகளால் வாஞ்சனையைப் பகிர்கின்றார் லெனின்.

புயலுக்கு முன் உள்ள அமைதி போன்றது இக்காலம். இந்தக் காலத்தில் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் சேர்த்து நடத்துவதற்கு, உறுதி வாய்ந்த – புரட்சிகரமான கட்சி ஒன்று நிறுவப்பட்டது. இது தான் போல்ஷிவக் கட்சி, இதன் தலைவரே லெனின்.

லெனின் புரட்சியில் ஈடுபட்டதற்கான பின்னணியில் ரஷ்ய வாழ்க்கையும் ஜாரின் அதிகாரமும் காரணங்களாக இருந்தாலும், லெனினின் அண்ணன் ஷாஷா ஜார் அரசால் தூக்கிலிடப்பட்டதும், தமக்கை அன்னா நாடு கடத்தப்பட்டதும், இளையவனாக இருந்த லெனினைப் பாதிப்பிற்குள்ளாக்கியது. லெனினின் தாய் சிறையில் தன் மகனின் உயிருக்காக எத்தனையோ மன்றாடிக் கேட்ட பின்பும் "அடிமைத் தனத்திற்கும் பட்டினிக்கும் காரணம் இம்மாளிகையில் ஜாரின் அரண்மனையில்தான் இருக்கிறது. மக்களின் அளவற்ற துன்பங்களின் காரணத்தை நாம் தகர்க்க வேண்டும். ஜாரைக் கொல்வது தான் சரி"32 என்று பேசிய மாணவனாகிய ஷாஷாவின் பேச்சு ஜார் அரசைக்

கடுமையாகத் தாக்கியதால் அவன் தூக்கிலிடப்பட்டான். தன் அண்ணனின் சாவு தம்பியை உறுதிப்படுத்தியது. அவ்வாண்டே விளாடிமர், காசான் பல்கலைக்கழகத்திற்குப் படிக்கச் சென்றார். மாணவர்களின் போராட்டங்களில் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டார்.

“மாணவர்கள் உரிமைகளைப் பறிக்காதே!
வாய்பூட்டுச் சட்டங்களை ரத்து செய்!"[33]

போன்ற தாரக மந்திரங்களைப் போராட்டத்தில் உபயோகித்ததற்காக லெனின் சிறையிலடைக்கப்பட்டார். நாடு கடத்தப்பட்டார். நாடு முழுவதும் மக்கள் ஆங்காங்கே முதலாளிகளை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். விளைச்சல் இல்லாத பூமியை நம்பிக் காத்திருந்த மக்கள் பட்டினியால் வாடினர். உழைத்துக் கொடுத்த முதலாளிகளிடம் உணவு கேட்டனர்.

“வயல்களை உழுதவர்கள் நாங்கள்; நீயல்ல விதை விதைத்தவர்கள் நாங்கள்; நீயல்ல, பயிரை விளைத்தவர்கள் நாங்கள்; நீயல்ல. இந்தக் கைகள் தானே அவ்வேலைகளையெல்லாம் செய்தன?"[34] என்று விவசாயிகள் கேட்டதற்கு முதலாளிகள் சவுக்கடியைப் பதிலாக வழங்கினர். இதுதான் அன்றைய ரஷ்ய உழைப்பாளிகளின் நிலையாக இருந்தது. லெனின்,

“தோழர்களே; நாம் எப்போதும் நம் கண்முன்பு புரட்சியையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். அதுவே நாம் செய்யும் காரியங்களுக்கு வழிகாட்ட வேண்டும். இப்படிச் செய்வதால் உடனடியாக கோரிக்கைகளைக் கவனிக்க வேண்டாமென்று அர்த்தமல்ல; நாம் தற்போதைய குறைகளுக்காகவும் போராட வேண்டும், குறைந்த நேரம், தகுந்த கூலி, நல்ல வாழ்க்கை வசதிகள், இடையூறு நேருங்கால் உதவி, இந்தக் கோரிக்கைகளின் மேல் தொழிலாளர்களை நாம் திரட்ட வேண்டும். மாணவர்களின் போராட்டங்களில் கலந்து கொண்டு, அவர்களையும் நம்பால் இழுக்க வேண்டும். அவர்களைத் தீவிரப்படுத்த வேண்டும்: ஒன்று சேர்க்க வேண்டும்; தங்களுக்குள் இருக்கும் வெறுப்பையும், விரோதத்தையும் அகற்றி, ஒன்றாக ஸ்தாபன ரீதியாகத் திரண்டு, பொது எதிரியின் இரும்புப் பிடியிலிருந்து விடுதலையடையத் தூண்ட வேண்டும்"35 என்று முழங்கினார். தொழிலாளர்களின் வாழ்க்கை நுணுக்கங்களைப் பற்றியும், அவர்களின் விருப்பு வெறுப்புகளைப் பற்றியும், பசிப் பிணியை பற்றியும் தெளிவாக அறிந்தார். ஜாரின் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டிய மறைமுகப் பணிகளில் ஈடுபட்டார்.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், எந்த நாட்டிலும் அடிப்படைப் பிரச்சினைகள் நாடு, மொழி, மக்கள், அவர் தம் வாழ்க்கை நிலை

போன்றவற்றைச் சார்ந்தே அமையக் கூடும். பழமை வாதத்திலிருந்து விடுபட்டு மக்களிடையே விஞ்ஞானப் பூர்வ மனோபாவம் புதிய நிலையில் உருவாக்கப்படாவிட்டால் இது போன்ற பிரச்சினைகளை அரசியல் ரீதியாக அணுக முடியாது என்று அண்ணா உணர்ந்தார். 'அடிமைத்தனம் ஒரு கூட்டுச் சரக்கு' என்றார் அண்ணா. அந்நியனுக்கு அடிமைப்படுவதற்கு முன்பே நாம் வருணாசிரமத்திற்கும், பழமைக்கும், விதிக் கோட்பாட்டில் அடிபட்டு மதியை விற்ற வெட்டிகளாகவும் இருந்துக் கொண்டு, அவற்றைப் பரம்பரையாக நாம் காத்து வருகின்ற பூர்வீகச் சொத்து என்றும் கருதிக் கொண்டிருக்கின்றோம் என்பதை உணர்ந்து வெளிப்படுத்தினார். தமிழ் நெறியில் ஆழமாகக் காலூன்றியிருந்த அண்ணா மிகச் சரியான சமதர்மத்தைத் தேடிப்பெற வேண்டிய முனைப்பில் ஈடுபட்டார். லெனினின் செயல்பாடுகளும் காரல்மார்க்ஸின் பொருளாதாரக் கோட்பாடுகளும் அவரால் உள்வாங்கப்பட்டதனால் கட்சியின் எல்லாமட்டங்களிலும் அதனை வலியுறுத்தவும் செய்தார்.

தமிழ் நெறி, சமதர்மம் என்ற இரண்டு அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட பகுத்தறிவுக் கோட்பாட்டினை மக்களிடையே நிலைநிறுத்த விரும்பினார் என்பதைத் தான் அவருடைய செயல்பாடுகள் முழுமையாக உணர்த்தி நிற்கின்றன. மதம் என்கின்ற ஒன்றை மட்டும் வைத்து இந்தியா தன் அதிகாரத்தையும், ஆட்சியையும் நிலை நிறுத்திக் கொள்ள முடியாது என்பதனைப் பகிரங்கமாக வெளிப்படச் செய்தார். தமிழின் இழிநிலைக்கும் மொழி வழிப் பிளவுக்கும் காரணமாக சமஸ்கிருத ஊடுருவலால்தான் திராவிடம் என்பது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு எனச் சிதறியதாக மொழிநூல் வல்லுநர்கள் கூறினர். அண்ணா தமிழ்நெறியில் தமிழகத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்பதை முன்வைத்ததோடு ஆரியத்திலிருந்து பிரிந்து தமிழ் 'தனித்திருத்தல்' வேண்டும் என்பதனையும் எடுத்துரைத்தார். வள்ளலார் போன்றவர்களால் தமிழ் நெறி வாயிலாக வளர்த்தெடுக்கப்பட்ட மறுமலர்ச்சி உணர்வுகளைத் தங்களின் போக்கிற்கேற்பப் பயன்படுத்திக் கொண்ட ஆதிக்க இனக் கொள்கைகளைப் பேச்சு, எழுத்து கட்சிப் பணிகளின் மூலம் திட்டமிட்ட முறையில் வெளிப்படுத்திக் கட்சியைச் செம்மைப்படுத்தினர். 'நாத்திகன்' என்று மக்களால் வெறுத்து ஒதுக்கப்படுகிறோம் என்பதைத் தொடக்கத்திலேயே உணர்ந்த அண்ணா 'நாத்திகம்' என்பதற்கான பரிமாணங்களைக் கருத்து விளக்கங்களோடு தெளிவாகக் கூறித் தமிழக மக்களுக்குப் புரியவைத்தார். நீதிக்கட்சி என்ற சிறு கட்சியைத் தேர்ந்தெடுத்துத் தனது கொள்கைகளையும், பிறநாட்டு நடைமுறைகளையும் எடுத்துரைத்து வளர்ந்த பெரும் கட்சியாக அதனை உருவாக்கி அரசியல் எழுச்சி ஏற்படுத்திய மகாமனிதர் அண்ணா.

1939ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் அண்ணா தமிழ் மக்களிடையே பரவலாக அறியப்படலானார்.

அரசியலின் பெயராலும், பொருளாதாரத்தின் பெயராலும், சமயத்தின் பெயராலும், நீதியின் பெயராலும் மக்களின் ஒரு வர்க்கத்தார் மற்றொரு வர்க்கத்தாரை எப்படி எப்படிச் சுரண்டி வாழ்கிறார்கள்; எப்படி எப்படி அடிமைப்படுத்துகிறார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக மார்க்சியம் அறிந்தது. இந்த மண்ணுலகில் மனிதன் மனிதனைப்போல் வாழ்வதற்கு வழி காட்ட முனையும் ஒரு தத்துவக் கோட்பாடு மார்க்சியம், அதன் அடிப்படைக் கோட்பாடுகளாக,

1. தத்துவத்துறையில் - தர்க்கவியல் லோகாயதம்
2. பொருளாதாரத்துறையில் - பொதுவுடைமைக் கோட்பாடு
3. அரசியல் துறையில் - பாட்டாளி மக்களின் சுதந்திரம்
4. பண்பாட்டுத் துறையில் - தோழமை உணர்ச்சி – அதாவது சர்வதேசத் தொழிலாளர் வர்க்கக் கூட்டுறவு
5. அறிவுத் துறையில் - விஞ்ஞானம்

என்ற மேற்கூறப்பட்ட ஐந்து கோட்பாடுகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு செயல்பட்டது.

ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்குமான சாதாரண உறவும், பகையும் பண்டங்களின் உற்பத்தியோடும், தானிய உற்பத்தியோடும் தொடர்புடையது என்றும், மனிதனின் எண்ண வெளிப்பாடுகள், நோக்கங்கள், ஆசைகள், உபதேசங்கள் அறிவுரைகள், அறவுரைகள், அரசியல் சட்டங்கள் ஆகிய அனைத்தும் பொருள் உற்பத்தியையும், பொருள் வினியோகத்தையும் அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றன என்பதையும் வெளிப்படுத்தியது. மக்களிடையே செல்வத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படுவதற்கு அதாவது, ஒருவன் ஏழையாகவும், மற்றொருவன் பணக்காரனாகவும் இருப்பதற்கு நாட்டின் அரசியல் சட்டங்களே முக்கிய காரணம் என்ற உண்மையை ஆதாரபூர்வமாய், சரித்திர பூர்வமாய் எடுத்துக் காட்டி விவரித்தது மார்க்சியம். பூமியென்பது எந்த மனிதனாலும் உற்பத்தி செய்யப்பட்டதல்ல, அது இயற்கையால் தானே அமைந்த மனித வாழ்வுக்கு இன்றியமையாது தேவைப்படும் ஓர் இயற்கைச் சாதனம், பூமியைப் பாதுகாத்துக் கொள்கின்ற சட்டங்களை ஆண்டவன் தான் நியமிக்கின்றான். அவனால் இயற்றப்பட்ட சட்டங்களால்தான் ஏழை பணக்காரன் என்கின்ற பெரும் விரிசல் உண்டானது. பொருள் உற்பத்தியைப் பெருக்கி, மனிதன் முன்னேறிச் செல்ல முயலும்போது,

எது எது தடையாய்க் குறுக்கே நிற்கிறதோ, அத்தகைய அமைப்புக்களைத் தகர்த்து எறிந்து விட்டு, மனிதன் முன்னேறிச் செல்லுவான். இதுவரை தான் புனிதமானதாய்க் கருதி வந்த அமைப்பையும், புறக்கணித்துத் தகர்த்து எறிய, அவன் தயங்க மாட்டான் என்பதும், சமுதாய வளர்ச்சியில் நிகழும் மாபெரும் உண்மையாக இதைப் பதித்துக் கொள்வது அவசியமென்றும் மார்க்சியம் போதித்தது. அநியாயமாகக் கருதப்பட்டிருந்த பண்ணை அடிமைமுறை எந்திர சாதனங்களின் மூலம் உற்பத்திகள் பெருகியவுடன் பண்ணை நியாயமற்றதாக உணர்ந்து தகர்த்தெறியப்பட்டது. ஆகவே நியாயம், அநியாயம் என்பதும் பாவ புண்ணியம் என்பதும், அறம், மறம் என்பதும் பொருள் உற்பத்தியோடும், அதன் விநியோகத்தோடும் தொடர்புடையனவாய் இருப்பதை மார்க்சியம் உலக மக்களுக்கு உணர்த்தியது.

இந்த மார்க்சியக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அண்ணா மார்க்சியத் தாக்கத்தால், லெனின் செய்வதைப் போல் ஒரு நாடு விடுதலையடைய புரட்சியைக் கையிலெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டார். ஒரு தலைவனாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய சூழல் தமிழகத்தில் அவருக்கு ஏற்படவில்லை. அதனால் அண்ணாவுக்கும் அத்தகைய செயல்பாடுகளில் குதிக்க வேண்டிய தேவையும் இல்லாமலிருந்தது. ஆனால் சோவியத் குடியரசுகளின் கட்டமைப்பு உருவானபோது உடனடியாகத் தீர்க்கப்பட்ட முதல் பிரச்சினை தேசிய இனங்களின் பிரச்சினையாகும். ஜார் மன்னனின் காலடியில் சிறிய மொழியினங்கள் நசுக்கப்பட்டுக் கொடுமைக்கு உள்ளாக்கபட்டன. அக்கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து, தேசிய இனங்கள் மொழிகள் ஆகியவற்றின் மேம்பாட்டுக்கு வழிவகுக்கப்பட்டது.

சுய நிர்ணய உரிமை உட்பட்ட அனைத்து உரிமைகளும் தேடிப் பெறப்பட்டன. யுக்ரேல், பைலோருசியா போன்ற மாநிலங்கள் உலக மன்றங்களில் இடம் பெற்றன. கனடா நாட்டில் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகள் பேசுவோரும் உள்ளதால் பெரும்பான்மையோர் ஆங்கிலம் பேசினாலும் எல்லா மக்களும் கனடா மக்கள் என்றே தங்களை அழைத்தனர். கீயூ மாநிலத்தில் மட்டும் பிரெஞ்சு மொழி பேசுவோர் அதிகம் இருந்தனர். அவர்களும் நாட்டின் மேலான உரிமையைப் பெற்றிருந்தனர். எனினும் இரண்டு மொழிகளுக்கும் ஒத்த உரிமை வேண்டுமென்ற கிளர்ச்சி தோன்றி வந்ததால் கனடா அரசியலே அக்காலத்தில் அதிர்ந்தது. பின்பு, அந்நாட்டு அரசியல் வாதிகள் கூடிக் குழு அமைத்து ஆய்வு நடத்தி அரசியல் சட்டம் திருத்தம் செய்யப்பட்டது.

மிகச்சிறிய நாடான பெல்ஜியத்தில் இரண்டு மொழி பேசுவோர் வாழ்வதால் யார் யாரை ஆட்சி செய்வார்களோ என்ற நெருக்கடி ஏற்பட்டது. இது குறித்த பிரச்சினை தேர்தல் முடிந்தவுடன் அந்நாடுகளின் அமைச்சரவைக் கூட்டங்களில் பேசி முடிவெடுக்கப்பட்ட பின்னரே அமைச்சரவை நடத்துவதென்பது சாத்தியமாயிற்று. மேற்கூறப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. உலக ஒற்றுமை முன்வைக்கப்பட வேண்டிய இந்நாட்களில் மொழி உரிமைகள் நிலைநாட்டப்படுவது சட்டத்தால் நடக்கக் கூடியதல்ல என்பது அன்றே உணரப்பட்டது.

ஆட்சிமொழிப் பிரச்சினைகள் ஆராயப்படுகின்ற போது மொழியின் கலாச்சாரப் பண்பாட்டு அம்சங்களையும் கணக்கிலெடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது என்பதையும் அவைகள் அவற்றால் ஆளப்படுகின்ற சமுதாயத்ததைப் பாதிக்கின்றன என்பதனையும் உணர வேண்டும். மக்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடத் தாய்மொழிதான் சிறந்தது என்பதனை எல்லாக் காலங்களும் உணர்ந்திருக்கின்றன. எனவே சொற்களுக்குப் பின் கருத்துக்கள் இருக்கின்றன என்பதும், கருத்தோடு மரபு இயைகிறது என்பதும், அந்த மரபுக்கு இலக்கியங்கள் தான் ஆதாரம் என்பதும் அறிஞர்களால் உணரப்பட்ட ஒன்றாகும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகம் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற சமத்துவக் கோட்பாட்டையுடையதும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உலக ஒற்றுமைத் தத்துவத்தையும் ஏற்றுக் கொண்டிருந்தது என்றும் அறிஞர்களால் இன்றும் போற்றப்படுகின்றது. தமிழ் நெறிசார் வாழ்க்கை வாழ்த்தப்படுகின்றது. ஆனால் இடைக் காலத்தில் வடமொழி ஆதிக்கத்திற்கு உட்பட்ட தமிழகம், மலையாளத்தைப் போல வடமொழியைத் தேவமொழியாக ஏற்று, தமிழ் மொழியின் பல முக்கிய அம்சங்களை இழக்கத் தயாரானது. மொழியில் ஏற்பட்ட தாக்கம் பண்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தி சமுதாயத்தினும் ஊடுருவியதன் விளைவு எண்ணற்ற சாதிகளைத் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்ய வழிவகுத்தது. தமிழ் நெறிக் கொள்கைகளாக வாழ்க்கையோடு இயைந்திருந்த பல நல்ல கருத்துக்கள் தமிழர்களால் கைவிடப்பட்டன. குறிப்பாக ஆசை என்பதனைக் காரண காரியங்களோடு கேள்விக் குள்ளாக்குகின்ற "நிலையாமைக் கோட்பாடு" தமிழர் வாழ்விலிருந்து தூக்கியெறிப்பட்டது. மாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட இந் நிலவுலகில் மாறாமலிருப்பது அறநெறிகளாகும். அதுவே வாழ்வாங்கு வாழ ஒருவன் செய்ய வேண்டிய உடனடிச் செயல் என்பதும் பாழ்படுத்தப்பட்டன. வடமொழியின் மூலம் நிலையாமைக் கோட்பாடு

தமிழ் மக்களின் வாழ்வையொழிக்க திருத்திப் பயன்படுத்தப்பட்டது. தமிழ் மொழியில் இருக்கின்ற ஊழ், அறம் என்கின்ற சொற்கள் வடமொழியில் விதியாகவும், தருமமாகவும் திரிந்து புரிந்து கொள்ளப்பட்டன.

வினோபா கூறுகின்றபோது வேற்றுமொழியின் ஆதிக்கம் என்பது அந்நாட்டுத் தாய்மொழியை அழிப்பதோடு அங்குள்ள மக்களையும் அழித்துவிடும் என்று எச்சரிக்கின்றார். இராமனுஜம் நம்மாழ்வாருடைய சீடர்களின் சீடர், அவர் நம்மாழ்வாரின் கருத்துக்களைத் தவிரப் புதிதாக எதையுமே சொல்லவில்லை. ஆனால் நம்மாழ்வார் மறைக்கப்பட்டார். இராமானுஜர் புகழ் பெற்றார். காரணம் நம்மாழ்வார் தன் தாய்மொழியான தமிழில் எழுதினார். இராமானுஜர் வடமொழியில் மொழிபெயர்த்தார். அதனால் வடமொழிச் சமூகம் நம்மாழ்வாரை மறைத்து இராமானுஜரை உயர்த்தியது.

இதனால் வேற்று மொழியாக்கம் என்பது பல கொடுமைகளுக்கு மனிதர்களை உள்ளாக்கக்கூடியது என்று தமிழகத்தில் உணரப்பட்டது. ஆட்சி மொழி என்ற மாநிலப் பெயரால் மறைமுகமாக இந்தியாவின் பல மொழிகளை ஒடுக்கி இந்தியைத் திணிக்க முற்படுகிறது மத்திய அரசாங்கம் என்பது தமிழ்மொழி அறிஞர்களால் உள்வாங்கப்பட்டது. ஆனால் அக்காலத்தில் ஆட்சியிலிருந்தவர்களால் மட்டும் உள் வாங்கப்படவில்லை. மேற்கு வங்கச் சட்ட மன்றத்தில் வினோபா "தமிழ்மொழி மிகச் சிறந்த மொழி அதையும் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பேசிய பேச்சை வரவேற்ற அண்ணா அந்தத் துணிவு தமிழக அகில இந்தியக் கட்சிக்காரர்களுக்கு ஒட்டுமொத்தமாக இல்லையே என மனம் வருந்தினார்.

ஆட்சிமொழி என்ற பெயரால் இந்தியா முழுவதையும் கைக்கொள்ள நினைத்த இந்தி மொழிப் பிரவேசகர்களிடம் அண்ணா தன்னுடைய கருத்துக்களை நூதனமான முறையில் முன் வைத்தார். முதலில் 'ஆட்சி மொழி' என்றால் என்ன என்பதற்கும் 'ஆட்சிமுறை' என்பதற்கும் இதுவரை சரியான விளக்கமே தரப்படவில்லை என்பதனைச் சுட்டிக் காட்டினார். அரசியல் அமைப்புச் சட்டப்படி ஆட்சி முறைக்குச் சரியான விளக்கம் இல்லாததால், ஆட்சிமொழி எந்தெந்த வழியில் பயன்படுத்தப்படும் என்று விளக்கப்படவில்லை என்றார். மாநில ஆட்சி மத்திய ஆட்சி இரண்டும் இணைந்த ஆட்சி மத்தியில் அமைக்கின்றபோது ஆட்சி என்ற அடிப்படையில் எது மாநில ஆட்சியைச் சேர்ந்தது, எது மத்திய ஆட்சியைச் சேர்ந்தது என்று கேள்விக்கணை விடுத்தார். எது இரண்டுக்கும் பொதுவான ஆட்சியைச் சேர்ந்தது என்று பிரித்துப் பார்க்க முடியாத படி குழப்பம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் நிலவுகிறது.

மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தக் கூடிய மொழிதான் ஆட்சி மொழி என்று தனக்குத் தானே முடிசூட்டிக் கொண்டு இந்தியாவில் உள்ள பிறமொழிகளுக்கு உள்ள பழமையையும் தொன்மையையும் மறைத்து, இந்தி மொழிக்கு முக்கியத்துவமளித்து, அதை வாய்படுத்த துருவித்துருவிச் சொற்களைக் கண்டுபிடிக்க கோடிக்கணக்கான பணத்தை விரயம் செய்து, மக்களையும் நிர்ப்பந்திக்கிறது. அதுவே இந்திமொழி என்பதனை பகிரங்கமாக அண்ணா அன்றே எடுத்துரைத்தார். தமிழ்மொழி போன்று நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமும் செழுமையும் இல்லாத இந்தி மிகச் சாதாரண மொழி, மூன்று மாதங்களிலேயே படித்து முடித்து விடக்கூடிய ஒன்று என்றதோடு அண்ணா, கீழ் வருமாறு தன் கருத்துக்களைப் பதிவு செய்கின்றார்.

"இந்தியைப் படிப்பது வேறு, இந்தியில் பழகுவது வேறு. நாம் இந்தி படித்தால், அது நமக்குப் படித்த மொழியாகத்தான் இருக்க முடியுமே தவிர, பழக்க மொழியாக இருக்க முடியாது. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களைப் போல் நாம் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க முடியாது. ஆங்கிலத்தை எவ்வாறுதான் கற்றிருந்தாலும் நமக்குள்ளேதான் போட்டியிட முடியும். ஆற்காடு இராமசாமியும், சர்.சி.வி. இராமசாமியும் லண்டனில் போய் ஆங்கிலேயருடன் போட்டியிட முடியாது. கிளியும், நாக்கு உயிக்கப்பட்ட மைனாவும் சொல்லிக் கொடுத்ததைச் சொல்லும், அதற்கு மேல் பேச முடியாது"[36] என்று கோபமும் கொண்டார்.

மேலும் அண்ணா இந்தி படிக்க தாம் நிர்பந்திக்கப்பட்டு இந்தி படித்தாலும் இந்திக் காரனுடன் போட்டியிட முடியாது என்றார். அரசு அலுவலகங்கள் இந்தி பேசுவோரின் தனி உடைமையாகி விடும். இப்போது இந்தித் திணிப்பினால் பயன்பெற்று அங்கு சென்று வேலைக்குச் சேர்ந்தவர்கள், வெகுவிரைவில் அரசு அலுவலகங்கள், தனிப்பட்ட நிறுவனங்கள், வணிகக் கோட்டங்கள் அனைத்தும் இந்திமொழி பேசுவோரின் ஆதிக்கத்துள் சென்று விடும். ஏனென்றால் பெரும்பான்மையினர் என்ற காரணத்தால் நாட்டு அரசியலே இந்தி பேசுவோரின் தஞ்சமடைந்திருக்கிறது. அதனோடு, இந்தி ஆட்சி மொழியாகி எல்லாத்துறைகளிலும் அவர்களின் ஆதிக்கம் நிலைபெற்று விடுமேயானால், அரசியல் எதேச்சதிகாரம் புகுந்து ஏனைய வளமிக்க மொழிகள் சிறிது சிறிதாக அழிக்கப்பட்டுவிடும் என்ற கருத்தினை ஒரு தீர்க்கதரிசியைப் போல் அண்ணா உணர்ந்து அதனை எடுத்துரைத்தார்.

அண்ணா தன் பெரும் தாக்கத்தை லெனினின் செயல்பாடுகளில் பெற்றிருந்தார். இந்தியாவில் சுதந்திரத்திற்குப் பின் ஏற்பட்ட

மாறுதல்களைப் போல ரஷ்யாவில் 1900ஆம் ஆண்டு காலகட்ட நிலைமைகள் இருந்தன. லெனின் காலத்தில் ஒரு விவசாய நாடாக விளங்கிய ரஷ்யாவின் சாகுபடி நிலப்பரப்பில் 63 சதவிகிதம் ஜார் குடும்பத்தாருக்கும், பெரு நிலக் கிழார்களுக்கும், சிறு பண்ணையார்களுக்கும், மடாலயங்களுக்கும் சொந்தமாய் இருந்தது.

அரசாங்கத்தின் நடவடிக்கை காரணமாக முற்போக்குள்ள அரசியல் கட்சி எதுவும் வெளிப்படையாக ரஷ்யாவில் இயங்கவில்லை. உதிரி உதிரியாக, மார்க்சிய வட்டங்கள் முக்கிய தொழிற்சாலைகள் உள்ள நகரங்களில் இரகசியமாக இயங்கினவேயன்று ஒன்றுபட்ட ஒரு தொழிலாளர் இயக்கமாக கட்சியாக உருப்பெற்று வளரவில்லை. அதனால் தொழிலாளியின் போராட்டங்களும் ஒரு முனைப்பட்டு நடைபெற முடியவில்லை. சிதறிச் சிதறிப் போராட்டங்கள் நடைபெற்ற காரணத்தால் போராட்டங்களில் மிகப் பெரும்பானவை உடனடியாகத் தோல்வி யடைந்தன. மேலும் நடை பெற்றிருந்த போராட்டங்கள் அனைத்தும் பொருளாதார வளத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டு கட்டமைக்கப் பட்டிருந்தனவேயன்றி, அரசியல் உரிமைகளைப் பெறும் நோக்கத்தை அவை கொண்டிருக்கவில்லை. ஆகவே பீட்டர் ஸ்பெர்க்கிலிருந்த போது லெனின், இந்த இரண்டு துறைகளிலும் கவனம் செலுத்தினார். ஆங்காங்கே சிதறிச் செயல்படும் மார்க்சிய வட்டங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்டு ஒரு தொழிலாளர் கட்சியாக உருப்பெறுவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்பதை ஆராய்ந்தார். தொழிலாளர் கட்சியென்பது பொருளாதார நலன்களுக்காகப் போராடுவதோடு நின்று விடாமல் ஓர் அரசியல் கட்சியாகச் செயல்பட வேண்டுமென முடிவு செய்தார்.

இதற்காக உண்மையான மார்க்கசியவாதிகளை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டு ஜாரின் ஆட்சியை ஆதரிப்பவர்களின் முட்டாள் தனத்தை "மக்களின் நண்பன் யார்?" என்றும் நூலின் வழியாகப் பகிரங்கப்படுத்தினார். மேலும் பிரச்சாரம் செய்து வருவதனால் மட்டும் எந்தக் கொள்கையும் வெற்றியடைய முடியாது. கொள்கையைப் பரப்புவதோடு நடைமுறையில் அந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். செயலில் இறங்கத் தூண்டாத எந்தப் போக்கும் வெற்றி அடைவதில்லை என்று பீட்டர்ஸ்பர்க் மக்களிடம் எடுத்துச் சொன்னார். "மார்க்சியம் என்பது வெறும் போதனை மட்டும் அன்று, கிளர்ச்சி செய்து தங்கள் உரிமைகளை அடையப் பாட்டாளி மக்களைச் செயலில் இறங்கும்படி ஊக்குவிக்கும் வழிகாட்டி ஆகும் மார்க்சியம்" என்று லெனின் தொழிலாளர்களுக்கு எடுத்து விளக்கினார். "மக்களின் நண்பர்கள் யார்?

என்று லெனின் எழுதிய நூல் மிகப்பெரிய சாதனையைத் தொழிலாளர்களிடம் உண்டாக்குவதற்கான தூண்டுகோலாக இருந்தது. ஆதிக்கம் செலுத்துபவரை விட்டுப் பிரிந்து, தொழிலாளர்கள் தங்களுக்கென ஒரு கட்சியை உருவாக்கிக் கொள்ள இந்நூல் ஆதாரமாக இருந்தது.

மேலும் லெனின் விவசாயிகளும், தொழிலாளர்களும் ஒன்று. இருவரும் ஆதிக்க ஒடுக்குதலுக்கு உள்ளாகிறவர்கள் என்பதை எடுத்துரைத்தார். கொள்கைப் போராட்டம் என்பது ஒரு மார்க்சியவாதியால் சட்ட பூர்வமாக எப்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை விளக்கியதோடு பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி ஒன்றை நிறுவுவதற்கான ஆயத்த வேலைகளிலும் லெனின் ஈடுபட்டார். தொழிலாளர்களுக்கு உரிமையைப் பாதுகாத்துக் கொள்வது, தங்களைப் பாதுகாத்துக் கொள்வது, மார்க்சிய சித்தாந்தம், போன்றவற்றின் மேலான இரகசியப் பயிற்சி வழங்கப்பட்டது. பல ரஷ்யத் தலைவர்கள் வெளிநாட்டில் இருந்துகொண்டு மார்க்சியத்தை இரகசியமாக ரஷ்யாவில் பரப்பும் பணியில் ஈடுபட்டார்கள். அவர்களுடன் நேரடியான தொடர்பு கொள்ளவும், வெளிநாடுகளிலுள்ள தொழிலாளர்களின் நிலைமைகளைத் தெரிந்து கொள்ளவும் ரஷ்யாவில் கிடைக்காத மார்க்சிய இலக்கியங்களை அங்கிருந்து பெற்று வரவும் லெனின் விரும்பினார். அதற்கான முயற்சியில் ஈடுபட்ட போது நிமோனியா நோயால் 1895இல் தாக்கப்பட்டார்.

இதற்கு மருத்துவம் செய்துகொள்கின்ற காரணத்தைக் காட்டி லெனின் வெளிநாடு புறப்பட்டார். “தொழிலாளர் விடுதலை வட்டத்துடன் தொடர்பு கொள்வதே பயணத்தின் குறிக்கோளாக இருந்தது. போலீஸ் துறைகளும் லெனினைக் கண்காணித்து நெருக்கடி தந்தன. தொழிலாளர்களுக்கான அரசியல் பொருளாதார நூல்களை எழுத வேண்டுமென்பது அவசியமாக உணரப்பட்டது. ஜாரின் ஆட்சிக் கொடுமையை எதிர்க்க வெளிநாடுகளில் வாழ்ந்த ரஷ்யர்கள் லெனினை இரகசியமாக ஆதரித்தனர். பத்திரிக்கை புத்தகங்கள் மற்றும் கடிதங்களின் மூலம் ரஷ்யாவுடன் தொடர்பு வைத்துக்கொண்டு ஜனநாயகம், சுதந்திரம், எழுத்துரிமை, பேச்சுரிமை ஆகிய பண்புகளை ரஷ்யாவில் இவர்கள் பரப்பிக் கொண்டிருந்தனர். மார்க்சின் நூல்கள் ரஷ்யமொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. அச்சிடப்பட்டு அந்த நூல்களை இரகசியமாக அனுப்பி, அதன்மூலம் சோசலிசக் கொள்கைகளையும், ஜனநாயகக் கொள்கைகளையும் ரஷ்யாவில் இவர்கள் பரப்பினார்கள். லெனின் தன் வெளிநாட்டுப் பயணத்தில் முதன்

முதலாகச் சந்தித்தவர் பிளெக்கானவ். நான் எத்தனையோ ரஷ்ய வாலிபர்களைச் சந்தித்திருக்கிறேன், லெனினைப் போல் ஆழ்ந்த அறிவும், ஆர்வமும் புரட்சி மனப்பான்மையும் கொண்ட ஒரு வாலிபரை இதுவரை நான் சந்தித்தது இல்லை" என்று பிளெக்கானவ் கூறுகின்றார். இவர் லெனினைத் தன் ஆசானாகவே கொண்டாடினார், லெனின் பிளெக்கானாவைப் பெரிதும் மதித்தார். முடியாட்சியை ஒழிப்பது பற்றிய நடவடிக்கைகள் தொடர்ந்து கருத்துப்பரிமாற்ற நிலைகளில் நடந்து கொண்டிருந்தன. ஏறக்குறைய ஐந்து மாதப் பயணத்தை முடித்துவிட்டு லெனின் 1895ஆம் ஆண்டு செப்டம்பரில் ரஷ்யாவுக்குத் திரும்பினார்.

திரும்பும்போது, அடியில் இரண்டு தட்டுகள் உள்ள ஒரு உடுப்புப்பெட்டியிலே, மார்க்சிய இலக்கியங்களை மறைவாக எடுத்து வந்தார். போலீசார் எவ்வளவோ கவனமாகச் சோதனை போட்டும் கண்டெடுக்க முடியவில்லை. நேரே பீட்டர்ஸ்பர்க் செல்லாமல் மாஸ்கோ, வில்னோ போன்ற நகரங்களில் தங்கி அங்குள்ள மார்க்சியப் போராளிகளைச் சந்தித்து “தொழிலாளி" என்னும் பத்திரிக்கை வெளிநாட்டிலிருந்து வெளிவருவதற்கான உதவியைப் பெற்றார். 1895, அக்டோபர் மாதத்தில் “தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட விடுதலைப் போராட்டக்குழு" என்னும் பெயரிலான குழுவிற்கு லெனின் தலைவரானார். இந்தக் குழு நவம்பர் மாதத்தில் தார்மண்டர் ஆலையில் 500 நெசவாளிகள் சம்பந்தமான வேலை நிறுத்தம் ஒன்றை ஏற்பாடு செய்தது. “நெசவாளிகளின் கோரிக்கை என்ன"? என்று ஒரு துண்டுப் பிரசுரத்தைத் தொழிலாளர்களிடையே பரப்பி இதர பிற துறைகளில் உழைக்கும் தொழிலாளிகளிடமும் ஆதரவு தேடினார்கள். லெனின்தான் இந்தத் துண்டுப் பிரசுரத்தை எழுதினார்.

“தோழர்களே! நமது விருப்பம் நிறைவேறும் வரை உறுதியுடன் நின்று நாம் போராட வேண்டும். ஒருமித்த மனப்பாங்கும் ஒருமித்த செயலும் இருந்தால்தான், நமது நிலைமைகளை நாம் அபிவிருத்தி செய்துகொள்ள முடியும்". என்ற வாசகங்களைக் கொண்டதாக அப்பிரசுரம் இருந்தது. இந்தப் போராட்டம் மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தந்தது. முதலாளி என்பது யார்? அரசாங்கம் என்பது என்ன? அரசாங்கத்துக்கும் முதலாளிக்கும் இடையில் நிலவும் உறவு என்ன? என்பவை பற்றி லெனின் சிறப்புரைகள் வழங்கினார். “இரப்போச்சியே முதலே" என்கின்ற தொழிலாளர் பத்திரிக்கையை இரசியமாக அச்சிடுவதற்கு முன்னமே போலீசார் சோதனையிட்டு, 1896ஆம் ஆண்டு டிசம்பர் 8இல் லெனினையும், இதரபிற தோழர்களையும் அதிகாரம் கைது செய்து சிறை பிடித்தது.

1896ஆம் ஆண்டில் லெனின் பதினான்கு மாதங்கள் சிறையில் தனித்த கொட்டடியில் இருந்த போதும் தொடர்ந்து தொழிலாளர் போராட்டங்கள் அவரது பின்னணியிலேயே நடத்தப்பட்டன. போராட்டத்திற்கான துண்டுப் பிரசுரங்கள் மற்றும் புரட்சிக் கருத்துக்களைப் புத்தகங்களின் வரிகளுக்கிடையில் கண்ணுக்கு தெரியாதபடி பாலில் தோய்த்தோ அல்லது எலும்பிச்சம்பழம் சாற்றில் தோய்த்தோ எழுதுவோர். அவர் எழுதியிருக்கும் பக்கங்களைத் தரையில் காட்டினால் எழுத்துக்கள் புலப்படும். பின்பு அவை அச்சடிக்கப்பட்டு பரப்பப்படும். தமக்குக் கிடைக்கும் நாட்டில் சிறு மைக்கூடு செய்து அதில் பாலை வைத்துக்கொண்டு லெனின் எழுதினார். காவல்காரர்கள் வரும் ஓசை கேட்டால் மைக்கூட்டை விழுங்கி விடுவார். “இன்று நான் ஆறு மைக்கூடுகளை விழுங்கினேன்" என்று தான் எழுதிய கடித்தில் வேடிக்கையாக லெனின் குறிப்பிட்டுள்ளார். லெனின் சிறையிலிருக்கும் போதே பீட்டர்ஸ்பர்க்கில் 1896ஆம் ஆண்டு பெரிய வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது. லெனின் தொழிலாளர் விடுதலைக் குழு இந்த வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்திற்று. இந்த வேலை நிறுத்தங்களை “புரட்சிக்கு வித்திட்ட வேலை நிறுத்தங்கள்" என்று லெனின் குறிப்பிட்டுள்ளார்.

பெரியாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அண்ணா அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைத்தாலும் அவர்களுடைய காலகட்டங்களில் உலகம் முழுவதும் நடந்துகொண்டிருந்த புரட்சிச் செயல்பாடுகளைத் தமிழ் அறிஞர்கள் கூர்ந்து அதிர்ந்தும் கேட்டும் தாக்கம் பெற்றும் வந்தனர் என்பது யாவருமறிந்த ஒன்று. ரஷ்யப் புரட்சி என்பது இந்திய விடுதலையை விரும்பிய ஒவ்வொருவருக்கும் அடிப்படைக் கனலை அடி வயிற்றில் ஏற்றி வைத்த ஒன்றாகும். ரஷ்யாவில் லெனின் என்கின்ற தனிமனிதன் சைபீரியச் சிறையில் அடைபட்டுக் கொண்டு புரட்சியை ஒருங்கிணைத்த வல்லமையை இந்தியா உணர்ந்தது தமிழகமும் உணர்ந்தது.

சாதாரணமாக உலக மக்களிடையே பொதுவாக இருவித நிலைகள் இருப்பதைக் காண முடியும். பணக்காரன் x ஏழை, ஆண்டான் x அடிமை என்கின்ற போக்கு எல்லா நாடுகளுக்கும் பொதுவானது. ஆனால் இந்தியாவில் மட்டும்தான் உயர்சாதி – தாழ்ந்த சாதி என்ற சாதீய அதிகாரம் வலுத்து வளர்ந்துள்ளது. தொழிலாளிகளான ரஷ்யர்கள் ஒரு சிலர் மட்டும் பணக்காரர்களால் ஈர்க்கப்பட்டனர். புரட்சியை வேண்டிய ஏராளமான மக்கள் உண்ணப் போதிய உணவின்றி உடுக்கப் போதிய உடையின்றி, இருந்து வாழ வசதியான இடம் இன்றி, ஏழைகளாய் இருந்து பரிதவிப்பானேன்? இதற்குக் காரணம் என்ன! என்று சிந்தித்தார்கள்.

“பகுத்தறிவற்ற உயிரினங்களான ஆடு, மாடுகளிடையே கூட, பாழாய்ப்போன இந்த வேற்றுமை தென்படக் காணோம். சகல வசதிகளும் பெற்றுச் சுகபோகமாய் வாழ்கிற ஆடுமாடுகளையோ, ஒன்றுமே கிடைக்காது உணவுக்குப் பரிதவித்து; பட்டினி கிடந்து சாகிற ஆடுமாடுகளையோ இதுவரை யாருமே பார்த்ததும் இல்லை. ஆகவே மனிதரிடையே மட்டும் காணப்படும் இந்த வித்தியாசத்திற்கு, ஏதாவது ஒரு அடிப்படைக் காரணமோ, அல்லது காரணங்களோ இருந்ததாக வேண்டும் என்று கருதி, பல அறிஞர்கள் இது பற்றி ஆராய்ந்து இருக்கிறார்கள்.

ஆனால் வருணாசிரமக் கோட்பாடுகளை வைத்து இந்துமதம் தமிழகத்தைப் பாழ்படுத்தியிருந்தது. தமிழர்களின் தேச வளமைச் சட்டம் மற்றும் குறள் நீதி போன்றவை தன் இருப்பைத் தொலைத்திருந்தன. ஓர் இனம் ஆழமாகப் பிறிதொரு இனத்தை முழுமையாக அடக்கிவிட்டிருந்தது.

வீழ்ந்த இனத்தை எழுச்சியுறச் செய்ய வேண்டிய தேவை தமிழகத்திற்கு இருந்தது. இந்த நேரத்தில் அண்ணா அவர்கள், பெரியாரின் சீடனாக அரசியலில் பிரவேசித்தார். புதிய கருத்துகளையும், மக்களாட்சிப் பண்புகளையும், அறிவியல் சாதனைகளையும் தொடர்ச்சியாக எடுத்துரைத்தால் அது நேரடியாக அரசியல் உருவாக்கம் பெறும் என்பதை உலக நாடுகளின் முற்போக்குச் செயல்பாடுகளின் வழியாக உணர்ந்திருந்தார். ஆனால் அவையெல்லாம் தாய் மொழியின் மூலமே நடைபெற வேண்டுமென்பதில் அண்ணாவின் உறுதி இருந்தது. அதற்காக இளைஞர்கள் கல்வி பெற வேண்டுமென்பது அண்ணாவால் எடுத்துரைக்கப்பட்டது. அது தாய்மொழி வழிக் கல்வியாக வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. தன்னாட்டுப் பண்பாட்டில் ஆழமாக வேரூன்றியவனால் தான் உலகில் நற்செயல்களைச் செய்ய முடியும் என்பதற்காகத் தாய்மொழி மூலம் மக்கள் உலகை அறிய வேண்டுமென வற்புறுத்தினார்.

மதங்களை விரும்புவதும், வெறுப்பதும் ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கைமுறை சார்ந்ததென்று நினைக்கப்பட்டாலும், இந்துமதம் என்பது நச்சுப் பாம்பினைப் போன்றதெனக் கருதினார்.

நாத்திகத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டாடுவதைவிட தமிழ்நெறி சார் வாழ்க்கை அவசியம் என்பது அண்ணாவால் எடுத்தியம்பப்பட்டது.

“சைவம், வைணவம் என்ற இரண்டும் இந்து மார்க்கத்தின் கிளைகள், தமிழர் இந்துக்களால், தமிழர்க்குத் தனிநெறி உண்டு என்றாலும் இவ்விரு மார்க்கங்களையும் தழுவிக்கொண்டு, தமிழர்கள் தம்மை இந்துக்கள் என்று கருதி வருகின்றனர். தன்னெறியை விட்டு

ஆரிய நெறியாகிய இந்து மார்க்கத்தைக் கொண்டு தம்மை இந்துக்கள் எனக் கருதிக் கொள்வதால், தமிழர்கள் தாங்கள் தனி இனம் என்பதையே மறந்து இந்துக்களில் ஒரு பகுதி என எண்ணித் தன்மானத்தையும், தன்னாசையும் இழந்தனர்"[37] என்பதாக அண்ணாவின் பேச்சு இருந்தது. இந்து மதத்தை வெறுத்த அண்ணா, சன்யாட்சன் செய்கையை மேற்கோள் காட்டி, தமிழகத்தில் ஒரே கடவுள் வழிபாட்டை தமிழ்நெறி அடிப்படையில் வலியுறுத்தினார். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற பழந்தமிழ் மரபு புதுப்பிக்கப்பட வேண்டுமென்றார்.

அண்ணா தன் பொது வாழ்விற்கும், நீதிக் கட்சியுடன் தான் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கும் திரு. பாசுதேவ் என்கின்ற தொழிற்சங்க வாதியையே தொடர்பு கொண்டிருந்தார். இதனால் சோசலிசம், ரஷ்யப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி போன்றவைகளை நெருக்கமாகத் தெரிந்து கொள்ளும் அனுபவம் பெற்றிருந்ததால் அண்ணாவின் செயல்பாடுகள், கொள்கைப் பிரகடனங்கள், தீர்மானங்களின் முன்னெடுப்பு போன்ற அனைத்திலும் லெனினின் சாயல்கள் தென்படக் கிடைக்கின்றன. லெனினின் புரட்சிகரச் செயல்களைப் பெரியார் உட்பட உலகம் முழுவதுமுள்ள பேரறிஞர்களும், புரட்சிவாதிகளும் கவிஞர்களும் பாராட்டினர். லெனினின் அணுகுமுறைகளால் உலக நாடுகளில் உள்ள பெருந்தலைவர்கள் ஈர்க்கப்பட்டனர். அப்படி அவர்கள் ஈர்க்கப்பட்டதை அண்ணாவின் அனைத்துச் செயல்பாடுகளிலும் காணலாம். லெனின் எவ்வாறு ரஷ்யாவில் நரோத்னிக்குகளை அடையாளம் கண்டு ஏழைகளிடம் அம்பலப்படுத்தினரோ, அது போலவே அண்ணா நீதிக்கட்சியில் சேர்ந்த போது அக்கட்சியில் பெரும் பணக்காரர்கள், பதவி வேட்டை யாடுபவர்கள், இலட்சியப்பற்று இல்லாதவர்கள் அதிகமாக இருந்த நிலையை உணர்ந்து இவர்களுடன் இணைந்து ஏழைகளுக்காகப் பாடுபட முடியாது என்பதை உணார்ந்தார். தன்னுடைய சகோதரனை ஜார் அரசு தூக்கிலிட்டபின் தன் திட்டங்களை லெனின் அரசியல் ரீதியாக எவ்வாறு கட்டமைத்துக் கொண்டாரோ அதுபோன்ற அண்ணா எதிர்காலத்தில் தான் மேற்கொள்ளப்போகும் இயக்க ரீதியான செயல்பாடுகளைத் திட்டமிட்டார். சுயமரியாதைக் கொள்கை, பகுத்தறிவுப் பிரச்சாரம், வருணாசிரமக் கொடுமை எதிர்ப்பு போன்றவற்றை முதல் வட்டாரப் பிரகடனங்களாக எடுத்துத் தன் பணிகளில் இணைத்துச் செயல்படுத்தினார். அறியாமை, விதி போன்றவற்றை வலியுறுத்துகின்ற சமூகப் பொருளாதாரக் குரோதங்களை முன் வைக்கின்ற இலக்கியங்கள், எவ்வளவு புனிதமானவையாக இருந்தாலும் அவை மக்களிடமிருந்து அகற்றப்பட வேண்டுமென்று அண்ணா வலியுறுத்தினார். இதனால் பழமையைப் பேணிக் காத்து வந்த தமிழகத்தில் பெரும் பரபரப்பு

ஏற்பட்டது. இளைஞர்களின் மத்தியில் புதிய எழுச்சி உண்டானதோடு புதிய எண்ணங்களைக் கண்டு மக்கள் அதிர்ச்சியும், வியப்பும் அடைந்தனர். பழமையில் ஊறிப் பாழாய்ப் போன அவர்கள் எண்ணத்தை – அடிமனதில் கொண்டு, அடிமைத்தனம் ஒரு கூட்டுச் சரக்கு என்றார் அண்ணா.

தமிழக மக்கள் எழுச்சி பெறத்தொடங்கிய காலகட்டத்தில் வட இந்தியாவிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டு ஆரிய சமாஜம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. "வேதங்களுக்குத் திரும்புங்கள்" என்று குரல் கொடுத்து வேத நெறியின் அடிப்படையில்தான் புதிய இந்தியா உருவாக்கப்பட வேண்டுமென்றும் பிரச்சாரங்கள் தொடங்கப்பட்டன. ஆரிய சமாஜத்தை உருவாக்கிய தயானந்த சுவாமிகள் சமய நெறி, சமூக நலன்களுக்கத் துணை நிற்க வேண்டுமென்ற கருத்துடையவராகக் காட்டிக் கொண்டார். சமய சமூகப் பிரச்சினைகள் மட்டுமல்லாமல் புதிய அறிவியல் வேதியல் உண்மைகள் கூட வேதங்களில் கூறப்பட்டுள்ளதாக விவாதித்தார். இவ்வாறு இருப்பவர்கள் ஒன்று கூடி உருவாக்கிய ஒரு இயக்கம் தேசிய மொழி, தேசியக் கல்வி, தீண்டாமை ஒழிப்பு, சுதேசி இயக்கம், பசுவதைத் தடுப்பு, வேள்வி வளர்த்தல் முதலிய இயக்கங்களை நடத்திற்று. இந்த இயக்கத்தினுடைய ஒட்டு மொத்த அரசியல் வெளியீடாகக் காங்கிரஸ் கட்சியும் உருவாகியது. காங்கிரஸ் கட்சிக்கு ஆரிய சமாஜம் பலரை உருவாக்கித் தந்ததோடு மக்களைச் சுதந்திரப் போரில் ஈடுபடுத்துவதில் தன்பணியை ஈடுபடுத்திக் கொண்டது. இதனால் இரண்டு இயக்கங்களும் வேறுபாடுகள் அதிகம் நீங்கிச் செயல்பட ஆரம்பித்தன.

1942 ஆம் ஆண்டு வரை இந்தியாவில் விடுதலைப் போர் நடைபெற்றது. இந்தியாவில் வாழும் அனைத்து மொழியினங்களும் ஒரே குரலில் "வெள்ளையனே வெளியேறு" என முழக்கமிட்டன. அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடி ஒழிப்பதில் அனைவரும் ஒன்றுபடுகின்றபோது ஒவ்வொரு மொழிக்கும், ஒவ்வொரு இனத்துக்கும், தனித்தனிக் கண்ணோட்டம் இருந்தது போல் ஆரிய சமாஜ வாதிகள் "வருணாசிரமம்" சார்பான கொள்கை முழக்கங்களை முன்வைத்தனர். வள்ளலாரின் எழுச்சியில் அரசியல் செயல்பாடுகள் இல்லாமல் இருந்த காரணத்தினால் அவருடைய இயக்கம் எழுச்சி பெறவில்லை. ஆனால் தமிழக எழுச்சி என்பது பார்ப்பனிய வருணாசிரம் எழுச்சியை மீறியதாகச் செயல்பட்டது உண்மையாகும். அமைப்பு ரீதியான செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு முன்பாகவே இந்திய விடுதலை இயக்கம் தலை தூக்கிவிட்டது. இதற்குள் தலைமைகளாய் நின்றவர்களில் பெரும்பாலானோர் வருணாசிரம தர்மத்தை உயர்த்திப் பிடிப்பவர்களாகத்

தான் இருக்க முடிந்தது. இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சி தமிழ் மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியது. அதனால் தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்ட ஒரு இயக்கம் தேவையென மக்களால் உணரப்பட்டது. அந்த உணர்ச்சியை மையமாகக் கொண்டு தோன்றிய தற்காப்பு இயக்கமே தென்னிந்திய நல உரிமைச் சங்கமாகும். இச் சங்கம் காங்கிரசுக் கட்சியின் முன்னணியில் செயல்பட்ட பார்ப்பனர்களைக் கடுமையாக விமர்சனம் செய்து கொண்டு பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் என்ற ஒரு பிரச்சினையை மட்டுமே தொடர்ச்சியாக்கிச் செயல்பட்டது. வள்ளலார் நிறுவிச் சென்ற மறுமலர்ச்சிக் கொள்கை திரும்பிப் பார்க்கப்படாமல் அரசியலின் அடித்தளமாக எடுத்துக் கொள்ளப்படாமல் காலங்கள் கடந்து கொண்டிருந்தன. 1926 ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சியில் நிலவிய வருணாசிரமக் கொடுமைகளைக் கண்டித்து அதிலிருந்து வெளியேறிய பெரியார் சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். தமிழகத்தின் எழுச்சி விரிந்து வளரும் பாதையைக் கண்டது. இந்தக் காலகட்டங்களில் தமிழ், தமிழ்நாடு பற்றிய ஆராய்ச்சி விரிந்து தமிழ் நாகரிகத்தின் தொன்மையும், சிறப்பும் தமிழக மக்களால் உணரப்பட்டிருந்தது. தமிழ் நாகரிகம் பழம் பெரும் உலக நாகரிகங்களுக்குச் சமமானது என்பதை உலகம் ஒப்புக் கொண்டிருந்தது. இதனால் படித்த மக்களிடையே புத்துணர்வு உண்டானது.

இந்தியா முழுவதும் வெள்ளையர்களை எதிர்த்துப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலும் தமிழ் மண்ணில் தமிழ்மொழி, தமிழ் நெறி, தமிழ்ப் பண்பாடு பற்றிய கருத்துக்கள் தலையெடுக்கத் தொடங்கியிருந்தன. இந்தச் சூழ்நிலையில்தான் அண்ணாவின் அரசியல் பிரவேசம் என்பது நடந்தேறியது. தமிழகத்திற்குப் புதிய நிலை காணும் முயற்சியில் ஈடுபட்டு அண்ணா மக்களிடையே விஞ்ஞானப் பூர்வ புதிய மனோபாவம் உருவாக அயராது உழைத்தார். நாட்டுக்குப் புதிய நிலையும் மக்களிடையே பழமை மனோபாவமும் கிடப்பது நல்லதல்ல. அரசியல் சமூகப் பொருளாதார எழுச்சிகள் மக்களின் சிந்தனையை நவீனப்படுத்தி, மக்களின் மேம்பாட்டிற்கு உதவ வேண்டுமென்றார். தமிழர்கள் தங்களின் வாழ்க்கையை மறுபரிசீலனை செய்யத் தயாராயினர். பிற இனமக்களின் வாழ்க்கை முறைகளுடன் ஒப்பிட்டு சாதக பாதகங்களை மக்கள் விமர்சிக்கத் தொடங்கினர். அண்ணாவின் பேரணியில் தமிழகம் புதிய வடிவம் கொள்ளலாயிற்று.

# 5.போராட்டப் பின்னணியில் அண்ணா

இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னதான பழமையை இந்த உலகம் கொண்டிருந்தாலும் மனித சமுதாயம் பற்றிய ஆராய்ச்சி அறிவு சில ஆயிரம் ஆண்டுகளுக்குட்பட்டதாகத்தான் நடைபெற்று வந்திருக்கின்றது. தொடக்க காலத்தில் மனித வாழ்வு, எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியான வாழ்க்கை நிலையைக் கொண்டிருந்த தாகத்தான் மானுடவியலாளர்களால் அறிந்து கூறப்பட்டிருக்கின்றது. எண்ணங்கள், சமூக உறவுகள், இலக்கியங்கள், கடவுட்கதைகள் ஆகியவை எல்லாச் சமூகத்திலும் ஒரே மாதிரியான தன்மையுடன்தான் இருந்திருக்கின்றன. தமிழக, சிந்து வெளி, சுமேரியா, ரோம், கிரேக்க, எகிப்து, சீன நாகரிகங்கள் இதற்குச் சான்றுகளாக இருக்கின்றன. இந்தியப் பரப்பெல்லையில் ஆரிய நாகரிகம் உட்புகுந்த பின்பு புதியதொரு விறுவிறுப்பும், வாழ்க்கைக்கப்பாற்பட்ட புதுவித தெய்வீகத் தன்மையும் தென்படுகின்றது. அதன் அடிப்படையில் மன்னர்கள், புரோகிதர்கள் வகுத்த சட்ட திட்டங்களை உள்வாங்கி அவற்றுக்கு மதிப்பளித்து அவை உற்பத்தி செய்த சாதியை மக்களிடையே திணித்திருக்கின்றனர். அதுவே வருணாசிரமத் தர்மம் என்று மக்களுக்கு உபதேசிக்கப்பட்டிருக்கின்றது.

மூவேந்தர்களின் ஆட்சி முற்றுப் பெறுகின்ற நேரம்தான் தமிழகத்தின் வரலாற்றுக் கால இறுதியெனக் கொண்டோமானால், அக்காலத்தை முழுக்க முழுக்க ஆரிய ஆதிக்கம் முழுவதுமாக வளைத்துக் கொண்டு தமிழ் நெறியை விழுங்கிவிட்டது என்பதைக் காண முடியும். வருணாசிரமக் கேடுகள் தமிழகத்தைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்த அக்காலத்தில் பல்லவர்களின் ஆட்சியும் அதற்குத் துணை நின்றது. தொடர்ந்து வந்த சோழப் பாண்டிய அரசுகளுக்கும் இதனை விலக்கி வைக்க எண்ணமில்லை. அதன் பயனாக மாறிவரும் தொழில், வர்க்க உறவுகள், மாறாத அசைக்க முடியாத அமைப்பாக மாற்றப்பட்டுவிட்டன. தொழில் பிரிவினைக்கு, வர்க்கப் பிரிவினைக்கு வருணாசிரமக் கோட்பாட்டின் மூலம் பெயர் சூட்டி சாதி அமைப்பு உருவாக்கப்பட்டது. இதனால் உலகின் வேறு எந்தப் பாகத்திலும் நடைபெறாத கொடுமையாக தொழில் வர்க்க அடிப்படைப் பின்புலத்தில் சாதி நீடிக்கிறது. அதன் தொடர்ச்சியாக வேற்றுமைகளும், குரோதங்களும் இந்தியாவில் நீடிக்கின்றன.

தமிழக அரசுகள் ஒழிந்தபின் வேற்று இன மொழி மரபுகளின் ஆட்சி தமிழகத்தில் நிலைபெற்றது. சிறப்பாக நாயக்கர் ஆட்சி செழித்து வளர்ந்தது. இந்து மதத்தைக் காப்பாற்றத் தோன்றிய விஜய நகர அரசும் அதன் வழித் தோன்றலாக நிலவிய நாயக்க அரசுகளும் தமிழ்நாட்டில் தங்களின் நிலை பேற்றிற்கும், உறுதிக்கும் இந்து மதத்தை ஆழமாகப் பதித்து வருணாசிரமக் கேடுகளால் சாதி அமைப்பில், சமூகத்தில் பிரிவுகளையும் பேதங்களையும் அதிகமாக்கின. நாயக்கராட்சியினால் தமிழகத்தில் தமிழ், தமிழன், தமிழ்நாடு என்ற உணர்வு முற்றிலுமாக இல்லாமல் செய்ய முடிந்தது. மீண்டும் தமிழகத்தில் “தமிழ்” சார்ந்த உணர்வு வரும் என்ற நம்பிக்கை கூட அற்றுப் போகச் செய்தது.

மாறி மாறி வந்த ஆதிக்கங்களாலும், வருணாசிரமக் கொடுமைகளாலும் தமிழகம் அல்லற்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் வாணிகம் செய்யும் எண்ணத்தோடு தமிழகம் உட்பட இந்தியாவைத் தன்கையில் ஆங்கிலேயன் எடுத்துக் கொண்டான். குடிப்பெருமை, பழம் பெருமை, மரியாதை போன்றவற்றில் ஆசை கொண்டிருந்த தமிழ் பூர்ஷ்வாக்கள் ஆங்கிலேயனிடம் உதவி பெற்று அல்பப் பொருட்களுக்காக நாட்டைக் கொடுத்து தங்களின் சுக போகங்களைத் தக்க வைத்துக் கொண்டனர். வருணாசிரமக் கேடுகளாலும், அரசியல் ஆதிக்கத்தின் அத்து மீறிய போட்டிகளாலும் அல்லற்பட்ட மக்கள் வேறொரு ஆங்கில ஆட்சியை வரவேற்றனர்.

தமிழகத்தைப் பட்டுவாடா செய்த ஆங்கிலேயர்கள் 1853 ஆம் ஆண்டு முதல் 1921 – ஆம் ஆண்டு வரை வரி வசூலும் நாட்டுப் பாதுகாப்பும் தவிர அபிவிருத்தி வேலைகள் எதையும் செய்யவில்லை. இங்கிலாந்தின் கரிக்கும், நீராவிக்கும் தமிழகத் தொழில்கள் பலியாயின. கலைகள் ஒழிந்தன. மக்களின் வாழ்க்கைத் தரம் நசிந்தது. வறுமையையும் இல்லாமையும், பஞ்சமும், பசியும் பிணியும் மக்களைத் தொற்றிக் கொண்டது. சுரண்டலில் ஆர்வமாக இருந்த அரசு மக்களைக் காப்பாற்றாத நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வள்ளல் இராமலிங்கனார் துணை நின்றார்.

“வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றறைக் கண்டுமனம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்
நேர்வறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக் கண்டு இளைத்தேன்!”38

(ஆறாம் திருமுறை, பக் - 102)

என்று மனம் நொந்த வள்ளலார் 1867 ஆம் ஆண்டு தருமசாலை நிறுவி அன்னதானம் நடைபெற ஏற்பாடுகள் செய்தார். பொருளாதாரக் கேடுகளால் அவதியுறும் மக்களைச் சமுதாயக் கேடுகளும், அறிவிற்குப் பொருந்தாத சமயக் கோட்பாடுகளும் ஆற்றலைக் குலைக்கும் மூட நம்பிக்கைகளும் பிளவுபடுத்தும் வருணாசிரமத் தத்துவங்களும் சூழ்ந்து கொண்டன என்பதனை உணர்ந்தார். புதிய சமுதாயம் ஒன்றைக் காண வேண்டுமெனவும் அச் சமுதாயம் பேதங்களற்றதாய் விளங்க வேண்டுமெனவும் குரல் கொடுத்தார்.

> "நால் வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
> நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளைவிளையாட்டே
> மேலவரும் தொல்வருணம் கண்டறிவரிலை நீ
> விழித்துப்பார் என்றெனக்கு விளம்பிய சற்குருவே
> இருட்சாதித் தத்துவ சாத்திரக் குப்பை
> இருவாய்ப் புன்செயல் எருவாக்கிப் போட்டு
> ....................................."[39]

(ஆறாம் திருமுறை பக் - 168)

என்று மூடக் கட்டமைப்புக்களைக் கண்டிப்பதோடு நிற்காமல் அவற்றை ஒழித்து உயர்வு தாழ்வற்ற சமுதாயம் காண வேண்டுமென வள்ளலார் வலியுறுத்திச் செயல்பட்டார். தமிழகத்தில் சமுதாய மாற்றங்களைச் சரியான முறையில் எடுத்தியம்பியதில் முதல்வராகத் தோன்றியிருந்த வள்ளலார் தமிழக வரலாற்றில் ஒரு திருப்பு மையமாகவே இருக்கின்றார்.

> "இச்சாதி சமய விகற்பங்களெல்லாந் தவிர்த்தே
> எவ்வுலகும் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்
> ஒத்தாரும் உயர்ந்தாரும், தாழ்ந்தாரும் எவரும்
> ஒருமையுளராகி உலகியல் நடத்த வேண்டும்"40

என்று - "பொதுவுடைமை" என்ற கருத்தை சன்மார்க்க நெறியில் இணைத்து வெளிப்படுத்தினார். அவரின் சிந்தனையில் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற பழந்தமிழ் அறநெறி மரபு புதுவடிவு பெற்று உயிர்த்துடிப்புடன் வெளிப்பட்டது. அந்நியனுக்கு அடிமைப்படுவதற்கு முன்பே வருணாசிரமத்திற்கு, பழமைக்கு, விதிக்கு அடிமைப்பட்டு இருப்பதனால் 'பகுத்தறிவு' என்ற ஒன்று தமிழ்நாட்டு மக்களுக்கு அவசியமாகத் தேவைப்பட்டதை அறிஞர்கள் உணர்ந்திருந்தனர். மனிதனிடமிருந்து மிருகத்தைப் பிரித்து மனிதனை மனிதனாக்க, அவனது எண்ணத்தில் மாளாது குடி கொண்டிருக்கும் சாதியென்னும் இருளை அகற்றப் பகுத்தறிவு பிறக்க வேண்டிய நிர்ப்பந்தச் சூழல் ஏற்பட்டது. பகுத்தறிவற்ற எல்லாவற்றையும் மதம் என்ற பெயராலும்,

சாதி என்ற பெயராலும் நியாயப்படுத்திக் கொண்டிருந்த தலைவிதிக் கோட்பாட்டை அடியொடு கில்லியெறியும் ஒரு மகத்தான இயக்கம் அண்ணாவின் தலைமையில் உருவாக்கப்பட்டது. நாடு, மொழி, மக்கள், அவர்தம் நிலை ஆகியவற்றைக் காத்து மேம்படுத்துவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு அரசியல் சமூகப் பொருளாதாரத் துறைகளில் கிளர்ச்சியூட்டும் விதமான மாற்றங்களை ஏற்படுத்துவதாக இயக்கத்தின் செயல்பாடுகள் நடைபெற்றன. சாத்திர சம்பிரதாயங்கள் என்கின்ற முடத்தைத் தூக்கிக் கொண்டு ஆதிக்க வாதிகளாகத் தமிழகத்தில் கூட்டம் கூட்டமாக உருவெடுத்திருந்தனர். நூற்றாண்டுகளாக நிலவிவந்த இந்தக் கொடுமையின் பேரில் பெரும்பாலான மக்களைப் பிறவி அடிமைகளாகவும், நடைபிணங்களாகவும் முத்திரை பதித்து வைத்த கொடுமை நிலைக்கு அண்ணா "பார்ப்பனீய ஆரியம்" என்று பெயரிட்டு அதனை அடியோடு அழிக்க வேண்டுமென்றார்.

பார்ப்பனீயத்தின் பலனாக ஒரு பெரிய திராவிடச் சமுதாயம் சின்னாபின்னப்பட்டுப் போய்க் கிடக்கிறது. பிறர்க்கு அடிமைகளாய் - பேசும் ஊமைகளாய் - நடைபிணங்களாய்ப் போய்விட்டனர். தகப்பனுக்கு மேக வியாதி இருப்பின் பிறக்கும் குழந்தை குருடாகப் பிறக்கும் என்பர், மருத்துவ நூல் கற்றோர் குருட்டுக் கிழவிக்குக் குவலயத்தின் குதூகலக் கட்சி எங்ஙனம் தெரியும்? பார்ப்பனீயம் என்னும் மேகநோயால் பிடிக்கப்பட்டிருக்கிறது தமிழகம் பிறக்கும் திராவிடன் குருடனாகிறான்....................என்று அண்ணா விளக்குகிறார்.

பார்ப்பனீயம் என்று அண்ணா குறிப்பிடும் போது பார்ப்பனர்களை மட்டுமல்ல; வருணாசிரம நோயால் பீடிக்கப்பட்டு, ஆதாயம் தேட நினைக்கும் அனைவரையும் சேர்த்தே குறிப்பிடுகின்றார். எனவே பார்ப்பனீயம் என்ற சொல் தனி நபர்களைச் சாடுவதல்ல; திராவிடச் சமுதாயத்தைப் பாழ்படுத்திய ஒரு சமூக அமைப்பைச் சுட்டுவதாகும்.

விதிக் கோட்பாடு என்பதை உயர்த்திப் பிடிக்கும் பார்ப்பனீயம் புத்தாக்கப் பணிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடியது; புதிய சமூகம் அமைக்க நினைக்கும் மக்களை மிரட்டிச் சம்பிரதாயச் சுமைகளுக்குள் தள்ளி கொடும் தண்டனையளித்து அழிக்கக் கூடியது. பழமைக்கு மட்டும் ஆதரவு தருகின்ற ஏராளமான ஏடுகளைச் சுமந்து கொண்டு அவற்றிலிருந்து மேற்கோள்களை மட்டும் விதி முறைகளாகக் கொண்டு ஒரு சமூகத்தின் முன்னேற்றங்களை ஒழிக்காமல் ஒழித்தது பார்ப்பனீயம். இதனால் அண்ணா.......

"பழைய முறைகளையும் எண்ணங்களையும் மேலும் ஊட்டக் கூடிய ஏடுகளைச் சேகரித்து அதற்குப் புத்தக சாலையென்று பெயரிடுவது; குருடர்களைக் கூட்டி வைத்து அவர்கள் உள்ள இடத்துக்கு 'வழிகாட்டுவோர் வாழும் இடம்' என்று பெயரிடுவது போன்ற கோமாளிக் கூத்தாக முடியும்"[41] என்று கூறித் தவறான அணுகுமுறைகளில் நியாயங்கள் முன்வைக்கப்படுவதைக் கண்டித்தார். விதி, வினை, கர்மம், தலையெழுத்து என்று பல்வேறு பெயர்களால் சுட்டப்படுபவற்றை ஒட்டு மொத்தமாக அவற்றை ஒரு "பழம்பெரும்வியாதி" என்றே அண்ணா குறிப்பிட்டு வந்தார். இத்தகைய ஆவேசச் செயற்பாடுகளுக்கு அண்ணா மிகப்பெரிய தயாரெடுப்புச் செய்ய வேண்டியிருந்தது. 1961 ஆம் ஆண்டில் மிகப் பெரிய நெருக்கடிகளைச் சந்தித்த லெனின் தனித்துத் தைரியமாக இயங்கத்தொடங்கியதை இங்கு நினைவில் கொள்ளலாம். அக்காலக்கட்டத்தில் ரஷ்யாவில் நிலவும் சூழ்நிலைகள் புரட்சி ஏற்படுவதற்குச் சாதகமாய் இருக்கின்றன என்றும், அந்தப் புரட்சியைப் பாட்டாளி மக்களின் புரட்சியாக மாற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளைப் பற்றியும் லெனின் ஆழ்ந்து சிந்தித்தார்.

ரஷ்யாவில் நிலவிய யதேச்சாதிகார நிறுவுதலுக்குப் பிற்போக்குக் கூட்டங்களும், இராணுவமும் துணையாய் நின்று போரை நடத்திய காலங்களில் முதலாவதாக யதேச்சாதிகாரத்தை ஒழித்தால் தான் பாட்டாளி மக்களின் புரட்சி என்ற ஒன்று ரஷ்யாவில் உதிக்க முடியுமென்ற நிலையை லெனின் உணர்ந்தார்.

யதேச்சாதிகாரத்தை ஒழிக்க முதலாளிகளும் விரும்புகின்றனர். இதனால் பாட்டாளி மக்கள் முதலாளி வர்க்கத்தினருடன் சேர்ந்து கொண்டு பிற்போக்குவாதிகளை ஒழித்துக் கொண்டு அதன் பின்னணியில் எட்டுமணி நேர வேலை, எழுத்து உரிமை, பேச்சு உரிமை, கூட்டம் கூடும் உரிமை, பண்ணை நிலங்களைப் பறிமுதல் செய்வது போன்ற கோரிக்கைகளை எடுத்து நடத்த வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. முதலாளிகளும், இராணுவத் தலைமையதிகாரிகளும் ஆட்சிகளையும், அதிகாரங்களையும் தங்கள் பிடியில் வைத்துக் கொள்ள முயற்சி செய்யும் போது, அவர்களை அப்புறப்படுத்தி விட்டு பாட்டாளி மக்களின் ஒற்றுமையினால் சோசலிச சமுதாயத்தை நிறுவ வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. இந்த முறையிலான போராட்டங்களைப் பாட்டாளி மக்கள் நடத்தும் போது புரட்சி ஏற்படுவது சாத்தியமென்றும், அங்ஙனம் ஏற்படும் போதே அது பாட்டாளி மக்களின் புரட்சியாக உருப்பெற முடியுமென்றும் லெனின் முடிவுக்கு வந்தார். இந்த முடிவுகளைப் பாட்டாளி மக்களான பீட்டர்ஸ்பர்க் நகரத் தொழிலாளர்கள் பின்பற்றத் தயங்காமல் இருந்தனர் என்பது தான் குறிப்பிடத்தக்கதாகும். அதனால்தான் ரஷ்யாவில்

தோன்றிய பிப்ரவரிப் புரட்சி மாபெரும் அக்டோபர் புரட்சியாக வடிவம் பெற்று பாட்டாளி மக்கள் தங்கள் கைகளில் அதிகாரம் பெறுவதற்கு வழிகோலியது. இதற்காக லெனின் மேற்கொண்ட நடவடிக்கைகளும் முயற்சிகளும் உலக வரலாற்றின் முக்கிய திருப்பு முனைகளாகவே இன்றும் கருதப்படுகின்றன. புரட்சி என்பது தனிப்பட்ட ஒரு பெரிய மனிதர் மட்டும் கடைபிடிக்கக் கூடிய நடைமுறையன்று; பொதுமக்களே திரண்டு எழுந்து, தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள நடத்தும் ஒரு உரிமை போராட்டமாகும். இதற்கு ரஷ்யத் தொழிலாளர்கள் தங்களின் ஆதரவை ஒத்துழைப்பு, தியாகம், உழைப்பு, உறுதி, தியாகம் போன்றவற்றால் எடுத்துக் காட்டினார்கள்.

புரட்சி வருவது உறுதி என்பதையுணர்ந்த லெனின் தன்னைத் தயார்படுத்தியதோடு பிறரையும் தயார்ப்படுத்திய நிலை பாராட்டுதலுக்குரியது, மார்க்சும் ஏங்கெல்சும் புரட்சியைக் குறித்துக் கூறியுள்ள அனைத்தையும் லெனின் கவனத்தில் கொண்டு பொருளாதார, அரசியல், சமுதாய மற்றும் சர்வதேச ரீதியில் புரட்சியென்பது என்னென்ன மாதிரியான விளைவுகளை உண்டாக்குமென்பதைத் தீர்மானமாக உணர்ந்து முடிவுகளை எடுத்தார்.

பெரும்பாலான மக்கள் தங்கள் நாட்டில் உரிமையோடும், பெருமையோடும் நல்ல முறையில் வாழ்வதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு, ஆட்சி செலுத்தும் அரசாங்கத்தைக் கைப்பற்றி, ஆட்சியாளர்களின் ஆதிக்கத்தை அடியோடு நசுக்குவதே புரட்சி எனப்படும். இப்புரட்சிக்கான பாதையை வகுப்பதற்கு அரசியல் பள்ளிக்கூடம் ஒன்றை வாலிபர்களுக்கு நடத்திப் புரட்சியில் அவர்கள் எப்படிப் பங்கு பெற வேண்டும் என்பதனை லெனின் போதித்ததோடு தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள் போன்றவர்களுக்கான பங்கு புரட்சியில் எவ்வாறு இருக்கிறது என்பதைத் தெளிவான முறையில் அவர்களை இருத்தி விளக்கினார்.

புரட்சிக்கு அடிப்படை ஆயுதம் படை என்பதையுணர்ந்து படைவீரர்களைத் தயார்படுத்தி அவர்களுக்கான உரிமைகளும், கடமைகளும் விளக்கப்பட்டன. குறிப்பாக அரசாங்கத்துடன் பாட்டாளிகள் ஏன் ஒத்துழைக்கக் கூடாது என்பதனைத் தெளிவாக எடுத்துரைத்தார். கட்சி மநாடுகள் கூட்டப்பட்டும் போரினால் ஏற்பட்டிருக்கும் சாதக பாதகங்களை ஆராய்ந்தும், அபிப்பிராய பேதங்களைக் களைந்தும் லெனின் செயல்பட்டிருக்கிறார். வலது சாரிகளை ஒதுக்கிவிட்டு இடதுசாரிகள் மட்டும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு லெனின் அலுப்பு சலிப்பின்றி அயராது உழைத்து மக்களை அணி திரட்டியுள்ளார்.

லெனின் புரட்சியின் முன்னெடுப்பிற்குத் தன்னையும், தன்சமூகத்தையும் தயாரெடுப்புச் செய்ததைப் போலவே அண்ணாவும் பழமைவாதிகள் அதிக முயற்சியெடுத்து எதிர்வினைகளில்லாத சமுதாயத்தைத் தக்கவைத்துக் கொண்ட சூட்சுமத்தை உணர்ந்து மனிதனைச் செயலற்றவனாக ஆக்குகின்ற ஒவ்வொரு சிறு கூறையும் பற்றிப் பேச முற்பட்டார். பிறரையும் பேச வைத்தார். விதிக் கோட்பாடு மனிதனின் முயற்சியையும், ஆற்றலையும் தூங்க வைக்கிறது; மனித சமூகத்திற்குத் தீங்கிழைக்கிறது, மனிதனின் கோரப்பிடியிலிருந்து மனிதனை, மனித சக்தியை மீட்க வேண்டும்; அதற்குத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். இளந்தலைமுறையினருக்கு இன்று சொல்லித் தரப்படுகின்ற பாடமுறையையே மாற்றியமைக்க வேண்டும். பாடத்திட்டத்தில் பகுத்தறிவைப் புகுத்தி மக்களின் சிந்தனைகளை நவீனமாக்க வேண்டும் என்று முனைந்தார்.

விதிக்கோட்பாட்டின் விளைவினால்தான் உயர்ந்த சாதிக் காரர்கள் போன்று பொருளாதார வளர்ச்சியால் கொழுத்த பணக்காரர் களும், ஏழைகள் மற்றும் உழைப்பாளிகள் மீது ஆதிக்கம் செலுத்த வாய்ப்பு ஏற்பட்டு விடுகின்றது. ஜனநாயகத்தில் தேர்தல் அமைப்பையே விலைக்கு வாங்கிவிடக் கூடிய அளவிற்குப் பொருளாதார பலம் சிலரிடமும், செக்கு மாடாக உழைத்தால்தான் வாழ முடியும் என்ற நிலை பலரிடமும் இருக்கும் பொருளாதார பேதம் ஒழிக்கப்பட்டால்தான் மக்களுக்கு உண்மையான விடுதலையும் முன்னேற்றமும் சாத்திய மாகும். இதற்காகப் பலமான தாக்குதல் ஒன்று அறிவு சார்ந்து, தன்னலம் துறந்து நடத்துகின்ற போது மட்டுமே அடிமைத் தளைகளை நீக்க முடியுமென்பது அண்ணாவால் உணர்த்தப்பட்டது.

“தோழமை – ஒற்றுமை – கூட்டுறவு - ஒப்பந்தம் - கூடி வாழ்தல் - நட்பு - அன்பு என்றுள்ள எத்தனையோ பதங்களும் ஒவ்வோர் அறிவுரையை மட்டுமே சொல்லக் கூடியவை – முழுதிருப்பதி தருபவை அல்ல. இவைகள் தோழமை என்ற நிலையை அடையும் படிக்கட்டுகள். ஆனால் தோழமை இவ்வளவுக்கும் மேலான ஓர்நிலை, பேதம் நீங்கிய, நீக்கப்பட்ட அல்லது கவனிக்கப்படாத நிலை அல்ல. பேதம் ஏற்படாத, ஏற்பட முடியாத – நிலை."

“தோழமை – ஒருவரையொருவர் கண்டவுடன் சிரமமின்றி முகமலர்ச்சி ஏற்பட வேண்டும் - பயம் கருதியல்ல - அர்த்தமற்றதும் அல்ல, கண்டதும் களிப்பு! நம்மைப் போல் ஒருவன் என்ற நினைப்பிலிருந்து அந்தக் களிப்பு! மலர வேண்டும். இந்தத் தோழமை தான் சமத்துவத்தின் கனி; சமதர்ம மணம்"[42] என்று அண்ணாவுக்கு “தோழமை" என்பதை மனமுவந்து உணர்ந்து வெளிப்படுத்தும் உணர்வு

உலகில் ஏற்பட்ட புரட்சி மற்றும் மாற்றங்களின் பின்னணியில் ஏற்பட்டதாகும். பகுத்தறிவும் புரட்சியும், தமிழ் உலகில் சமூகப் பேதங்களையும், குரோதங்களையும் ஒழித்து இல்லாமைக்கும் வறுமைக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமையுமென நம்பப்பட்டது. தனியுடைமைகளும், மனிதனை மனிதன் சுரண்டும் பழக்க வழக்கங்களும், ஏற்றத் தாழ்வுகளும் ஒழிக்கப்பட்டு மனித வளர்ச்சியின் குறுக்கே நிற்கும் எல்லா முட்டுக்கட்டைகளும் தவிர்க்கப்படுவதன் மூலம் சமுதாயச் சீர்கேடுகள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற முயற்சி தோன்றியது. சமுதாயச் சீர்கேடுகள் ஒழியும்போது சமுதாயத்தில் புதிய நோக்கும் போக்கும் ஏற்பட்டுச் சமதர்மம் தழைக்கவும், தோழமை உணர்வு பெருகவும் அது வழிவகை செய்யுமென்பது போதிக்கப்பட்டது. உழைப்பு மனிதனின் முக்கியமான தேவையாக மாறி, மனிதனின் தரத்தை நிர்ணயிக்கும் அளவுகோலாக அமையும் போது அது சுண்டலுக்கும் அடக்குமுறைக்கும் முற்றுப்புள்ளி வைத்து மக்கள் அனைவரின் சமத்துவத்தை நிலைநிறுத்தும் என்ற கருத்து அண்ணாவால் வலியுறுத்தப்பட்டது. வாழ்க்கை வசதி தேடுவதற்கு ஏற்பட்ட உழைப்பினாலேயே ஒருவன் உருக்குலைந்து போகும் நிலை ஏற்படுமானால், அவன் "முட்டையிட்டதும் செத்துவிடும் கோழி; அரும்பு விட்டதும் பட்டுப் போகும் செடி" போலப் பயன் காணாமலும் பயன் தராமலும் போய்விடுகிறான். அதனால் மனிதன் பரம்பரைத் தொழிலைச் செய்யும் பழக்கம் ஒழித்து, அவரவர் விருப்பத்திற்கும் திறமைக்கும் ஏற்ற தொழிலைச் செய்யும் வளர்ப்புப் பெற வேண்டும். காலப்போக்கில் உழைப்பு 'பொருள்தேடும் வழி' என்ற நிலையிலிருந்து மாறிச் 'சுயமான ஆக்கத் தேவையாகிவிடும்' போது, உழைப்பின் மூலம் கிட்டும் வருவாய் வாழ்க்கைச் செலவிற்கு என்ற நிர்ப்பந்தம் ஒழிந்து, உழைப்பு மனிதனுக்கானது, சமூகத்திற்கானது என்ற பரந்த மனம் ஏற்படும்"43 என்று அண்ணா பரம்பரைத் தொழில்கள் காரண காரியமின்றி மனிதனைக் கட்டுக்கோப்பில் இன்னொருவனுக்குக் கீழ் காலம் காலமாக வாழவைக்கின்றது என்கின்ற உண்மையை விளக்குகின்றார். இதனால் பரம்பரைத் தொழில்கள் சாதி ரீதியாக அடையாளப்படுத்து கின்றவைகளாக இருந்தால் அதனையும் விட்டு விலக முடியும் என்பதை உணர்த்துகின்றார். சுயநல ஆசைகளில் இருந்து மனிதனை இது விடுவித்து, மனிதனை எல்லாத் துறைகளிலும் முழுவளர்ச்சியுறச் செய்து, ஆசைக்கும் அச்சத்திற்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்த மனிதனுக்குப் பரந்து பட்ட அளவில் உண்மையான சுதந்திரத்தைப் பெற்றுத் தருமென அண்ணா எடுத்துரைத்தார்.

மேலும் தனிமனித உரிமைகளும் சமுதாய நலன்களும் முரண்படாத வகையில் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும்

இடையிலான சுமூகமான உறவுகள் வளரும்போது தனிமனிதனும் அவனுடைய மேம்பாடும் முக்கியத்துவம் பெறுவதாக அமையும். இதனால் சிக்கல்மிக்க பிற்போக்கு ஆதிக்கச் சட்டதிட்டங்களும், சட்ட ரீதியான அடக்கு முறைகளும் மறைந்து புதிய சமுதாய விதிகளும், நியதிகளும் உருவாக நடைமுறை உலகு நிர்ப்பந்திக்கப்படும் என்று அண்ணா ஆராய்ந்து கூறினார்.

இரண்டாவது உலகப்போருக்குப்பின் உலக நாடுகள் பல புதிதாக விடுதலை பெற்றன. அவற்றில் இந்தியா போன்று ஒரு சில நாடுகளே ஜனநாயக நாடுகளாக உள்ளன. பலவிதமான அமைப்புக்கள் உள்ளதான ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளை அனுமதியாத ஒரு கட்சி அமைப்புள்ள நாடுகளும் தங்களை ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொள்கின்ற நிலையும் உள்ளது. நெறிப்படுத்தப்பட்ட ஜனநாயகம், கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம், அடிப்படை ஜனநாயகம், மக்கள் ஜனநாயகம் என்று பலவகைகள் இருந்தாலும் சட்டத்தின் மூலமான ஆட்சியாகப் பிரதிநிதித்துவ ஆட்சி அடங்கிய பாராளுமன்ற முறைகளுடன் கூடிய ஜனநாயகமே மக்களுக்கு நலம் பயக்குமென எண்ணி அண்ணா அதனை முன் வைத்தார். அதனால், மக்களின் சுதந்திரமும், ஜனநாயகமும் அண்ணாவால் பெரிதும் மதிக்கப்பட்டது என்று கூடக் கூறலாம்.

அண்ணாவின் கருத்துப்படி, முதல் மனிதன் மிகவும் சுதந்திரமானவன். அவனைக் கட்டுப்படுத்த எந்த விதமான சட்டமும் வரலாற்றில் இருந்தது இல்லை.

தன்னிச்சையாகத் திரிந்து, பசிக்கும் போது உண்டு, அலுக்கும் போது உறங்கி, கோபம் வந்தால் கூடி, குதூகலம் வந்தால் ஆடிப்பாடி மகிழ்ந்திருந்த வாழ்வு நீடிக்காத நிலை ஏற்பட்ட போது தன் வாழ்வுக்காக இயற்கையுடனும், சக மனிதனோடும், மனித வாழ்க்கை முறைகளுடனும் மோத வேண்டிய நிலையை உணர்கின்றான். இப்படிப்பட்ட போராட்டங்களுக்கு நடுவில்தான் தலைவர்கள் உருவாக்கப்பட்டனர். அவர்கள் சார்ந்த சொத்துரிமைச் சட்டங்களும் உருவாக்கப்பட்டன. தொடர்ந்து தலைவனின் அதிகாரங்கள் வளர்ந்து கொண்டே செல்லச் செல்ல அவனே மன்னனானான். மக்களின் சுதந்திரம் கேள்விக் குள்ளாகாத வகையில் அவனிடம் அதிகாரங்கள் குவிக்கப் பட்டன. காலப் போக்கில் மன்னன் கடவுளின் பிரதிநிதி என்ற கோட்பாடு ஆரியர்களால் முன்வைக்கப்பட்டது. அதனால், மக்கள் மன்னனைத் தெய்வமாக எண்ணி, அவனின் நேர்மையை நம்பி வாழ வேண்டிய நிர்ப்பந்தம் மக்களுக்கு ஏற்பட்டது. வரலாற்றின் முதல் மனிதன் உணர்ந்த சுதந்திரம்

மன்னனின் உணர்வுகளுக்குள் கட்டுப்பட்டதாய் உள்ளடக்கியும் ஒடுக்கியும் போய்விட்டது.

அதனால் சுதந்திர வாழ்க்கைக்குக் களங்கம் மன்னனால் ஏற்படும் போதெல்லாம் மன்னனைத் திருத்த முற்பட்டனர். பலனில்லாதபோது புரட்சி வெடித்தது. மக்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமேயானால் ஜனநாயகம் நிலை பெற்றேயாக வேண்டும் என்ற முடிவுக்கு மக்கள் வந்தனர். நீண்ட வரலாற்றைக் கொண்ட போராட்டத்தைத் தமிழக மக்களும் எடுத்து நடத்தி வெற்றி கண்டுள்ளனர். மக்களிடமிருந்தே எல்லா அதிகாரங்களும் பிறக்கின்றன. மக்களுக்காக ஆட்சியே தவிர, ஆட்சி செய்பவர்களின் சுக போகங்களுக்காக மக்கள் இல்லை என்பது உணர்த்தப்பட்டது. சுதந்திரமும் ஜனநாயகப் பண்பும் சிறந்து விளங்கப் பல கட்சி அமைப்பு தேவை; குறிப்பாக ஒரு நாட்டில் ஆளும் கட்சிக்கு எதிர்கட்சி அவசியமென்றார் அண்ணா. அனைவரின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து, கருத்து வேறுபாடு உடையவர்களையும் சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தியது அண்ணா ஒரு சோஷலிசத் தத்துவத் தாக்கம் பெற்றவர் என்பதை உணர்த்தியது. அவர், "ஜனநாயகம் ஓர் அரசியல் அமைப்பு அல்லது ஆட்சிமுறை என்ற அளவில் முடிவதல்ல; அது ஒரு வாழ்க்கை முறை"[44] என்று கூறியதோடு நடைமுறையில் வாழ்ந்தும் காட்டினார். லெனின் ரஷ்யாவில் நடத்திய புரட்சிச் செயல்பாடுகளை நுணுக்கமாக அறிந்து உணர்ந்ததன் வெளிப்பாட்டை அண்ணாவின் செயற்பாடுகள் அனைத்திலும் காணலாம். ஏழை எளியவர்களின் வீட்டின் முற்றங்களில் பாயிட்டு அவர்கள் பகிர்ந்த உணர்வைப் பேதமின்றி ருசித்து, ரசித்துச் சாப்பிட்டு அவர்களுக்கு மன நிறைவை அளித்துள்ளார். அதே நேரத்தில் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் அறிவார்த்த உரைகளை நடத்தி மாணவர்களோடு கலந்துரையாடி தான் ஒரு பேரறிஞர் என்பதனையும் நிரூபித்துள்ளார். அண்ணாவின் அரசியல் பிரவேசமென்பது பெரியாரின் சமுதாயக் கொள்கைகளால் அவர் ஈர்க்கப்பட்டதால் நடந்த ஒன்றாகும். தன்னுடைய திட்டங்களையும், செயல் முறைகளையும் முழுவதுமாகச் சிந்தித்து முடிவுகளை மேற்கொண்டு நீதிக் கட்சியில் சேர்ந்து அரசியல் வாழ்வைத் தொடங்கினார். அக்கட்சியினுள் இடம் பெற்ற பின்னர் நீதிக்கட்சியின் தலைவர்களுக்கும், சமூகத்தில் கீழ்த் தட்டில் உள்ள உழைப்பாளி களுக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லையென்பதையும், நீதிக்கட்சியினர் மக்களின் நலனையோ, நாட்டின் நலனையோ கருத்தில் கொள்ளவில்லை என்பதை உணர்ந்தார். ஆட்சியில் உள்ள அந்நியர்களுடன் நட்பை ஏற்படுத்திக் கொண்டு அவர்கள் பட்டம் பதவி போன்ற சமய லாபங்களை அடைந்து வருவது தெரிந்து ஏழைகளுக்கு

நன்மை ஏற்படவும் தமிழகத்திற்கு மறுமலர்ச்சி ஏற்படவும் பாடுபடக் கூடிய ஓர் இயக்கமாக அதனை மாற்ற வேண்டும் என்ற நம்பிக்கையில் ஒன்றன் பின் ஒன்றாகத் தன்னுடைய மாற்றுக் கருத்துக்களை முன் வைத்தார். உலகம் முழுவதிலும் நடைபெற்ற புரட்சிப் பின்னணிகளைக் குறிப்பாக, லெனின், ஸ்டாலின் போன்றவர்களின் செயல்பாட்டு முறைமைகளை முழுமையாகப் படித்து உணர்ந்ததன் வெளிப்பாட்டை அண்ணாவின் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் காணலாம். “பாட்டாளி மக்களின் சுதந்திரத்தை முன்வைக்கும் ரஷ்யா" வைக் காண லெனின் புரட்சியை முன்னெடுத்துச் சென்றது போல அண்ணா, “ஆரிய அதிகார சாதிப் பிடிகளிலிருந்து விலக்கப்பட்ட தமிழனையும், தமிழகத்தையும் காண முற்பட்டார். ஒரு முறை மாணவர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போது அண்ணா கீழ்வருமாறு தன் பதிலைக் கூறுகின்றார்.

“கேள்வி:- நீங்கள் ஏன் அந்தப் பதவி வேட்டையாடும் பிற்போக்கான பணக்காரக் கட்சியான நீதிக்கட்சியில் இருக்க வேண்டும்?

பதில்:- அந்தப் பணக்காரக் கட்சியை ஜனநாயகச் சமதர்மக் கட்சியாக மாற்ற வேண்டும்"[45] என்று மாற்றம் எல்லாத் தரப்பிலும் நிகழ வேண்டுமென எதிர்பார்த்துச் செயல்பட்டார்.

ஒரு நாட்டின் கலை, பண்பாடு, நாகரீகம், அறநெறி , அறிவாற்றல் முதலிய அனைத்தும் தாய்மொழி சார்ந்தே வளர்கின்றது. நாட்டின் மேம்பாடும் சிந்தனை வளமும் அந்நாட்டின் இலக்கியங்களின் வழி வெளிப்படுகின்றது. அதை உணர்ந்திருந்த அண்ணா தமிழக மறுமலர்ச்சிக்குத் தமிழ் இலக்கியங்களின் சிந்தனையில் மறுமலர்ச்சி அவசியமென்பதைக் குறியாகக் கொண்டு வள்ளலார் மேற்கொண்டிருந்த பணிகளைத் தன் இலக்கியப் பணிகளுக்கு அடியாதாரமாகக் கொண்டு செயல்பட்டார். எனவே அவருடைய மொழி அவருக்குக் கேடயமாயிற்று.

“ஒவ்வொரு மொழியும் ஒரு ஆலயம்" என்பது அறிஞர்கள் கருத்து. ரஷ்யா மற்றும் ஜெர்மனைப் பொறுத்தவரையில் தாய் மொழிக்குள் புகுந்து கொண்டு இன்னொரு மொழி அதனை ஆட்டிப் படைக்கவில்லை. ஆனால், வடமொழி என்ற ஒன்று இந்தியாவின் தலைமை அதிகாரங்களைப் பிடித்துக் கொண்டு இந்தியாவின் பிற பாகங்களை மொழிவழியாக அதிகாரத்திற்கு உட்படுத்தியது. வடமொழி என்றால் அது ‘ஆண்டவனின் மொழி' என்று தன்னைத்தானே பிரகடனப்படுத்திக் கொண்டு மற்ற மொழிகளை ‘மக்கள் மொழி" என்று பெயரிட்டு இழிவான பார்வையை வைத்தது. மலையாளம், தெலுங்கு, மற்றும் இந்தியாவின் பிற மொழிகளெல்லாம் வடமொழியை உள்வாங்க முனைந்தன. ஆனால் வடமொழி தன் அதிகாரத்தைச் செலுத்த முடியாமல் தோற்றுப் போனது தமிழகத்தில் மட்டுமே நடந்தது.

தமிழ் மக்கள் மொழி வெறியர்கள் என்ற கருத்து உலகம் முழுவதிலும் பரவியிருக்கின்றது என்று சொன்னால் அதற்குக் காரணம் அண்ணா என்று சொல்லலாம். தமிழர்கள் பழமையான சிறந்த மொழியைச் சொந்தமாகக் கொண்டவர்கள். அம்மொழியின் நுட்பத்தைப் புரிந்து கொண்டதோடு மொழி வளத்தையும், மொழிப் பற்றையும் ஓர் இனம் இழந்துவிட்டால் அந்த இனமே அழியும் என்ற உண்மையை உணர்ந்தவர்கள். அண்ணாவின் காலத்தில் வடமொழியைக் கற்றவர்கள் இருந்தனர். ஆனால் தாய் மொழியின் சிறப்பறிந்தவர்களாக அவர்கள் இருந்து "ஆரியத்துக்கு நிகர் தமிழ்" என்று முழக்கமிடுபவர்களாக இருந்தனர். வடமொழியை மனமுவந்து எதிர்த்ததனால் தமிழர்களால் ஆங்கிலத்தையும் எதிர்க்க முடிந்தது. அதனைத் தொடர்ந்து இந்தியையும் எதிர்க்க முடிந்தது. இன்றும் இந்தியை எதிர்த்து ஆட்சிமொழி உரிமை தொன்மைமிக்க தமிழ்மொழிக்கு மட்டுமல்ல, தகுதியுடைய அனைத்து மொழிகளுக்கும் ஆட்சி மொழி உரிமை தேவையென்ற போராட்டம் நடைபெறுவதற்கு அண்ணாவின் போராட்டங்கள் வித்திட்டன.

அண்ணா நீதிக் கட்சியில் சேர்ந்த நேரத்தில் சைமன் குழு இந்தியாவினுள் பயணம் மேற்கொண்டிருந்தது. நீதிக் கட்சியும், காங்கிரசுக் கட்சியும் மாறுபட்ட பல கருத்துக்களை சைமன் குழுவிற்கு முன்வைத்து அவற்றைக் குறித்த கடும் விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நீதிக்கட்சி தன் நிலைப்பாடுகளை உணர்ந்து கொள்ளாமல் சுய நல முனைப்பில் செயல்பட்டு சைமன் குழுவினை எதிர்த்துப் பேசாமல் லாபங்களை அடைந்தது. இதனால் நீதிக்கட்சித் தலைவர்களுக்கிடையேயும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. 1930 - ஆம் ஆண்டு சைமன் குழு வெளியிட்ட அறிக்கையின்படி 1937 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதில் நீதிக் கட்சி தோற்று காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்று ஆளும் கட்சியானது. தமிழ்நாட்டின் முதல்வராக இராஜகோபாலாச்சாரியார் பதவியேற்றார்.

ஆரிய சமாஜத்தின் அரசியல் பாதிப்பில் உருவான காங்கிரசுக் கட்சிக்குத் தமிழ்நாட்டில் உணர்வுப் பூர்வ அங்கீகரிப்பும், செல்வாக்கும் தோன்றவில்லை. ஆனாலும் காங்கிரசுக் கட்சி இந்தியா முழுவதற்குமான பொது மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இந்தியே இருக்க வேண்டுமென கூறித் தமிழ் மக்கள் மீது வலுக்கட்டாயமாக இந்தியைத் திணித்தது. தமிழ் மொழி போன்ற வளமான மொழிகளை அழிக்க இந்திக்காரர்கள் மேற்கொண்ட தந்திரமாகவும் அப்பட்டமான கலாச்சாரப் படையெடுப்புமாகவே தமிழகம் அதனை உள் வாங்கியது. ஏற்கனவே ஆங்கிலத்தையும் வடமொழியையும் எதிர்க்கும் தேசியம் என்ற போர்வையிலும் எதிர்ப்பு எழுந்தது.

அக்காலத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் ஆங்கிலத்தை நீக்குகின்ற இடங்களிலெல்லாம் இந்தியை மாற்று ஏற்பாடாக நிலைநிறுத்த வேண்டுமென்றும் அதுவே தேசிய இலட்சியம் என்றும் கூறி இந்தித் திணிப்பில் முழு மூச்சாகச் செயல்பட்டனர். இச்செயலை எதிர்த்துப் போராடக் கூடிய ஒரு சரியான போராளியாக அண்ணா காங்கிரசுக் கட்சியினராலும் அடையாளங் காணப்பட்டார். அண்ணா தன் மனத்தில் கொண்டிருந்த இயக்கக் கொள்கைகளையும் திட்டங்களையும் செயல்படுத்தி இறங்கிய போக்கில் தமிழ் காக்கும் போராட்டத்தையும் இணைத்துக் கொண்டு அரசியல் களத்தில் இறங்கினார். அதன் பொருட்டு முழுநேர அரசியல்வாதியானார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழ் நாட்டின் அனைத்து சக்திகளும் இணைந்திருந்தன. கட்சி வேறுபாடுகள் இன்றி கருத்து வேறுபாடு இன்றி புலவர்கள், சமயவாதிகள், ஆராய்ச்சி அறிஞர்கள், படித்த அறிவாளி வார்க்கம், நடுத்தர வர்க்க மக்கள் ஏழைகள் என அனைவரும் ஒரு அணியில் திரண்டனர். பெரியாரின் தலைமையில் தமிழகம் தமிழ் மொழிக்காகப் போராடத் தொடங்கியது.

மொழிப்போரின் தளபதியாக அண்ணா தமிழகம் முழுவதும் சுற்றி, மொழிக்கு, பண்பாட்டுக்கு. கலைக்கு, இனத்துக்கு வந்துள்ள ஆபத்தை மக்களுக்குப் புரிய வைத்தார். அதன் பயனாக மக்கள் சீறி எழுந்தனர். தமிழகம் எழுச்சியுற்று ஆட்சி மொழி இந்தியை எதிர்க்க முற்பட்டது. இளைஞர்கள் வெள்ளம் போல அணியாய்த் திரண்டெழுந்தனர். சென்னை நகரில் கண்டனக் கூட்டங்களும், மறியலும் ஓய்வின்றித் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன. கிராமங்கள் தோறும் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. ரஷ்யாவில் லெனின் பாட்டாளி மக்களைத் திட்டமிட்டு ஒருங்கிணைந்த காட்சியை, மொழியை மையமிட்டு தமிழக மக்கள் பெரியாரால், அண்ணாவால் ஒருங்கிணைக்கப்பட்ட வரலாறாகக் காண முடியும்.

போராட்டத்தில் 1200 பேர்கள் சிறை சென்றனர். பெரியாருக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழர்களின் ஆற்றலையும், உறுதியையும் உலகுக்கு உணர்த்தியதோடு அண்ணாவின் தலைமையையும் நிலைநாட்டியது. தாளமுத்து, நடராஜன் இருவரும் சிறைத் தண்டனைக் கொடுமையால் மாண்டார்கள். தமிழ் மக்களின் புதிய வரலாறு அவர்களுடைய கல்லறைகளில் உதயமாயிற்று. இப்போராட்டத்தைப் பற்றி அண்ணா,

"......அவர் (ஆச்சாரியார்) புகுத்தின கட்டாய இந்தி நம்மை நாம் உணர்ந்து, உணர்ச்சி பெற்று உழைக்க உதவிற்று. திராவிட இன

உணர்ச்சி தலையெடுக்க உதவிற்று. அவர் அடக்கு முறையில் நம் உணர்ச்சி மாளவில்லை. மாறாக உத்வேகம் பெற்று ஊற்றுப்போல் ஓடியது. இன உணர்ச்சி, பொங்கு தியாகம் தெரிய, உண்மை வெளிப்பட, உழைப்பு பயனளிக்க – கட்டாய இந்தி நல்ல வாய்ப்பாக அமைந்தது. "நம்மில் எத்தனை எத்தனைத் தாய்மார்கள் சிறைக் கோட்டம் புகத்தயார் என்பதை அது உலகுக்கு எடுத்துக் காட்டியது. எத்தனை வாலிபர்கள் இப்போராட்டத்திற்கு இயைந்துள்ளார்கள் என்பதை அது விளக்கிற்று. தாளமுத்து, நடராஜன் போல் தமது உயிரையும் தரும் மணிகளின் ஒளி தெரிய அது உதவிற்று"[46] என்று குறிப்பிட்டு மக்களின் போராட்ட உணர்வையும் தியாக உள்ளத்தையும் எண்ணிப் பெருமைப்பட்டார்.

அண்ணா பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும், தமிழ் மக்களின் அறியாமையையும் அதற்குக் காரணமான மத, மூட, பழமைப் பிடிப்புக்களையும், அதற்கு உடந்தையான நாட்டு, அரசு அமைப்புக் களையும், மக்களுக்கு எடுத்துக் காட்டி விழிப்புணர்வையும் விடுதலை உணர்வையும் தூண்டிச் செயல்பட்டார். மக்கள் நலன்களை மட்டும் கருத்தில் கொண்ட ஓர் அரசியல் இயக்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம், "திராவிட நாடு" பிரிவினைக் கோரிக்கையை அரசுக்கு வலியுறுத்தினார். அக்கால அரசு அடக்குமுறையைக் கையாண்டு பிரிவினைக் கோரிக்கையைப் புறக்கணித்தது. அதனால் ஒட்டு மொத்தமான மக்களின் துணைகொண்டு அம்மக்களின் ஒருமித்த ஈடுபாட்டால் திராவிட நாட்டைப் பெற முடியும் என்று அவர் நம்பினார். மக்களை ஒரு கருத்தின் கீழ் வலிமையோடு இணையச் செய்வதை முன்னெடுக்கின்ற போது அதிகாரத்திற்கு உட்பட்டவைகளையும் அதிகாரத்தையும் எளிதில் அடையாளம் காண முடியும் என்பதனைக் காரல் மார்க்ஸீம், மார்க்ஸின் புரட்சி வழியாக லெனினும் உலகிற்கு எடுத்துக் காட்டினர்.

மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' நூல் 1872 இல் ரஷ்ய மொழியில் வெளியிடப்பட்டது. லெனின் பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே கார்ல் மார்க்ஸ் ரஷ்ய மொழியைக் கற்கத் தொடங்கியிருந்தார். ரஷ்யாவில் அந்த நூலை அதிகமானவர்கள் படித்தார்கள். நிலப்பிரபுத்துவத்தை முதலாளித்துவம் வன்முறையாக ஒழித்து அதன் இடத்தைப் பிடித்தது போல முதலாளித்துவ அமைப்பு ஒழிக்கப்பட்டு அதனிடத்துக்கு சோஷலிசம் வரும் என்று மார்க்ஸ் விளக்கினார். முதலாளித்துவம் வளர்ச்சியடைகின்ற போது தனக்குச் சவக்குழி தோண்டுபவர்களான தொழிலாளர்களைப் படைக்கிறது. அந்த வர்க்கம் முதலாளித்துவத்துக்கு வாரிசாக இருக்கும் என்றார். தொழிலாளர்கள் தங்களுடைய வறுமை காரணமாக முதலாளிகளை

எதிர்த்து ஒன்று சேர்ந்து போராடுவார்கள். தங்கள் அனுபவத்தின் மூலம் அமைப்பு ரீதியான, கட்டுப்பாடுள்ள ஒத்துழைப்பைக் கற்றுக் கொள்வார்கள். முதலாளித்துவ அமைப்பில் தனியார் லாபத்துக்காக அராஜகமான முறையில் உற்பத்தி நடைபெறுகிறது. அது ஒழிக்கப்பட்டு உற்பத்திச்/சாதனங்களைத் தொழிலாளி வர்க்கம் எடுத்துக் கொண்டு உற்பத்தியின் பலன்கள் சிறுபான்மையினரிடம் குவிந்து விடாமல் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும். ஆனால் உடைமை வர்க்கம் வன்முறையினால் அதிகாரத்தைக் கைப்பற்றியதைப் போல பாட்டாளி வர்க்கம் புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றும் என்று மார்க்ஸ் விளக்கினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டுகளில் மார்க்சியம் ரஷ்யர்களைக் கவர்ந்ததற்குக் காரணம் இருந்தது. மார்க்ஸ் முதலாளித்துவ புரட்சியின் கடமைகளைக் கவனமாக ஆராய்ந்து எழுதினார். நிலப்பிரபுத்துவத்துடன் ஒப்பிடுகின்ற போது முதலாளித்துவம் வரலாற்று ரீதியில் முற்போக்கானது என்று எடுத்துரைத்தார். இதனால் நிலப்பிரபுத்துவம் என்பதனை அடியோடு ஒழித்தே தீர வேண்டுமென மார்க்ஸ் வாதிட்டார். இதுதான் ரஷ்யாவின் அறிவு ஜீவிகளைக் கவர்ந்திருந்தது. 1883இல் முதல் மார்க்ஸிய அமைப்பு தொழிலாளர் விடுதலைக் குழுவாகத் தான் ஆரம்பிக்கப்பட்டது. மார்க்சியம் எங்களின் தத்துவம் என்று வாய்விட்டுக் கூறக் கூடிய அரசியல் கட்சி அல்லது மக்கள் மத்தியில் அந்தத் தத்துவத்தைப் பரப்ப வேண்டும் என்று பாடுபடுகின்ற அரசியல் கட்சி ரஷ்யாவில் அதுவரை உருவாகவில்லை. அத்தகைய அரசியல் கட்சியை உருவாக்குவதற்கு லெனின் மிகவும் பாடுபட்டார். விவசாயிகளையும், தொழிலாளர்களையும் கண்டு உணர்ந்து போராட்டத்தை நடத்திச் செல்ல விவசாயிகளைவிடத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு கணிசமான முறையில் ஈடுகட்டும் என்பதையுணர்ந்து லெனின் செயல்பட்டதைப் போல தமிழகத்தில் “திராவிட நாடு" கோரிக்கையில் அண்ணா செயல்பட்டார்.

இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் காங்கிரசின் கையில் இருந்ததால் வட, தென் மாநிலங்களுக்குள் ஏற்றத் தாழ்வுகள் பெருகின. “வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்பது பரவலான பேச்சாகியது. பெரியார் இதனை எதிர்த்துக் கண்டனக் குரல் கொடுத்தார்.

தமிழ்நாடும் தமிழ் மொழியும் தமிழன் தன்மானமும் விடுதலை பெற்று வளர்ச்சியடைய வேண்டுமானால், தமிழன் காரியத்தில் தமிழனல்லாதவன், அவன் எப்படிப் பட்டவனானாலும் தலையிடுவது முதலில் ஒழிந்தாக வேண்டும். இதை வேறு எதை வைத்தாவது ஒழிக்க

வேண்டும் என்று கூறினார். வடநாட்டு மைய அரசு தமிழரல்லா அரசு, அவர்களின் மேலாண்மை இயல்பாகவே தமிழர்களை ஒடுக்கும் முகமாக அமைந்திருந்தது. இதனை எதிர்க்கும் முயற்சியில்தான் திராவிட மக்களுக்கென்ற தனிநாட்டுக் கோரிக்கை எடுத்து மொழியப்பட்டது. கிப்பன், இங்கர் சால் போன்றோரின் மொழி நடையால் கவரப்பட்டிருந்த அண்ணா தமிழ்சார் திராவிட நாடு சார் கருத்துக்களை மேனாட்டாரின் புலப்பாட்டு நெறிக் கோட்பாடுகளோடு இணைத்து வெளிப்படுத்தினார்.

"அமைய வேண்டியது தனி அரசு!
பெற வேண்டியது முழு உரிமை!
ஒழிக்கப்பட வேண்டியது வட நாட்டு ஏகாதிபத்தியம்!
விலக வேண்டியது டில்லிப் பேரரசின பிடியிலிருந்து!"[47]

என்ற வகையில் விடுதலையுணர்வை முன்னிட்ட அண்ணாவின் பேச்சுக்கள் இருந்தன. வடநாட்டிலிருந்து திராவிடர்கள் தங்களைப் பிரித்துக் கொள்வது தான் சரியான வழியென்ற முடிவை நோக்கிச் செயல்பாடுகளை நகர்த்தினார்.

"சில இளிச்சவாயர் கையில் எட்டுக்கோடிப் பேர்கள் திராவிடர்கள் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களைச் சிலர் டெல்லியிலிருந்து கட்டியாளுகிறார்கள். அவர்களிடமிருந்து விடுபட்டாக வேண்டும்"48 என்று ஈ.வி.கே. சம்பத், ஆர்.கே. சண்முகம் போன்றோர் முழங்கினர்.

திராவிட நாடு கோரிக்கை முன்வைக்க வேண்டுமானால் திராவிட நாட்டைப் பற்றிய சிறப்பை மக்கள் உணர வேண்டுமென்று எண்ணி அண்ணா திராவிட நாட்டின் பெருமைகளைத் தன் எழுத்துக்களின் மூலமும் பேச்சுக்களின் மூலமும் வெளிப்படுத்தினார். திராவிடர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள். நெருப்புப் பிழம்பாக இருந்த நிலவுருண்டை முதல் குளிர்ந்த பகுதி குமரிக் கண்டமாகும். அங்கு முதன் முதலில் உயிரினம் தோன்றியது என வரலாற்றறிஞர்கள் கூறுவதால் மனித நாகரீகம் முதன் முதலில் தோன்றிய இடமாகத் தென் பகுதியாகிய திராவிட நாடு கருதப்படுகின்றது.

".......எங்களுக்கென்று ஒரு தாயகம் அதற்குப் பழம் பெரும் நாகரீகம் இருந்தது. அதன் கொடி வானளாவப் பறந்தது. அதனுடைய நாவாய்கள் எத்திசையும் கடலில் செல்லும். அதனுடைய பட்டுப் பட்டாடைகள் ரோம் நாட்டிலே வாங்கி அணிந்து கொண்டார்கள். அவர்களுடைய முத்தை யவன நாட்டு மக்கள் விலை போட்டு வாங்கினார்கள் ......"[49] என்று அண்ணா படிக்காதவர்களும் புரிந்து கொள்ள ஏதுவான முறையில் திராவிட நாட்டின் சிறப்பைப் பேசுகின்றார்.

சீரும் சிறப்புமாய் வாழ்ந்த திராவிடம், இன்று வட நாட்டு மைய அரசின் வல்லாண்மையில் சிக்கிக் கிடக்கின்றது. அதுபோடும் பிச்சைச் சலுகைகளைப் பெறக் கையேந்தி நிற்கின்றது என்று முன்னாளைய பெருமைகளையும் இன்றைய இழி நிலைகளையும் ஒப்பிட்டுக் காட்டி நாட்டிற்கான விடுதலை உணர்வை வெளிப்படுத்தினார். "திண்ணையில் படுத்துக் கொண்டாவது திராவிட நாடு கேட்பேன்" என்ற கொள்கைப் பிடிப்போடு! அண்ணா செயல்பட்டார்.

இந்தியா என்பது பல நாடுகளை உள்ளடக்கிய ஒரு கண்டம் ஐரோப்பா 32 சுதந்திர நாடுகளை உட்கொண்ட ஒரு கண்டம். அதனுள் ஒற்றை அதிகார அரசால் ஒரு கண்டம் ஆளப்பட வேண்டுமென யாரும் நிர்ப்பந்திப்பதில்லை. அதைப் போலவே இந்தியாவும் ஒரே ஒரு அரசின் கீழ் அமைய வேண்டிய தேவையென்பதே இல்லை. ஆரியர்களின் வரவு இந்தியாவை ஒற்றை அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தது. ஆரியர்களைத் தவிர பிற இனங்களின் வளர்ச்சி அதிகாரத்தின் காலடிகளில் போட்டு மிதிக்கப்பட்டது. இதனால் ஆரியரல்லாத பிற இனங்கள் புரட்சியிலும், போராட்டத்திலும் ஈடுபடவேண்டிய தேவை இந்தியாவில் ஏற்பட்டது. அசோகர், கனிஷ்கர், சமுத்திர குப்தன் மற்றும் அக்பர் கால கட்டங்களிலெல்லாம் கூட இந்தியாவிற்கு இந்த வரலாறு இல்லை. இந்தியா பல நாடுகளாகப் பிரிக்கப்படுகின்ற வகையிலான பொருளாதார வளர்ச்சியைக் காணமுடியும். ஒரு நாடு மற்றொரு நாட்டின் வளமையைச் சுரண்டுவதைத் தடுத்து நிறுத்த முடியும். அதிகாரத்திற்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட இனத்திற்குக் கீழ் பிற இனமக்கள் அடங்கிக் கிடப்பதென்பது அச்சத்தைத் தருவதாகும். இதனை உணர்ந்தே பிரிட்டிஷார்கள் இந்தியாவை விட்டு நீங்கினால், அது ஒரு கொலை வெறிகளுக்குட்படும் நாடாக மாறும்" என்று அன்று சொன்னது போல இந்தியா என்ற ஒற்றை அதிகாரம் மற்ற இனங்களைச் சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருப்பதை இன்றும் காண முடிகின்றது.

அண்ணாவின் "திராவிட தேசியம்" என்ற கருத்தாக்கம் தோற்றுப் போனதாகக் கருதினால் காந்தியின் கொள்கைகளும், லெனினிய ஸ்டாலினியக் கருத்தாக்கங்களும் அதே விதியைத்தான் தழுவி யிருக்கின்றன என்ற முடிவுக்கு வரலாம். காந்தியின் அகிம்சைப் போராட்டத்தில் தாக்கமுற்று மார்டின் லூதர் கிங் அவர்கள் அதனை அமெரிக்காவின் விடுதலைக்கும், குடியரசு உரிமைப் போராட்டத்திற்கும் பயன்படுத்தி 1960 இல் கறுப்பின மக்களுக்கான வெற்றியைத் தேடினார். ஜப்பானில் சுதந்திரக் குடியரசுக் கருத்தாளர்கள் நிலவுடைமைச் சமுதாயத்தை எதிர்த்துப் போராடியதும் இந்த முறையில் தான். லெனினிய ஸ்டாலினிய கருத்தாக்கங்களில் தான் 1959இல் ஃபிடல் காஸ்ட்ரோ கியூபாவில் புரட்சியை உண்டாக்கினார். இதன்வழி

முறைகளில்தான் அண்ணா தமிழர்களுக்கான "தனிநாடு" என்ற கோரிக்கையை முன் வைத்தார். அது 1970களில் ஈழத்தில் சிங்களவர்களால் நசுக்கப்படும் தமிழர்களுக்கான விடுதலையைப் பேசுவதற்கு வசதியாக இருந்தது. அண்ணாதுரை எடுத்துச் செயல்பட்ட புரட்சி அதற்கேற்ற முறையில் உள்வாங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது ஈழத்தில்தான் என்றால் அது மிகையாகாது.

# அறிஞர் அண்ணாவின் படைப்புகள்

## கட்டுரைகள்

1. ரோமாபுரி ராணிகள் - 1942
2. புத்தர் புன்னகை - 1942
3. இந்து மதமும் தமிழரும் - 1942
4. களிமண்ணும் கையுமாக - 1943
5. பூ தேவர் புலம்பல் - 1943
6. பூதேவர் பிரதாபம் - 1943
7. ஊரார் உரையாடல் - 1943
8. கம்பரசம் - 1943
9. ஆரிய மாயை - 1943
10. வர்ணாசிரமம் ஒழிக - 1944
11. விடுதலைப் போர் (திராவிடர் கழகம்) - 1944
12. கட்சியில் கடவுள் மதம் - 1944
13. திராவிடரும் கடவுளரும் - 1944
14. கடவுள் விளக்கம் - 1944
15. நிக்கோலஸ் தீர்ப்பு - 1945
16. தேவலீலைகள் - 1945
17. அமெரிக்காவில் ஒரு பாரதிதாசன் - 1945
18. வில்லவன் கோதை விருந்து - 1945
19. சிவலோக வாசிகள் - 1945
20. பெரிய புராணப் புதையல் - 1945
21. வால்டேர் வீசிய வெடிகுண்டு - 1945
22. மாற்றானின் மல்லிகைத் தோட்டம் - 1945
23. புராணம் போதை தரும் லேகியம் - 1946
24. கமாமவேள் நடனசாலையில் கற்பூரக்கடை - 1946
25. எரியிட்டார் என் செய்தீர் - 1946
26. விதைக்காது விளையும் கழநி - 1946
27. சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் - 1946
28. பணத் தோட்டம் - 1946
29. இலட்சிய வரலாறு (மரணசாசனம்) - 1946
30. காண்டேர்கார் - 1946

31. பயங்கரப் பாதை - 1946
32. இயற்கை ஓர் அழகிய விதவை - 1947
33. 1858 – 1948 (விசித்ர வினா) - 1947
34. லேபிள் வேண்டாம் - 1947
35. இதுவா தமிழர் சமயம் - 1947
36. அக்ரகாரத்தில் ஓர் அதிசய மனிதர் - 1947
37. படமும் பாடமும் - 1947
38. ஏழைப் பங்காளன் எமிலிஜோலா - 1947
39. ஏழை எரிமலை - 1947
40. ஆகஸ்ட் பதினைந்து - 1947
41. இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் - 1947
42. பாரதி பாதை - 1947
43. எண்ணிப்பார் கோபியாமல் - 1947
44. ரயிலேறி இராமேஸ்வரம் போவதும் - 1947
45. உலகப் பெரியார் காந்தி - 1948
46. ஆதென்ஸ் நகரில் அன்றொரு நாள் - 1948
47. அறப்போர் - 1948
48. சர்க்கார் விடுமுறை நாட்கள் - 1948
49. சைவ வைணவ மத போதனை - 1948
50. சீனா சிவப்பாகிறது - 1948
51. படகாட்சிகளில் பரமன் - 1949
52. ஆதித்தன் கனவு படமல்ல – பாடம் - 1949
53. திருக்குறள் ஒரு திருப்பணி - 1949
54. செக்கோஸ்லோவாகியா - 1949
55. பெண்ணினம் பேசுகிறது - 1949
56. மூடநம்பிக்கை - 1949
57. வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம், விரட்டப்படுகிறோம் - 1949
58. மாஜிக் கடவுள்கள் - 1949
59. கடவுள் விஷயம் - 1949
60. இந்தியும் தமிழ் மகனும் - 1950
61. பிருந்தாவனம் முன்ஷி திட்டம் - 1950
62. இருளில் ஒளி - 1951
63. வாழ்க வசவாளர்கள் - 1952

64. தாயகமே! தாயே! - 1953
65. பொன்னொளி - 1953
66. மக்கள் தீர்ப்பு மகத்தான் பாடம் - 1954
67. நாட்டின் நாயகர்கள் - 1956
68. அரோகரா கோவிந்தா - 1956
69. படமும் பாடமும் - 1957
70. ஆயிரம் கோடி - 1960
71. அன்பின் பிணைப்பு
நாம் கண்ட இயக்கம் - 1960
72. எல்லோரும் இந்நாட்டு மன்னர் - 1960
73. அந்திக் கலம்பகம் - 1960
74. பூச்சுவேலை கடன்பட்டு - 1961
75. பைங்கிளிக்குப் பாலூட்டும் செந்தாமரையாள் - 1961
76. பூங்காவில் புலவர் - 1962
77. இருளகல - 1962
78. நண்பர்கள் கேட்பதற்கு - 1962
79. மழு ஏந்திய மங்கை - 1963
80. குடியாட்சி கோமான் - 1965
81. மொழியும் வாழ்க்கை வழியும் - 1966
82. கார்டுனாயானம் - 1967
83. அவன் கேட்பது வாழ்வு - 1967

**புதினங்கள்**

1. என்வாழ்வு (அ) வீங்கிய உதடு - 1940
2. கலிங்க ராணி - 1942
3. ரங்கோன் ராதா - 1943
4. பார்வதி - 1944
5. தசாவதாரம் - 1945

**நாடகங்கள்**

1. சந்திரோதயம் - 1943
2. சிவாஜி கண்ட இந்து இராச்சியம் - 1945
3. வேலைக்காரி - 1946
4. ஓர் இரவு - 1946

5. நீதி தேவன் மயக்கம் - 1947
6. நல்ல தம்பி - 1949
7. காதல் ஜோதி - 1950
8. சொர்க்க வாசல் - 1954
9. பாவையின பயணம் - 1956
10. கண்ணாயிரத்தின் உலகம் - 1966
11. ரொட்டித் துண்டு - 1967
12. இன்ப ஒளி - 1968

**குறும் புதினங்கள்**

1. கபோதிபுரத்துக் காதல் - 1939
2. கோமளத்தின் கோபம் - 1939
3. சிங்களச் சீமாட்டி - 1939
4. குமாஸ்தாவின் பெண் தான் - 1942
5. குமரிக் கோட்டம் - 1946
6. பிடி சாம்பல் - 1947
7. மக்கள் தீர்ப்பு - 1950
8. திருமலை கண்ட திவ்ய ஜோதி - 1952
9. தஞ்சை வீழ்ச்சி - 1953
10. பவழ பஷ்பம் - 1954
11. சந்திரோதயம் - 1955
12. அரசாண்ட ஆண்டி - 1955
13. மக்கள் கரமும் மன்னன் கரமும் - 1955
14. எட்டு நாட்கள் - 1955
15. புதிய பொலிவு - 1956
16. ஒளியூரில் ஓமகுண்டம் - 1956
17. கடைசிக் கனவு - 1957
18. இதயம் இரும்பானால் - 1960
19. இரத்தம் பொங்கிய இருபது ஆண்டுகள் - 1963
20. தழும்புகள் - 1965
21. வண்டிக்காரன் மகன் - 1966
22. இரும்பு முள்வேலி - 1966
23. அப்போதே சொன்னேன் - 1966

# துணைநூற் பட்டியல்


1. அறிஞர் அண்ணா – அண்ணாவின் சிறுகதைகள், முதல் பதிப்பு 1996
மணிவாசகர் பதிப்பகம்,
8/7 சிங்கர் தெரு, பாரி முனை,
சென்னை – 600 018.

2. பேரறிஞர் அண்ணா – பேரறிஞர் அண்ணாவின் கம்பரசம், 1995,
கண்ணம்மாள் பதிப்பகம்,
796,29 ஆவது தெரு,
பெரியார் நகர், கொரட்டூர்,
சென்னை – 600 008.

3. பேரறிஞர் அண்ணா, அண்ணாவின் சமுதாயப் புரட்சி, மே 1985,
அபிராமி பப்ளிகேஷன்ஸ்
307, லிங்கிச் செட்டி தெரு,
சென்னை – 600 001.

4. பேரறிஞர் அண்ணா - ஆரிய மாயை, முதல் பதிப்பு 1989.
பூம்புகார் பதிப்பகம்,
63 பிரகாசம் சாலை(பிராட்வே),
சென்னை – 600108.

5. சி.என். அண்ணாதுரை - இலக்கியச் சோலை, முதல் பதிப்பு 1988,
பூம்புகார் பதிப்பகம்,
63 பிரகாசம் சாலை(பிராட்வே),
சென்னை – 600108.

6. பேரறிஞர் அண்ணா – தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள், 2002
பூம்புகார் பதிப்பகம்,
63 பிரகாசம் சாலை(பிராட்வே),
சென்னை – 600108.

7. சி. என். அண்ணாதுரை – திரும்பிப் பார் (நாடகத் தொகுப்பு), 1989,
பூம்புகார் பதிப்பகம்,
63 பிரகாசம் சாலை(பிராட்வே),
சென்னை – 600108.

8. சி. என். அண்ணாதுரை – பாரதம், 1989,
பூம்புகார் பதிப்பகம்,
63 பிரகாசம் சாலை(பிராட்வே),
சென்னை – 600108.

9. சி. என். அண்ணாதுரை – மக்கள் தீர்ப்பு, 1996,
பூம்புகார் பதிப்பகம்,
63 பிரகாசம் சாலை(பிராட்வே),
சென்னை – 600108.

10. பேரறிஞர் அண்ணா – வேலைக்காரி, 1998,
மணிவாசகர் பதிப்பகம்,
8/7 சிங்கர் தெரு,
பாரி முனை,
சென்னை – 600 018.

11. பேரறிஞர் அண்ணா – யார் கேட்க முடியும்?
பூம்புகார் பதிப்பகம்,
63 பிரகாசம் சாலை(பிராட்வே),
சென்னை – 600108.

12. இராமலிங்க வள்ளலார் – திருவருட்பா
கலைஞன் பதிப்பகம்

13. ஔவை நடராசன் - அண்ணா, 1986,
திருமகள் நிலையம்,
55 வெங்கட் நாராயணா ரோடு, தி.நகர்,
சென்னை – 600 017.

14. மு. கோவிந்தராசன் - அண்ணா இதழாசிரியர், 1997
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர்,
சென்னை – 600 004.

15. பதிப்பாசிரியர்கள்
சரசுவதி வேணுகோபால்
து. சேது பாண்டியன்
மு. மணிவேல்
தொ. மனோண்மணி , ஆய்வு நோக்கில் அண்ணா,
திசம்பர் 1996, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 21.

16. நா. தர்மராஜன்(தமிழில்) - லெனினும் ரஷ்யப் புரட்சியும் , டிசம்பர் 2006,
அலைகள் வெளியீட்டகம்,
25, தெற்குச் சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

17. அ. லெ. நடராஜன் - ஏழைகளின் தோழன் லெனின்,
வ.உ.சி. நூலகம்,
ஜி – 1, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை,
சென்னை – 14.

18. மோ. பாட்ட பூகன் (தொகுப்பாளர்) - பேரறிஞர் அண்ணா எழுதிய வரலாற்று ஓவியங்கள் - 1, 2001,
மீனா கோபால் பதிப்பகம்,
மனை எண் - 9, கதவு எண் - 26,
ஜோசப் காலனி, ஆதம்பாக்கம்,
சென்னை – 600 088.

19. ந. முடிகோபதி, சட்டமன்றத்தில் அண்ணா, மார்ச் 1998,
மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை – 600 108.

20. தொகுப்பாசிரியர் முத்தமிழ்க்கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் பேரறிஞர் அண்ணா வளர்த்த தமிழ்(பேரறிஞர் அண்ணாவின் கட்டுரைகள்), 2004,
மீனா கோபால் பதிப்பகம்,
மனை எண் - 9, கதவு எண் - 26,
சோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம்,
சென்னை – 600 088.

21. டாக்டர் கு. விவேகானந்தன் - அண்ணாயியம் (தம்பிக்கு கடிதங்கள் - பிஎச்டி ஆய்வுரை), 1984.
பத்மா பதிப்பகம்,
10, லோகநாதன் நகர்,
2 ம் தெரு, சூளைமேடு,
சென்னை – 600 094.

22. ஏ.எஸ். வேணு, இலெனினும் - அண்ணாவும், செப்டம்பர் 1987,
அப்பல்லோ வெளியீடு
29, திலக் தெரு, தியாகராயர் நகர்,
சென்னை – 600 017.

## அடிக்குறிப்புகள்


1. (தொ.ஆ) முத்தமிழ்க் கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் - பேரறிஞர் அண்ணா வளர்த்த தமிழ்(பேரறிஞர் அண்ணாவின் கட்டுரைகள்),2004.
2. மேலது
3. மேலது
4. பேரறிஞர் அண்ணா – தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்,2002.
5. மேலது
6. பேரறிஞர் டாக்டர் சி.என். அண்ணாதுரை – மக்கள் தீர்ப்பு,1996.
7. பேரறிஞர் அண்ணா – தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்,2002.
8. மேலது
9. டாக்டர் கு. விவேகானந்தன் - அண்ணாயியம்,1984.
10. மேலது
11. பேரறிஞர் அண்ணா – தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்,2002.
12. மேலது
13. மேலது
14. மேலது
15. மேலது
16. டாக்டர் கு. விவேகானந்தன் - அண்ணாயியம், 1984.
17. மேலது
18. முத்தமிழ் கவிஞர் ஆலத்தூர் கோ. மோகனரங்கன் - பேரறிஞர் அண்ணா வளர்த்த தமிழ்(அண்ணாவின் கட்டுரைகள்), 2004.
19. மேலது
20. மேலது
21. மேலது
22. பேரறிஞர் டாக்டர் சி.என். அண்ணாதுரை – பாரதம், 1989.
23. மேலது
24. மேலது

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
### சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை | 60.00 |
| நீறணி பவளக் குன்றம் | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று | 170.00 |
| தமிழ் நாடக மொழியும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு. என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |

---

**715 அண்ணா ஒரு சமூகக் குறியீடு** **40.00**